★ REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 5 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 210 | Tuesday 05, September, 2023 | 16 பக்கங்கள் | 50/-







**மேல் மாகாணத்தில் ஈடுபடுத்தப்படவுள்ள 200 பஸ்கள்;**

## மின்சார பஸ்களை கொள்வனவு செய்ய முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு

**அமைச்சர் பந்துல குணவர்தன**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக மின்சாரத்தில் இயங்கும் 200 பஸ்களைக் கொள்வனவு செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். 2030ஆம் ஆண்டுக்குள் உலகிலுள்ள அனைத்து பொதுப் போக்குவரத்துகளும் புதைபடிவ எரிபொருட்களின் (Fossil fuels) பாவனையிலிருந்து விடுபடுவது தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் படி இந்த வேலைத்திட்டம்

06

## தமக்கு ஏற்பட்ட அபகீர்த்திக்கு நட்டஈடாக 30 மில்லியன் ரூபா பெற்றுத் தர வேண்டும்

**புலனாய்வு அதிகாரி சுரேஷ் சலே நீதிமன்றத்திடம் வேண்டுகோள்**

லோரன்ஸ் செல்வநாயகம்

சூம் தொழில்நுட்பம் ஊடாக ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் நடத்தப்பட்ட கூட்டத்தின் போது அருட்தந்தை சிறில் காமினி அடிகளார் முன்வைத்த கூற்று தமக்கு மட்டுமன்றி தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என அரச புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரியான சுரேஷ் சலே கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று சாட்சியமளித்துள்ளார்.

அருட்தந்தை சிறில் காமினி அடிகளார் அதன் போது முன்வைத்த கூற்றானது தனது

06

## 2022 ஆம் ஆண்டிற்கான A/L பெறுபேறுகள் வெளியாகின

**பரீட்சை திணைக்கள இணையத்தில் பார்வையிடலாம்**

லோரன்ஸ் செல்வநாயகம்

2022 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராத உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.

மாணவர்கள் தமது சுட்டெண்ணை உள்ளீடு செய்து பரீட்சை திணைக்களத்தின் doenets.lk / exam results என்ற

06




**சட்ட விரோத "பிரமிட்" முறை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட**

# "ஒன் மெக்ஸ் டீ.ரி" நிறுவன பணிப்பாளருக்கு தடையுத்தரவு



**சொத்துக்களை விற்க, அன்பளிப்பு செய்ய முடியாது என நீதிமன்று அறிவிப்பு**

**மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கடவத்தை பகுதிகளிலுள்ள 63 கோடி ரூபா சொத்துக்களை எதுவுமே செய்யமுடியாதவாறு நீதிமன்று தடையுத்தரவு பிறப்பிப்பு**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சட்ட விரோத பிரமிட் முறை கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டதாகக் கூறப்படும் ஒன் மெக்ஸ் டீ.டி தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரான சம்பத் சதருவன் என்பவருக்கு சொந்தமான 63 கோடிக்கும் அதிகமான பெறுமதியுடைய மாடி வீடு மற்றும் ஹோட்டல் உள்ளிட்ட சொத்துக்களை கையளித்தல், விற்பனை செய்தல் மற்றும் அன்பளிப்பச் செய்தலை தடை செய்து கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் பிரசன்ன அல்விஸ் காணி பதிவு திணைக்களத்திற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை, கடவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த

06

**ரஷ்ய மத்திய நிலையத்தினால்**

## ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்திற்கு நூல்கள்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பிலுள்ள ரஷ்ய மத்திய நிலையம் ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தின் நூலகத்திற்கு ஒரு தொகை நூல்களை அன்பளிப்பு செய்துள்ளது.

06




03


**கொழும்பு பங்கு சந்தையின் மொத்த புரள்வு 3.3 பில்.**

நேற்று 11,374.64 புள்ளிகள் பதிவு

**புனித குர்ஆன் குறித்து போலி அறிக்கை;**

## ஞானசார தேரர் உட்பட எழுவர் மீதான வழக்கு 11 இல்.

**வழக்கை மீள அழைக்க நீதிமன்றம் உத்தரவு**



புனித குர்ஆன் குறித்த போலி அறிக்கையை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கை

06

**சீரற்ற காலநிலை சில தினங்கள் தொடரும்;**

## சில மாவட்டங்களில் கடும் மழையுடன் காற்று

**கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை**

லோரன்ஸ் செல்வநாயகம்



தென்மேல் பருவ பயிர்ச்சி காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நிலவும் கடும் மழையுடன் கூடிய

06

## "பேஸ்புக்" மூலம் ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல் விட்ட நபர்

**எப்பாவல இளைஞர் CID யினரால் கைது**

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர் ஒருவர் சிஐ டி யினரால் கைது செய்யப்பட்டுள்ளார். எப்பாவல, மெதியாவ பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக குற்ற விசாரணை

06

**இலங்கையில் பொருளாதார நெருக்கடியான**

## கடினமான காலத்தில் அண்டை நாட்டுக்கு உதவியதில் திருப்தி

**PTI நேர்காணலில் பிரதமர் மோடி**



இலங்கை எதிர்கொண்ட கடினமான காலங்களில், அந்த நாட்டின் தேவைகளை இந்தியா மிகவும் உணர்ந்து செயற்பட்டதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்திய செய்தி நிறுவனமான பி.டி.ஐக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை

06

## ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 72ஆவது தேசிய மாநாடு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72 ஆவது தேசிய மாநாடு கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் (03) நடைபெற்றது. இதில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

**நாட்டை விட்டு தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ள**

## 148 பாரிய பாதாள உலக குற்றவாளிக்கு வலை வீச்சு

**"இன்டர்போல்" பொலிஸ் சிவப்பு அறிவிப்பு**

கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களைச் செய்து நாட்டை விட்டு தப்பிச் சென்ற 148 பாரிய பாதாள உலகக் குற்றவாளிகளைக் கைது செய்ய இன்டர்போல் சிவப்பு அறிவித்தலை விடுத்துள்ளதாக திறந்த மற்றும் பொறுப்புமிக்க அரச துறைசார் கண்காணிப்புக்கான பாராளுமன்றக் குழுவில் குற்றவியல் மற்றும் சட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்

06




## லிட்ரோ Gas சிலிண்டர்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பு



**12. 5 கிலோ சிலிண்டர் ரூ. 145ஆல் அதிகரிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலைகள் நேற்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார். அதற்கிணங்க

06



03

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு;

**முக்கிய தகவல்களை வெளியிட உள்ளதாக "சனல் 04" தகவல்**

**இலங்கையை பார்த்த நிலையில்**

## இராமேஸ்வரம் பகுதியில் 108 அடி உயர ஆஞ்சநேயர் சிலை

**இந்திய ரூபா 100 கோடியில் அமைகிறது**



தமிழகம் இராமேஸ்வரம் பகுதியில் 100 கோடி இந்திய ரூபாய் செலவில் இலங்கையை பார்த்தபடி 108 அடியில் பிரமாண்ட ஆஞ்சநேயர் சிலையொன்று அமைக்கப்படவுள்ளது. குறித்த சிலை

06

**யாழ். வைத்தியசாலையில் அதிர்ச்சி சம்பவம்;**

## மருத்துவ தவறால் இடது கையை இழந்த எட்டு வயது சிறுமி?

**காய்ச்சலுக்கு காட்டச்சென்றபோது நிகழ்ந்த சோகம்**




**உண்மை நிலையை கண்டறிய மூவரடங்கிய விசாரணை குழுவும் நியமிப்பு**

(யாழ். விசேட நிருபர்,)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட எட்டு வயது சிறுமி

06



## A/L பரீட்சையை ஒத்திவையுங்கள்

**எதிர்க்கட்சித்தலைவர் வலியுறுத்து**



எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சித்

06

**நம்பிக்கையில்லா பிரேரணையின் போது**

## சுகாதார அமைச்சருக்கு ஆதரவு வழங்குவதா?

**TNA இன்று கூடி முடிவெடுக்கும்**



சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப்

06


91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



## போதை மாத்திரைகளுடன் சட்டத்தரணி கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மதவாச்சியில் பெருமளவிலான போதை மாத்திரைகளுடன் சட்டத்தரணி ஒருவரை கடந்த (31) பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வைத்தியரின் சிபாரிசின்றி சட்டத்தரணி இரண்டு வகையிலான 76 பெட்டி மாத்திரைகளை கொண்டு சென்றுள்ளார்.

பூநேவ பண்டுகஹய கடற்படை முகாமின் உளவுத்துறை அதிகாரிகள் குழுவினர் அநுராதபுரம் மாவட்ட உணவு மற்றும் மருந்து பரிசோதனை அதிகாரிகளும் இணைந்து குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## எதிர்வரும் 25ஆம் திகதிக்குள்
# நாடு பூராவும் கிளைகளை ஆரம்பிக்கவுள்ள சினோபெக்

சீன எரிபொருள் நிறுவனமான ‘சினோபெக்’ எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் நாடு பூராகவும் தமது கிளைகளை நிறுவவுள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சினோபெக் நிறுவனம் தமது முதலாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஆரம்பித்துள்ளது. நாடு பூராகவும் 150 நிலையங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



12 இடங்களைத் தவிர ஏனைய நிலையங்களின் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆஸ்திரேலிய யுனைடட் பெற்றோலிய நிறுவனமும் இவ்வருடத்துக்குள் தமது சேவையை நாட்டில் ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சாய் சரணாலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி



கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின் மேல்மாடியில் அமைந்துள்ள சீரடி சாய் நாத சரணாலயத்தில் நாளை புதன்கிழமை (06) மாலை 4:00 – 06:00 மணிவரை கிருஷ்ண ஜெயந்தி நடைபெறவுள்ளது.

மாலை 4:00 மணிக்கு சிறுவர் சிறுமிகள் பங்கேற்கும் சிறப்பு நிகழ்வாக கிருஷ்ணனின் பலவித உருவப்படங்களுக்கு நிறந்தீட்டல், வினாவிடை போட்டி, கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மாலை 5:00 மணிக்கு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்திலிருந்து பால கிருஷ்ணனை மேளதாளத்துடன் ஊர்வலமாக சாய் சரணாலயத்திற்கு சிறுவர்கள் அழைத்து வருவார்கள். தொடர்ந்து வரும் தொட்டிலிடல், தாலாட்டு பாடல் நிகழ்வில் பக்த அடியார்கள் எல்லோரும் கலந்துகொள்ளலாம்.

மாலை 5:15, 5:30 வரை கிருஷ்ண பகவானுக்கு துளசி அர்ச்சனையும் (பக்த அடியார்கள் தங்கள் கரங்களினால் கிருஷ்ண பகவானை அர்ச்சனை செய்யலாம்). கிருஷ்ணாவுக்கு பிடித்த பிரசாதம் லட்டு, வெண்ணெய், முறுக்கு, சீடை போன்ற பிரசாதம் நைவேத்தியமும் செய்யப்படும். தொடர்ந்து 5:30 – 6:00 மணிவரை பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான உரியடித்தலில் சிறுவர், சிறுமிகள் பங்குபெறுவர். இறுதியாக 6:00 – 6:30 வழமையான சீரடி சாயி மாலை ஆரத்தியுடன் லட்டு பிரசாதம் வழங்கப்படும்.

# அநுராதபுரம், மாத்தளை மாவட்டங்களில் நான்கு வருடகால சுற்றுலாத்துறை திட்டம்

## விபரங்கள் வெளியீடு; அவுஸ்திரேலியா தூதுவர் பங்கேற்பு

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் சுற்றுலாத்துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் திறன் மேம்பாட்டிற்கான நான்கு வருட செயற்திட்டத்தின் வெளியீட்டு நிகழ்ச்சி அநுராதபுரம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் (01) இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பால் ஸ்டெப்லென்ஸ் கலந்து கொண்டார்.

அநுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் சுற்றுலாத் துறை தொடர்பான திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் அபிவிருத்திக்கான திறன் அபிவிருத்தி எனும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சுற்றுலாத்துறை மற்றும் அது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களின் திறனை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

சுற்றுலாத்துறையை நிலையான முறையில் மேம்படுத்துதல்,

இணையம் மூலம் தயாரிப்புக்களை சந்தைப்படுத்துதல், சுய தொழில் வாய்ப்புக்கள், தொழில் முனைவோர் பயிற்சி, தொழில் மன்றங்களை நிறுவுதல் போன்றவை இத்திட்டத்தின் மூலம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலாத்துறைக்கு பங்களிக்கும் வகையில், தொழில் முனைவோர் உட்பட, சுற்றுலாத்துறை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பணியும் இத்திட்டத்தின் கீழ் இடம் பெற்று வருகின்றமை விசேட அம்சமாகும்.






157 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மத வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் புத்தளம் பெரிய பள்ளிவாசலிலும் விசேட துஆ பிரார்த்தனைகள் (03) நடைபெற்றன. இந்த நிகழ்வில் புத்தளம் பொலிஸ் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. ரூபசிங்க மற்றும் புத்தளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என். குலதுங்க ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
(படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

## கட்டுக்கெலியாவ மஹ்றூதிய்யாவின் எதிர்கால வளர்ச்சி தொடர்பில் சந்திப்பு



கெக்கிராவ குறூப் நிருபர்

### இஷாக் ரஹ்மான் எம்.பி மற்றும் அல்ஹிமா பணிப்பாளர் உதவ முன்வருகை

கனதரா கட்டுக்கெலியாவ மஹ்றூதிய்யா அரபுக்கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பில் கல்லூரியின் நிருவாகத்திற்கும் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் மற்றும் அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்புடனான கலந்துரையாடல் சனிக்கிழமை (09) கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின்போது கல்லூரியின் பௌதீகவள குறைபாடுகளை நிவர்த்திசெய்வது தொடர்பில் பிரதானமாக கலந்துரையாடப்பட்டது. இக்கல்லூரிக்கு இலங்கைக்கான குவைத் தூதுவர் கலாப் எம். புதைர் அவர்களின் உதவியுடன் நிதியினை பெற்று கல்லூரியின் நடவடிக்கைகளுக்கான ஒரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான முயற்சிகளை செய்வதாக அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லா (நளீமி) இதன்போது தெரிவித்தார்.

# 'தௌஹீத் பிரசாரப்பணி தோற்றமும் வீழ்ச்சியும்' நூல் வெளியீட்டு விழா





திக்குவெல்லை மௌலானா மௌலவி செய்யது இஸ்மாயில் இமாம் எழுதிய இலங்கையில் 'தௌஹீத் பிரசாரப்பணி தோற்றமும் வீழ்ச்சியும்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் திக்குவெல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

தென் மாகாண தமிழ் மொழி பாடசாலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஹமீத் அல் ஹுஸைனியா அதிபர் எம். ரீ.எம். ரிஸ்கி வரவேற்புரை நிகழ்த்தியதோடு மௌலவி எம். எஸ்.எம்.பாயிஸ் (இஸ்பஹானி), ஓய்வு பெற்ற முன்னாள் தென் மாகாண பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.எம். மொஹமட் மற்றும் ஓய்வுபெற்ற முன்னாள் தேர்தல் அதிகாரி எம்.ஆர்.எம். நிஸ்தார் ஆகியோர் கருத்துரையாற்றினர். யோனகபுர ஹம்ஸாவின் கவி வாழ்த்தும் இடம்பெற்ற அதேவேளை நூல் ஆய்வுரையை மௌலானா மௌலவி ஜெ. அப்துல் மஜீத் பாகவீ (பிரதம கதீப், நாகோர் மஸ்ஜித், மலேசியா) நிகழ்த்தினார். சிறப்புரையை திக்குவெல்லை கமால் நிகழ்த்தினார். இந்த நிகழ்வின் போது மௌலானா மௌலவி செய்யது இஸ்மாயில் இமாம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

## முஸ்லிம் லீக் வாலிப முன்னணி விசேட கூட்டம் பேருவளையில்



பேருவளை விசேட நிருபர்

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன விசேட கூட்டம் பேருவளை அம்பேபிட்டிய பாஹிம் ஹனீபாவின் இல்லத்தில் அண்மையில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் எம்.எம்.எம் ஜவ்பர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜாமியா நளீமியா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி) விசேட பேச்சாளராகவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் விஷேட அதிதியாகவும் கலந்து சிறப்பித்தனர். களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகள் முஸ்லிம் கிராமங்களில் நிலவும் முக்கிய குறைபாடுகள் தொடர்பில் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன. அம்பேபிட்டிய பாக்கியதுஸ் ஸாலிஹாத் பள்ளிவாசல் வளவில் நடுவதற்கு மாமரக் கன்றுகளும் இதன் போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மத்துகம மாணவர்களின் நலன்கருதி 'ஜயனத' புலமைப்பரிசில் கருத்தரங்கு







(பாணந்துறை மத்திய குரூப் நிருபர்)

மத்துகம கல்வி வலய '2023 ஜயனத' புலமைப்பரிசில் கருத்தரங்குகள் மத்துகம கல்வி வலயத்தின் ஏற்பாட்டில், மத்துகம கல்வி வலய ஆரம்பப் பிரிவுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜீ.ஜீ.டீ.ஸீ. குமாரி வழிகாட்டலில் வலயத்திலுள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் தரம் 5 மாணவர்களின் அடைவுமட்டத்தினை அதிகரிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மத்துகம கல்வி வலய அனைத்து தமிழ்மொழிமூல மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெறச்செய்வதும், வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறும் மாணவர் சதவீதத்தினை அதிகரிப்பதுமே இச்செயலமர்வுகளின் நோக்கமாகும்" என கருத்தரங்குகளை முன்னெடுத்துவரும் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் ஏ.ஸீ. எம். றிப்கான் தெரிவித்தார். தொடர்ந்தும் வலயத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கில் நாளைய தினம் 6ஆம் திகதி புதன்கிழமை கலைமகள் தேசிய பாடசாலையில் 'ஜயனத' புலமைப்பரிசில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. அப்பாடசாலை மாணவர்களுடன், அம்பேதன்ன, மத்தேகெதர, பள்ளேகொட மற்றும் அன்னாசிகல தமிழ் வித்தியாலய மாணவர்களும் பங்குபற்றவுள்ளதாக அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் மேலும் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 5 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## நாட்டில் டெங்கு நோய் பரவல் தீவிரமாகிறது

### இந்த வருடம் 62,029 பேர் பாதிப்பு



நாட்டில் நிலவிவரும் மழையுடனான வானிலை காரணமாக தற்போது டெங்கு நோய் பரவல் தீவிரமடைந்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில்

06

## 50,000 பட்டதாரிகள் அரச சேவையில் இணைந்தாலும் பிரதிபலன் கிடையாது

### கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வருடாந்தம் சுமார் 50,000 பட்டதாரிகள் அரசாங்க சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டாலும் எதிர்பார்த்த பிரதிபலன் கிடையாது என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்க பல்கலைக்கழகங்களில் வருடாந்தம் அனுமதி பெறும் 40,000 மாணவர்களில் சில துறைகள் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் வேலையில்லாப் பட்டதாரிகளாகவே சமூகத்தில் காணப்படுவதாக கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

வேலையில்லாத பட்டதாரிகள் 40,000 க்கும் 50,000க்கும் இடைப்பட்டோர் வருடாந்தம் அரசு சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட போதும் அந்த சேவையின் பலன்கள் தொடர்பில் சிக்கல்களே காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கல்வித்துறையில் பிரதிபலன்களை அதிகரித்துக் கொள்ள

06

## மழை நீரை உபயோகப்படுத்தி பெரும்போக பயிர்ச்செய்கையை முன்னெடுக்க தயாராகவும்

### விவசாயிகளுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பெரும்போக நெற்பயிர்ச் செய்கையை முழுமையாக முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதற்கான முன்னோடி நடவடிக்கைகளுக்கு தற்போதுள்ள நீரைப் பயன்படுத்தி மேற்கொள்ளுமாறும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாயிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் தற்போது மழை வீழ்ச்சி காணப்படுவதால் மழை நீரை உபயோகப் படுத்தி பெரும் போகத்துக்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும்அவர்விவசாயிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இப்போதே அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் நீர் நிலைகளிலுள்ள தண்ணீரை மீதப்படுத்தி பெரும்போக பயிர்ச்செய்கையை வெற்றிகரமானதாக முன்னெடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த விடயம் தொடர்பில் விவசாய அதிகாரிகளுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன் விவசாயிகளுக்கும் அதனைத் தெளிவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை

06

## கொழும்பு பங்கு சந்தையின் மொத்த புரள்வு 3.3 பில்.

### நேற்று 11,374.64 புள்ளிகள் பதிவு

கொழும்பு பங்கு சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலை சுட்டெண் நேற்று (04) 11,374.64 புள்ளிகளுடன் நிறைவடைந்துள்ளது.

அதனடிப்படையில் நேற்றைய நாளுக்கான அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் முந்தைய விலைச் சுட்டெணை விட 218.22 ஆல் அதிகரித்துள்ளது.

மேலும், நேற்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின்




மொத்த புரள்வு 3.3 பில்லியன்களாக பதிவாகி உள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

விரும்பியோ விரும்பாமலோ அரசாங்கம்

## அடுத்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த நேரிடும்

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எம்.பி. தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ அரசாங்கம் அடுத்த வருடத்தில் கண்டிப்பாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த நேரிடும் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டு நவம்பர் மாதத்தில் புதிய ஜனாதிபதி சத்தியப் பிரமாணம் செய்வார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகியன ஒத்திப்போடப்பட்டுள்ள நிலையில் எந்த வகையிலும்

06

2019 ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவத்துடன் தொடர்பு;

## முக்கிய தகவல்களை வெளியிட உள்ளதாக "சனல் 04" தகவல்

### சர்வதேச ஊடகங்களில் பரபரப்புச்செய்தி

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் பல முக்கிய தகவல்களை வெளியிடுவதற்கு பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் செனல் 04 (CHANNEL 04) ஊடகம் தயாராக இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, இன்றைய தினம் இந்த தகவல்கள் ஒளிபரப்பப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

06



## குறும்படப் பிரதியாக்கப் போட்டி முடிவுகள் வெளியாகின

வளர்ந்து வரும் இளம் கலைஞர்களின் திறமை மேம்பாட்டுக்காக புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடத்திவரும் கலை, கலாசாரப் போட்டித்தொடரான “எவோட்ஸ் 2023” நிகழ்ச்சிக்கான குறும்படப் பிரதியாக்கப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

இப்போட்டியில் யாழ். கொடிகாமத்தைச் சேர்ந்த நடராஜா கண்ணதாஸம் முதலாம் இடத்தையும் மட்டக்களப்பைச் சேர்ந்த சோமசுந்தரம் சபினா இரண்டாம் இடத்தையும் கொழும்பைச் சேர்ந்த கணேசலிங்கம் ரித்தியன் மூன்றாம் இடத்தையும் பெறுகின்றனர்.

இவ்வாண்டுக்கான இறுதிப்போட்டி நேரடிப் போட்டியாக வரும் நவம்பர் மாதம் முதல்வாரத்தில் நடத்தப்படும். இதில் கட்டுரை மற்றும் குறும்படப் பிரதியாக்கப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பணப்பரிசும் சான்றிதழும் வழங்கப்படும். வெற்றிபெற்ற சகலருக்குமான விருதுகள் எதிர்வரும் 30.01.2024 விருது விழாவில் வழங்கப்படும்.





தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 19

### குறள் தரும் சிந்தனை



கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு

*உயிரைக் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது நோன்பு. பிறர் செய்யும் தீமையைச் சுட்டிக் சொல்லாத பண்பைக் குறிப்பது சால்பு.*

## மழை தொடங்கியதும் டெங்குநோய் மீண்டும் தலைதூக்கும் அச்சுறுத்தல்!

நாட்டில் நிலவி வந்த கடும் வரட்சிக் கால நிலையை முடிவுக்கு கொண்டு வந்திருக்கின்றது தற்போதைய மழைக் காலநிலை. கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக தலைநகரின் தாழ்நிலங்கள் உட்பட மேல்மாகாணம் அடங்கலாக நாட்டின் பல பிரதேசங்களிலும் காணப்படும் தாழ்நிலங்களிலும் மழைநீர் நிரம்பியுள்ளது.

இந்நிலையில் வழமை போன்று மழையுடன் சேர்த்து நாட்டில் தலைதூக்கக்கூடிய டெங்கு வைரஸ் நோய் மீண்டும் தீவிரமடையக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. இதனை சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே நாட்டில் நிலவிய வரட்சி காலநிலையால் பல பிரதேசங்களிலும் டெங்கு நுளம்புகளின் தாக்கம் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. ஆனாலும் மழைக் காலநிலையுடன் சேர்த்து மீண்டும் தீவிரமடையக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் சுகாதாரத்துறையினர் கூடுதல் கவனம் செலுத்தியுள்ள இதேவேளையில், டெங்கு வைரஸ் குறித்த முன்னெச்சரிக்கையுடனும் அவதானத்துடனும் செயற்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

டெங்கானது நுளம்புகளால் காவிப்பரப்படும் ஒரு வைரஸ். இவ் வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகள் மழைநீர் தேங்கும் இடங்களில் பல்கிப் பெருகும் பண்பைக் கொண்டுள்ளன. அதாவது தெளிந்த தண்ணீர் சிறிதளவு தேங்கி இருக்கும் இடங்களில் கூட முட்டையிட்டு பல்கிப் பெருக்கக்கூடியதே இவ்வின நுளம்புகள்.

அதனால் வீடுகளிலும் சுற்றுச்சூழலிலும் மாத்திரமல்லாமல் பொதுஇடங்களிலும் முறையாக அகற்றப்படாது தேங்கிக் கிடக்கும் தண்ணீர் தேங்கக்கூடிய திண்ம கழிவுப் பொருட்களில் மழைநீர் தேங்குவது டெங்கு நுளம்பு பெருக வாய்ப்பாக அமைகின்றது. அதற்கு கைவிடப்பட்ட சிரட்டைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், மட்பாண்ட பொருட்கள், பொலித்தீன் மற்றும் பொலித்தீன் உறைகள் ஆகியன அதற்கு துணைபுரியக் கூடியனவாக விளங்குகின்றன. இவற்றில் மழைநீர் தேங்குவதானது டெங்கு வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகள் பல்கிப் பெருகவே வழிவகுக்கும்.

அதனால் தற்போதைய மழைக்காலநிலையில் மழைநீர் உட்பட தெளிந்த நீர் தேங்க முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக சுற்றாடலில் தேங்கிக் காணப்படும் தெளிந்தநீர் தேங்கக்கூடிய திண்மக் கழிவுப் பொருட்களை முறையாக அகற்றுவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தேவைப்படும் பட்சத்தில் கிராம மட்டத்தில் நுளம்பு ஒழிப்புக்கான சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தைக் குறைத்துக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். அதன் ஊடாக டெங்கு வைரஸ் தாக்கத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

அதேவேளை தற்போதைய சூழலில் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் இரண்டொரு நாட்களுக்கு மேல் நீடிக்குமாயின் தாமதமின்றி தகுதியான மருத்துவரை அணுகி மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். இந்நோயை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் கண்டு உரிய சிகிச்சை பெற்றுக்கொள்வது இன்றியமையாததாகும். அதன் மூலம் இந்நோயை முழுமையாக குணப்படுத்திக் கொள்ளலாம்.

இதைவிடுத்து காய்ச்சல் அறிகுறி வெளிப்பட்ட போதிலும் கவனயீனமாகவும் அசிரத்தையோடும் நடந்து கொண்டால் இந்நோய் தீவிரநிலையை அடைந்து உயிராபத்து அச்சுறுத்தலைக் கூட ஏற்படுத்தி விடலாம். அப்படி இருந்தும் கூட இந்நோய்க்கு வருடா வருடம் குறிப்பிடத்தக்களவிலானோர் உள்ளாகவே செய்கின்றனர். அவர்களில் சிலர் உயிரிழக்கின்றனர். அந்த வகையில் இவ்வருடத்தின் ஜனவரி முதல் செப்டம்பர் வரையும் சுமார் 62 ஆயிரம் பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்திருந்தால் இவ்வளவு தொகையானோர் இந்நோயினால் பாதிக்கப்பட வேண்டிய நிலை ஏற்படப் போவதில்லை. அதனால்தான் இந்நோயை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு நுளம்பின் பெருக்கத்திற்கான வாய்ப்புக்களை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. அதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. அந்த ஒத்துழைப்பும் ஆதரவும் இன்றி டெங்கு நுளம்பின் பெருக்கத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தவே முடியாது.

ஆகவே இப்போதைய மழைக்காலநிலையைக் கருத்தில் கொண்டு நுளம்பு பெருக முடியாதபடி சுற்றாடலை சுத்தமாகவும் உலர்நிலையிலும் வைத்துக் கொள்வது ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும். அது டெங்கு வைரஸின் தாக்கத்தைக் குறைத்து கட்டுப்படுத்த உதவக்கூடியதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் மாணவரை ஆக்கிரமித்துள்ள ரியூஷன் வகுப்புகள்!

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் ரியூஷன் கல்வி தீவிரமாக வளர்ச்சியடைந்துள்ளது. தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களுக்கு வழங்கும் சேவைகள் தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதில்லை என்ற குறைபாடு நீண்ட காலமாக பெற்றோர் மத்தியிலுள்ளது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.முகம்மட் அன்ஸார் பிரத்தியேக வகுப்புக்கள் தொடர்பில் நல்ல தீர்மானங்களை நிறைவேற்றி மக்களுக்கு அறிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து, அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள். கல்வியியலாளர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து முக்கிய பல தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கது.



சில தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளேனும் இல்லை. பதிவுக் கட்டணம், மணித்தியாலக் கட்டணம், மாதாந்தக் கட்டணம், ரியுட் கட்டணம் என்பவற்றுக்கு தற்போது அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் தனியார் கல்வி நிலையங்கள், மாணவர்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவதில்லையென பெற்றோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் அதிகமான பிரதேசங்களில் மணல்தரையில் அமைக்கப்பட்ட, உயரம் குறைந்த தகரக் கொட்டில்களில் மாணவர்கள் அமர்த்தப்படுகின்றனர். அதிகமான தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கான குடிநீர், மலசலகூட வசதிகளில்லை.

மாணவர்களின் நலனில் அக்கறையின்றி, இலாபத்தை மாத்திரம் பிரதான இலக்காகக் கொண்டு தொழிற்படும் இவ்வாறான தனியார் கல்வி நிலையங்களை உள்ளூராட்சி சபைகளோ, பிரதேச செயலகங்களோ, அல்லது பிரதேச அபிவிருத்தியை இலக்காகக் கொண்டியங்கும் பொதுஅமைப்புக்களோ கண்காணிப்பதில்லையென்று பெற்றோர் குறை கூறுகின்றனர்.

அரசாங்க பாடசாலைகளில் போதுமானளவு ஆசிரிய ஆளணியினர் உள்ளனர். ஆனால், தரம் 01 முதல் க.பொ.த உயர் தரம் வரையான வகுப்புக்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களிலும் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. அதிகமான பிரதேசங்களில் பாடசாலையில் கற்பிப்பவர்களே பிரத்தியேக வகுப்புக்களிலும் கற்பிக்கும் அவலமும் காணப்படுகின்றது.இந்நிலையில் இலவசக் கல்வியினால் பயன் கிடையாதா என்று பெற்றோர் வினவுகின்றனர். இலவசக் கல்வி கேள்விக்குறியாகி விட்டதாக பெற்றோர் ஆதங்கப்படுகின்றனர்.

பாடசாலைகளில் பாடப்பரப்புக்களை நிறைவுசெய்ய முடியாத ஆசிரியர்கள், ரியூசன் கல்வியில் அதிக ஈடுபாடு காட்டி பணமீட்டி வருகின்றனர். ரியூட்டரிகளில் தற்போது மாதாந்தக் கட்டண முறைமை ஒழிந்து, நாளாந்தம், மணித்தியாலம் என்ற அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக ரியூட் வியாபாரம் வேறாக களைகட்டியுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு அரசு வழங்கியுள்ள பயிற்சிப் புத்தகங்களையே, சிலர் சிறிது மாற்றங்களைச் செய்து விற்பனை செய்து வருகின்றனர். மாணவர்களின் அன்றாட வீட்டுப் பயிற்சி, சமயக் கல்வி, விளையாட்டு, ஓய்வு என்பனவற்றுக்குப் பங்கமேற்படாத வகையில் கடந்த காலங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் நேர முகாமைத்துவத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. ஆனால், தற்காலத்தில் பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் மாணவர்கள், உணவு உட்கொள்வதற்கேனும் நேரமின்றி அவதியுறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

பிரத்தியேக வகுப்புக்களில் கலந்து கொள்வதைத் தவிர வேறெதற்கும் தற்காலத்தில் மாணவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. மாலை இருள்சூழ்ந்தும் கூட பிரத்தியேக வகுப்புக்கள் நிறைவு பெறுவதில்லை. சில வீடுகளில் நடைபெறும் விஷேட பிரத்தியேக வகுப்புக்கள் இரவு 10 மணிவரை நடைபெறுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### இரவுபகலாக தனியார் வகுப்புகள்; இலவசக்கல்வி கேள்விக்குறியாகி உள்ளதாக பெற்றோர் ஆதங்கம்!

மாணவர்கள் வீட்டுப் பயிற்சியில் ஈடுபடுவதற்கேற்ற வகையில் அவர்களுக்கு நேரம் வழங்கப்படுவதுமில்லை. சமயக்கல்வி, விளையாட்டு, ஓய்வு என நாட்களைக் கழிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதுமில்லை. இவ்வாறான நிலையை ஏற்படுத்தியவர்கள் ரியூஷன் கல்வி நிலையத்தினர் என்று கூறலாம். இவ்வாறான நிகழ்வுகளினால், பெற்றோர் பெரிதும் மனம் நொந்து போயுள்ளனர். இவற்றுக்குத் தீர்வை வேண்டி நிற்கின்றனர்.

**முகம்மட் றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*

# ஞாயிறு தினங்களில் மாணவருக்கு அறநெறி தவிர்ந்த பாடங்களை நடத்துவோர் மீது சட்டநடவடிக்கை!

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு கல்விக்கோட்டத்திற்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் அரச பாடசாலைகளிலும் ஞாயிற்றுக்கிழமை தினங்களில் 9ஆம் தரத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கு அறநெறி தவிர்ந்த ஏனைய வகுப்புக்கள் நடத்துவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்ற பாடசாலை அதிபர்கள், தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் சிகையலங்கார நிபுணர்கள் உடையலங்கார நிலைய உரிமையாளர்களுடனான கலந்துரையாடலின் பின்னர் இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆலயடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன், திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். உதயகுமார் ஆகியோரின் இணைத்தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சட்டத்தரணி கு.ஜெகசுதன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் கங்காதரன் மற்றும் பிரதேச செயலக உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் அறநெறி உள்ளிட்ட எதிர்கால செயற்பாடுகளை முறையான கட்டமைப்பின் கீழ் கொண்டுவரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கலந்துரையாடலில் கூட்டத்தின் நோக்கம் பற்றி பிரதேச செயலாளர் தெளிவுபடுத்தினார். மாணவர்களின் தற்கால செயற்பாடுகள், அவற்றை திருத்தி அமைக்க வேண்டியதன் சமூகப்பொறுப்பு தொடர்பிலும் அவர் எடுத்துக் கூறினார்.

அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் மாணவர்கள் சிகையலங்கார ஒழுங்கமைப்பு சீருடைகளின் சீரின்மை போன்ற விடயங்களையும் அவர் எடுத்துரைத்தார். இதனை வழிப்படுத்த பெற்றோர்களின் கண்காணிப்பு, சிகையலங்கார மற்றும் உடையலங்கார நிலைய உரிமையாளர்களின் ஒத்துழைப்பு தேவை போன்ற விடயங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

### ஆலையடிவேம்பு பிரதேசத்தில் கண்டிப்பான தீர்மானம்!

இங்கு உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் தமிழ் மொழியின் வரலாறு, அதன் தொன்மை பற்றி விரிவாக விளக்கியதுடன் இச்சிறப்புமிக்க மொழியினை பேசும் நாம் ஒழுக்கமுள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்கி அடுத்த பரம்பரைக்கு கையளிக்க பாடுபடவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். அத்தோடு மாணவர்களின் ஒழுக்கம், சிகையலங்காரம், உடை போன்ற விடயங்களில் அதிககவனம் செலுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இறுதியாக அங்கு கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி ஜெகசுதன், மாணவ சமுதாயத்தை ஒழுக்கமுள்ள சமூகமாக மாற்றுவதற்கு தங்களால் முடிந்த அத்தனை உதவிகளையும் வழங்குவதாகவும் இதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் பொதுவான நடவடிக்கைகளுக்கு சட்ட ஆலோசனை வழங்கப்படுவதுடன் ஆலையடிவேம்பில் உருவாக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகள் ஒன்றியத்தினூடாக 25 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் வழக்குத் தாக்கலை இலவசமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க தயாராக இருப்பதாகவும் கூறினார்.

கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்களும் தங்களது கருத்தைப் பதிவு செய்ததுடன் இறுதியாக சில தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

9ஆம் தரத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமை மாலை நேர வகுப்புக்கள் நடத்த தடை விதிக்கப்படுவதுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து பிரத்தியேக மற்றும் பாடசாலை வகுப்புக்களையும் நடத்த தடை விதித்தல்.

அறநெறிக்கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல், மாணவர்களின் சிகையலங்காரங்களிலும் உடையலங்காரங்களிலும் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்தல், இதனை மீறுவோர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.







**வி.சுகிர்தகுமார்...**
*(வாச்சிக்குடா விஷேட நிருபர்)*

# இம்மாதம் 22 ஆம் திகதி வரை விக்ரம் லேண்டர் நீண்ட உறக்கம்!



இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ ஜூலை மாதம் 14 அன்று, நிலவின் தென் துருவத்தை அடைய சந்திரயான் 3 எனும் விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியது. கடந்த ஓகஸ்ட் 23 ஆம் திகதி, சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவின் தென்துருவத்தை அடைந்தது. சந்திரயான் 3 விண்கலத்தில் இருந்து விக்ரம் எனும் லேண்டர் சாதனமும், பிரக்யான் எனும் ரோவர் சாதனமும் பிரிந்து நிலவை அடைந்து, தங்கள் ஆய்வு பணிகளை சிறப்பாக செய்து வருவதாக இஸ்ரோ தெரிவித்தது.

இந்நிலையில், நிலவில் தரையிறங்கிய விக்ரம் லேண்டர் சாதனம் குறித்து இஸ்ரோ புதிய தகவல் தெரிவித்து இருக்கிறது. அதில், "விக்ரம் லேண்டர் திட்டமிட்ட குறிக்கோளை தாண்டியே சிறப்பாக செயல்பட்டது. அது வெற்றிகரமாக ஒரு 'ஹாப்' பரிசோதனையையும் நிறைவு செய்தது. இந்நிலையில் நேற்றுக் காலை 8 மணிக்கு விக்ரம் லேண்டர் உறக்க நிலைக்கு செல்லுமாறு செயலாக்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக அதனுள்ளேயே சில பரிசோதனைகள் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டன. அதில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் பூமிக்கு அனுப்பப்பட்டன. அதில் உள்ள ஆய்வுக்கருவிகள் அனைத்தும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அதில் உள்ள சமிக்ஞைகளை கிரகிக்கும் 'ரிசீவர்' கருவி அணைக்கப்படவில்லை.

சூரிய ஒளியிலிருந்து பெறும் சக்தி நின்றவுடன் பிரக்யானுக்கு அருகில் லேண்டர் உறக்க நிலைக்கு சென்று விடும். செப்டம்பர் 22 அன்று பிரக்யானும், விக்ரமும் மீண்டும் விழிப்பு நிலைக்கு வரும்" என்று இஸ்ரோ தெரிவித்து இருக்கிறது.

# A-PAD இலங்கை ஏற்பாட்டில் இன்று சர்வதேச கருத்தரங்கு

ஒரு நம்பிக்கையான, விளைவு சார்ந்த தளத்தை வளர்க்கும் நோக்கத்துடன், பேரிடர் மேலாண்மைக்கான ஆசிய பசுபிக் கூட்டணி (APAD SL) 2023 இன் வருடாந்த சர்வதேச கருத்தரங்கு, ஆக்கபூர்வமான தீர்வுகளை கோடிட்டுக் காட்டும் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பை வலியுறுத்தும் ஒரு விவாதத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான கருத்தரங்கு, 'காலநிலைஆக்கபூர்வமான ஒத்துழைப்பு: காலநிலை தாக்கக்கூடிய நாளை நோக்கி மாற்றத்தை துரிதப்படுத்துதல்' என்ற கருப்பொருளில் உள்ளது. பிரதம அதிதியாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் H. E. Mizukoshil Hideaki மற்றும் கௌரவ அதிதியாக உலக வங்கியின் மாலைதீவு மற்றும் இலங்கைக்கான நாட்டு முகாமையாளர் திருமதி Chiyo Kanda ஆகியோர் இந்நிகழ்வினை சிறப்பிக்க அழைக்கப்பட்டுள்ளனர்.




இந்த நிகழ்வு இன்று 5 ஆம் திகதி சர்வதேச மற்றும் உள்ளூர் நிபுணர்கள் பேச்சாளர்களை இணைத்து நடைபெறும்.

இக்கருத்தரங்கு இரண்டு குழு விவாதங்களைக் கொண்டிருக்கும். முதலில் 'காலநிலை ஆக்கபூர்வமான தீர்வுகளை அளவிடுதல்: புதுமுறைகாணலிலிருந்து நடைமுறைக்கு நகர்த்துதல்' மற்றும் காலநிலைஆக்கப்பூர்வமான தீர்வுகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் கோட்பாடு சார்ந்த கருத்துக்கள் மற்றும் நடைமுறை பயன்பாடுகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கும் புதுமையான நடைமுறைகள்.

இரண்டாவது குழு, 'ஒரு சிக்கலான காரணத்தை வழிநடத்துதல்: காலநிலை அபாயத்தைக் குறைப்பதற்கான பலபங்குதாரர் அணுகுமுறை', காலநிலை அபாயத்திற்கான முழுமைநோக்க அணுகுமுறை மற்றும் உள்ளடக்கிய சாலை வரைபடத்தை உருவாக்கும் ஒரு பார்வையுடன் பல்வேறு கூட்டாளர்களின் அறிவு, வளங்கள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அபாய நேர்வு குறைப்பு.

ஜப்பானை தலைமையிடமாகக் கொண்ட, APAD SL ஆனது, இலங்கை முழுவதும் பேரிடர் தயார்நிலை, தணிப்பு, பேரிடர் அபாயத்தைக் குறைத்தல், திறன் மேம்பாடு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. APAD இன் வருடாந்த சர்வதேச கருத்தரங்கு, காலநிலைவிவேகமான ஒத்துழைப்பு மற்றும் நடவடிக்கை எதிர்காலத்திற்கான களத்தை அமைக்கும் ஒரு மாற்றமான நிகழ்வாக இருக்கும்.

# பல்லாயிரம் பக்தர்கள் புடைசூழ கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் தேரோட்டம்



இழுக்கிலங்கையின் முதல் தேரோடும் ஆலயம் என்ற பெருமையினையும், இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் கருதப்படும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் ஆலயத்தின் தேரோட்டம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

'கல் நந்தி புல்லுண்டு, வெள்ளையனை உதைத்து சிலையாக்கிய' அற்புத பெருமையினைக் கொண்ட கிழக்கில் தேரோடும் சிறப்புமிக்க வரலாற்றுத்தலமாகிய கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரபெருவிழாகடந்தமாதம்19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

பண்டைக்கால தமிழ் மன்னர்கள் வகுத்த வழிமுறையின் கீழ் இன்றும் தான்தோறீச்சரம் உற்சவம் பழமை மாறா பண்பாட்டு விழுமியங்களுடன் நடைபெற்று வருகின்றது.

கொடித்தம்பத்திற்கு விசேட அபிசேக ஆராதனை நேற்றுமுன்தினம் (03.09.2023) நடைபெற்றதுடன் வசந்த மண்டபத்தில் பூஜைகள் நடைபெற்று வண்ணக்குமார் பாரம்பரிய நடைமுறைகளுடன் பிள்ளையார் மற்றும் தான்தோன்றீஸ்வரர் தேரடிக்கு கொண்டுவரப்பட்டு இரண்டு தேர்களுக்கும் பூஜைகள் நடைபெற்றன.

இதன்போது பிள்ளையார் தேர் முதலாவதாக இழுத்துச் செல்லப்பட்டது.

பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் இந்த தேர் இழுத்துச்செல்லப்பட்டு நிறுத்தப்பட்ட நிலையில் தான்தோன்றீஸ்வரர் அமர்ந்துள்ள தேருக்கு விசேட பூஜைகள் நடத்தப்பட்டன. பக்தர்களின் அரோகரா



கோஷத்தின் மத்தியில் தேர் நகர்ந்து சென்றது.

இரண்டு தேர்களும் ஆலய முன்றலுக்கு பக்தர்களினால் இழுத்துவரப்பட்டதைத் தொடர்ந்து தேர் உற்சவம் நிறைவுபெற்றது. தேர் உற்சவத்தினை தொடர்ந்து முனைக்காடு வீரபத்திரர் ஆலயத்தில் தேரோட்ட உற்சவத் திருவேட்டைத் திருவிழா அன்றிரவு சிறப்பாக நடைபெற்றது.

# முஸ்லிம் காங்கிரஸ் அழிந்து போய்விட்டதென்று சொல்வோருக்கு நாம் கூறும் உறுதியான தகவல்!

## 'கலாநிதி சிராஸ் மீராசாஹீப் தனக்கு வழங்கப்பட்ட பணியை நேர்த்தியாக செய்வார்; சாய்ந்தமருதில் நடைபெற்ற சந்திப்பில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி அழிந்து போய்விட்டது என்று சொல்பவர்களுக்கு இந்தக் கூட்டம் உறுதியான தகவலைச் சொல்கின்றது. நாமும் ஒரு தகவலைச் சொல்கின்றோம். கட்சியிலிருந்து விலகிச் சென்று இன்று மீண்டும் இணைந்துள்ள இருவர் மூலமாக கட்சி பெரும் உற்சாகமடைந்திருக்கிறது. அவர்கள் கலாநிதிகளான எம்.எல்.எம். ஹிஸ்புல்லாஹ், சிராஸ் மீராசாஹீப் ஆகியோராவர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களது சிரார்த்த தினத்தை சாய்ந்தமருதில் நடத்துவது தொடர்பாக நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். கல்முனை மாநகர முன்னாள் மேயர் சிராஸ் மீராசாஹீப் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்தும் கருத்து தெரிவித்ததாவது:

"கலாநிதி சிராஸ் மீராசாஹீப் தனக்கு வழங்கப்பட்ட பணியை தேர்த்தியாக செய்வார் என்பது நாம் மேயர் பதவி வழங்கியதிலிருந்து அறிந்த விடயம். கட்சியிலிருந்து விலகிச் சென்று இன்று மீண்டும் இணைந்துள்ள இருவர் மூலமாக கட்சி பெரும் உற்சாகமடைந்திருக்கிறது. அவர்கள் இருவரும் இந்தக் கட்சியில் மிகப்பெரும் மக்கள் செல்வாக்கைக் கொண்டவர்கள்.

மேயர் பதவியிலிருந்து விலகுமாறு நாங்கள் கோரிய போது மிகவும் கண்ணியமாக தனது ராஜினாமா செய்தவர் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் ஆவார். செப்டம்பர் 16 பெரும் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களை இழந்த நாள். அவரது மறைவின் சோகம் இன்னும் எங்களை தொடர்ந்தும் பாதித்துக்கொண்டியிருக்கிறது. அவருடைய நினைவு தினத்தை கட்சியின் புதிய யுகத்திற்கான ஆரம்பமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது கட்சி முக்கியஸ்தர்கள் பலரது விருப்பமாகும்.

சில இடங்களில் கட்சிக்கு தொய்வு நிலை ஏற்பட்டிருக்கின்ற நிலமையை மாற்றி, உறுதிநிலைக்கு கொண்டு வருவதற்கு இந்த ஞாபகார்த்த நிகழ்வை பயன்படுத்த உத்தேசித்துள்ளோம்.

தற்போது ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஓர் அணியாக ஒற்றுமையாகயிருப்பது கட்சிக்கு பெரும் உத்வேகத்தை உருவாக்கியிருக்கின்றது".







இந்நிகழ்வில் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் உரையாற்றுகையில் "மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களுடைய நினைவேந்தல் விழாவை சாய்ந்தமருது மண்ணில் நடத்துவதற்கு அனுமதியளித்து அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய கட்சித் தலைமைக்கும் உயர்பீடத்திற்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். கடந்த காலங்களில் கல்முனை மாநகரசபையில் சாய்ந்தமருது சார்பாக கட்சிக்கு 90 வீதமான வாக்குகளை நாம் பெற்றுக் கொடுத்திருந்தோம். அதே போன்ற ஒரு எழுச்சியை மீண்டும் இந்த மண்ணில் தலைவரது நினைவேந்தல் நிகழ்வு மூலமாக சாதித்துக் காட்ட இருக்கிறோம்.இந்தக் கட்சியிலிருந்து தூரமாகியிருக்கும் கட்சித் தொண்டர்களையும், ஆதரவாளர்களையும் இந்தப் பிரதேசத்தில் மீண்டும் ஒன்றினைத்து புதிய உற்சாகத்துடன் செயற்பட நாங்கள் தயாராகவிருக்கிறோம்.

ஒரு பெரும் விழாவாக இந்த சிரார்த்த தினத்தை நிகழ்த்திக் காட்டுவதோடு சாய்ந்தமருது மக்களின் ஒற்றுமையை மீண்டும் காண்பிப்பதற்கு சாய்ந்தமருது மக்கள் என்னோடு பூரண ஒத்துழைப்பு தருவதுடன்,விழா ஏற்பாடுகளிலும் பங்கெடுக்க வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் தவிசாளர் அப்துல் மஜீத், பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் ஹாசீம், எம்.எஸ்.தொளபீக், முன்னாள் எம்.பிக்களான எம்.எல்.எம். ஹிஸ்புல்லாஹ், எம்.ஐ.எம்.மன்சூர், முன்னாள் மாகாண அமைச்சர் எம். எஸ்.உதமாலெவ்வை உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

**எம்.எப்.றிபாஸ்...**
(பாலமுனை தினகரன் நிருபர்)

# பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு பாணந்துறையில் இஸ்லாமிய சமய நிகழ்வு

மக்களின் பாதுகாப்பை மேற்கொண்டுவரும் தேசத்தின் முக்கியமானதொரு அரச திணைக்களம் பொலிஸ் திணைக்களம் ஆகும். நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் உருவாக்குவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். மக்களின் பாதுகாப்பில் பொலிசாரின் பங்களிப்பு முக்கியமானதாக இருப்பதுடன் பொலிஸ்_பொதுமக்கள் ஒத்துழைப்பு முக்கியமானதாகும் என பாணந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் வெதகே தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வசமய நிகழ்வுகளின் விஷேட இஸ்லாமிய சமய நிகழ்வு பாணந்துறை தொட்டவத்தை பெரிய பள்ளிவாசலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சஞ்ஜீவ லக்மால் வழிகாட்டலில் இந்த வைபவம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.





பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கமும், வடக்கு பொலிஸ் நிலையமும் இணைந்து நடத்திய இந்த விஷேட நிகழ்வு பரிபாலனச் சங்கத் தலைவர் இம்தியாஸ் முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பாணந்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர், தலைமையக பொலிஸ் பரிசோதகர்,

சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் வை.எம்.எம்.ஏ பேரவையின் களுத்துறை மற்றும் காலி மாவட்ட பணிப்பாளர் இஸ்மத் ரிப்தி, முகத்தமுஷ் ஷாதுலி எம். நயீம் மற்றும் ஜமாத்தார்களும் கலந்து கொண்டனர்

பெரியபள்ளிவாசல் பிரதம கதீப் கலீபதுஷ் ஷாதுலி எம்.ரீ.எம்.இழ்யாஸ், இப்றாஹீம் வீதி பள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.எம். எம்.முஷாக்கிர் சமய வழிபாடு பிரார்த்தனைகளை நடத்தினர். பெரிய பள்ளிவாசல் மற்றும் அலிய்யா மத்ரஸா மாணவர்களின் கஸீதா ஓதல் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது. மத்ரஸா மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

" மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையில் அவசியமான நிறுவனமாக பொலிஸ் திணைக்களம் விளங்குகின்றது. வீட்டிலிருந்து வெளியில் சென்ற ஒருவர் வீடு திரும்பும் வரையில் அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். மக்களின் பாதுகாப்பை முன்னெடுத்து வரும் நிறுவனமொன்றாக பொலிஸ் திணைக்களம் விளங்குகின்றது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதுடன் குற்றச் செயல்களை ஒழிப்பதற்கான பல்வேறு குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொண்டுவருகின்றது. போதைப் பொருள் ஒழிப்புக்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து பாரிய சேவைகளை பொலிஸ் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது" எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

# ஆசியாவின் தூய்மையான கிராமம் இந்தியாவில்!



இந்தியாவின் மேகாலயாவின் கிழக்கு காசி ஹில்ஸ் மாவட்டத்தில் அமைந்துள்ள மவ்லின்னாங் கிராமம் 'ஆசியாவின் தூய்மையான கிராமம்' என்ற இடத்தைப் பெற்றுள்ளது. வெறும் 700 குடிமக்களைக் கொண்டு, மிக உயர்ந்த கல்வியறிவு வீதத்தையும், பெண்களுக்கு அதிகாரமளிக்கும் சமூகத்தையும் கொண்டு பல அழகான சுற்றுலாத் தலங்களுக்கு புகலிடமாக உள்ளது.

இந்த இடத்தை பார்க்கும் அனைவரும் 'அடடா என்ன தூய்மை' என்று சொல்லிக் கொள்ளாமல் இருக்க மாட்டார்களாம்! தனித்துவமான அழகைக் கொண்டுள்ள மவ்லின்னாங் சீராக அமைக்கப்பட்ட ஓலைகளால் ஆன காசி குடிசைகள், ஒவ்வொரு வீட்டிற்கும் வெளியே பூத்துக் குலுங்கும் பூக்கள், காய்கறி மற்றும் பழத்தோட்டங்கள், ஒவ்வொரு சில மீட்டருக்கும் இடையே இருக்கும் குப்பைத் தொட்டிகள், அழகான மூங்கில் கூடைகள் என அங்கே இருக்கும் காட்சிகளைக் கண்டு பார்வையாளர்கள் பரவசம் அடைவது உறுதி.

இந்தோவங்காள எல்லையில் அமைந்துள்ள இந்த கிராமம் அன்றாட வாழ்க்கையின் சலசலப்பிலிருந்து ஓய்வு அளிக்கும் இடமாக பார்க்கப்படுகிறது. கிராமத்தை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொள்கின்றனர் மக்கள். சுற்றுச்சூழல் சுற்றுலாத்தலமாக, மிகவும் தூய்மையான கிராமமாக திகழும் மவ்லின்னாங்கில் இருக்கின்ற ஒவ்வொரு வீடுகளிலும் கழிவறைகளும், மூங்கில் குப்பைத் தொட்டிகளும் உள்ளன. இங்கு பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டுள்ளது. அதனாலேயே குப்பை எதுவும் பார்க்க முடிவதே இல்லை.

மக்கள் தங்கள் வீடுகளை சுத்தம் செய்வது மட்டுமல்லாமல், வீதிகளைத் துடைப்பதும், மரங்களை நடுவதும் அவர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக பின்பற்றி வருகின்றனர். மவ்லின்னாங் முற்றிலும் வேறுபட்ட உலகமாகும், அதன் சொந்த பழக்க வழக்கங்கள், மரபுகள் மற்றும் வாழ்க்கை முறைகள் ஆகியவை மற்றவற்றிலிருந்து தனித்து நிற்கின்றன.

ஆணாதிக்க ஆட்சியை விட்டுச் சென்ற புகழ்பெற்ற பழங்குடியின மரபான காசிகளின் தாயகமும் இந்த இடம்தான். தங்கள் விருந்தினர்களுக்கு அன்பான விருந்தோம்பலை வழங்குவது மவ்லின்னாங்கின் பூர்வீகவாசிகளின் மிகவும் நன்கு அறியப்பட்ட பண்புகளில் ஒன்றாகும். மவ்லின்னாங்கில் நீங்கள் உண்ணும் உணவின் சிறந்த அம்சம் என்னவென்றால், அவை அனைத்தும் இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட காய்கறிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. இறைச்சி கூட வீட்டில் வளர்க்கப்படும் பறவைகள் மற்றும் விலங்குகளில் இருந்து வருவதால் சுவையும் அசத்தலாக இருக்கிறது.

இயற்கையோடு இணைய மவ்லின்னாங் செல்ல வேண்டும். மவ்லின்னாங்கில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களில் முதன்மையானது மவ்லின்னாங் கிராமமே தான். சீரான ஒரே பாணியில் கட்டப்பட்ட வீடுகள், அழகான தோட்டங்கள், பசுமையான முற்றங்கள், தூய்மையான மற்றும் அழகிய நகரத்தின் ஒட்டுமொத்த சூழல் பார்வையாளர்களை முற்றிலும் மாறுபட்ட உலகத்திற்கு கொண்டு செல்கிறது. இந்தியாவின் தூய்மையான நதி என்று அழைக்கப்படும் டாவ்கி நதியை நீங்கள் காணலாம். நீர் மிகவும் சுத்தமாகவும் தெளிவாகவும் இருப்பதால், படகுகள் ஆற்றங்கரையில் மிதப்பது போல் தெரிகிறது.

# தொழில் முயற்சிகள், நுண்நிலை வணிகங்களுக்கு மக்கள் வங்கி வழங்கும் சௌகரியமான தீர்வு




மக்கள் வங்கியானது தனது புத்தாக்கமான People's Mobile Point of Sale (People's mPOS தீர்வை அறிமுகப்படுத்துவதுடன், எந்த இடத்திலிருந்தும் அட்டை மூலமான கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் வகையில் சிறு மற்றும் நுண்நிலை வணிகங்களுக்கு வலுவூட்டுகிறது. இந்த அதிநவீன தொழில்நுட்பத்தின் அறிமுகத்துடன், வணிகர்கள் இப்போது தமது mPOS சாதனத்தைப் பயன்படுத்தி பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தலாம் என்பதுடன், இது அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தையும், நெகிழ்வுத்தன்மையையும் வழங்குகிறது.

People's mPOS தீர்வு குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் நுண்நிலை வணிகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது வணிகர்களுக்கு விசா, மாஸ்டர்கார்ட் மற்றும் லங்கா பே ஜேசிபி அட்டைகளை ஏற்றுக்கொள்ள இடமளிப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு பரந்த அளவிலான கொடுப்பனவுத் தெரிவுகளை உறுதி செய்கிறது.

வணிகர்கள் இந்த கொடுப்பனவு ஏற்புத் தீர்வை குறைந்தபட்ச ஆவணங்கள் மற்றும் சிரமமின்றி பெற்றுக்கொள்ளலாம். மேலும், வணிகர்கள் எங்கிருந்தும், எவ்வேளையிலும் கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்ள இடமளிக்கும்.

மேலும், தானியங்கு தீர்வு அம்சமானது, அடுத்த அலுவலக நாளில் வணிகரின் கணக்கில் நிதி வரவு வைக்கப்படுவதை உறுதிசெய்கிறதுடன், இது நிதி செயல்முறையை சீராக்குகிறது. வணிகர்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் ரசீதுகளை உருவாக்கி, ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தலாம் என்பதால், பல்வேறு தேவைகள் கொண்ட வணிகங்களுக்கு ஏற்றதாக இதனை ஆக்குகிறது.

ஆர்வமுள்ள வணிகர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு, தங்கள் தேசிய அடையாள அட்டையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை வழங்க வேண்டும். மேலும், சாதனத்திற்கான கட்டண ரசீதும் தேவை. மாதாந்த இலக்கு சேவை கட்டணங்கள் அல்லது பொறுப்புகள் எதுவும் கிடையாது ஆகையால், இது ஒரு நெகிழ்வான மற்றும் செலவு குறைந்த தீர்வாக அமைகிறது.

முன்னணி mPOS தீர்வு வழங்குநராக, Payable Pvt Ltd ஆனது, இந்த புதிய தொழில்நுட்பத்தை வழங்குவதற்காக மக்கள் வங்கியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. People's mPOS விண்ணப்பங்கள் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும், அட்டை மையத்திலும் கிடைக்கின்றன அல்லது People's www.peoplesbank.lk/merchantservices/ இல் மக்கள் வங்கியின் இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் சாதனமானது சேவை வழங்குநரால் வணிகரின் இடத்திற்கே நேரடியாக விநியோகம் செய்து வழங்கப்படும்.

கூடுதல் விபரங்களைப் பெற வாடிக்கையாளர்கள் 1961 ஊடாக மக்கள் வங்கிகளின் அழைப்பு மையத்தைத் தொடர்புகொள்ளலாம்.

## அல்குர்ஆன் சிங்கள மொழிபெயர்ப்பு வழங்கி வைப்பு



சிங்கள மொழி பெயர்ப்புடனான அல் குர்ஆன் பிரதியொன்று லேக்ஹவுஸ் மேலதிக பொது முகாமையாளர் விராஜித் சமேந்திர பொய்ஸ் அவர்களுக்கு கலாபூஷணம் யாழ். பரீட் இக்பாலினால் நேற்று (04) லேக்ஹவுஸ் நிறுவனத்தில் வைத்து வழங்கி வைக்கப் பட்டபோது எடுத்த படம். அருகில் தினகரன் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார் மற்றும் தினகரன் பிராந்திய செய்தி ஆசிரியர் எம்.எப்.எம். அஜ்வாத் பாஸி ஆகியோரும் காணப் படுகின்றனர்.

# நாடு முழுவதும் சைவ ஆலயங்கள் மக்கள் ஆதரவுடன்தான் கட்டப்பட்டுள்ளன

### ரெலோ பேச்சாளர் கு. சுரேந்திரன்



நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் இந்து ஆலயங்கள் கட்டடப்பட்டுள்ள பொழுது பௌத்த விகாரைகளை வடக்கு, கிழக்கில் கட்டுவதற்கு எதற்கு தடை என்று கேள்வி எழுப்பி உள்ளனர் இனவாத மதவாத மும்மூர்த்திகள்.

அனைத்து மாவட்டங்களிலும் சைவ ஆலயங்கள் அங்குள்ள பக்தர்களால் மக்கள் ஆதரவுடன் உரிய அனுமதி பெற்று சட்டபூர்வமாக நாட்டு விதிமுறைகளை அனுசரித்து கட்டடப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றன. பொது மக்களின் காணிகளை அபகரித்தோ அல்லது தொல்லியலின் ஆதரவுடன் அரசு படைகளின் பாதுகாப்புடன் கட்டடப்பட்டவை அல்ல.

இவ்வாறு ரெலோ பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழர்கள் பௌத்தத்திற்கோ, பௌத்த மதத்திற்கோ புத்த பெருமானுக்கோ எதிரானவர்கள் அல்ல. மாறாக அவருடைய போதனைகளையும் மதிப்பவர்கள் தமிழ் மக்கள். இனமாக மதவாத சக்திகள் இதை புரிந்து கொள்ள வேண்டும்.

பலாத்காரமாக மக்கள் காணிகளை அபகரித்து பிரதேச மக்களின் எதிர்ப்புக்கும் போராட்டத்திற்கும் மத்தியில் சட்ட விரோதமாக பௌத்த விகாரைகள் அமைக்கின்ற நோக்கமே தவறானது. அந்த நோக்கத்தை தான் தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள். தொல்லியல் என்ற போர்வையில் பௌத்த விகாரைகளை கட்டி எழுப்பி விட்டு மக்கள் காணிகளையும் அபகரித்து நீங்கள் செய்ய முற்படுவது என்ன?

நல்லிணக்கம் புரிந்துணர்வு ஏற்படும் பட்சத்தில் எங்கெங்கு பௌத்த விகாரைகள் கட்டடப்பட வேண்டும் என்பதை அங்கு வாழுகின்ற மக்களே தீர்மானிப்பார்கள். நீங்கள் பலாத்காரமாக பௌத்த விகாரைகளை கட்ட வேண்டிய தேவை ஏற்படாது.

தமிழ் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தாது இனவாத, மதவாதங்களை வளர்த்துக்கொண்டு அந்த நோக்கங்களை நிறைவேற்ற விகாரைகளைக் கட்ட தமிழ் மக்கள் அனுமதிக்கவில்லை என்பதால் நீங்கள் கூப்பாடு போடுவதில் அர்த்தமில்லை.

உங்கள் மறைமுக ஆக்கிரமிப்பு நோக்கத்தை நிறைவேற்ற தமிழ் மக்கள் ஒரு பொழுதும் அனுமதிக்கப் போவதில்லை. சிங்கள மக்களும் அதற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை. உங்களைப் போன்ற ஒரு சிலர் நாட்டின் அமைதியை குலைத்து தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தை தூண்டி விடுவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இதற்கு ஒரு பொழுதும் நாட்டு மக்கள் இடமளிக்கப் போவதில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. அரகலப் போராட்டத்தில் இருந்து நீங்கள் பெற்ற பாடங்களில் இருந்து நீங்கள் திருந்தவில்லை. விரைவில் நீங்கள் திருந்தும் காலம் வரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரெலோ பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

### 50,000 பட்டதாரிகள் அரச... (03 ஆம் பக்கத் தொடர்)

வேண்டுமானால் பாடசாலை மாணவர்களின் திறமைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மழை நீரை உபயோகப்படுத்தி... (03 ஆம் பக்கத் தொடர்)

விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அடுத்த வருடத்தில்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேபோன்று, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடுவது என்பது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் முடியாத ஒன்று என்றும் அவர் தெரிவித்துள்ளார். சுதந்திர மக்கள் சபை கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்றுள்ள ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

### முக்கிய தகவல்களை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஸ்ரீலங்காஸ் ஈஸ்டர் போம்பிங்ஸ் டிஸ்பேட்ச்சஸ் (SRI LANKA'S EASTER BOMBINGS DISPATCHES) என்ற பெயரில் குறித்த தகவல்கள் வெளிப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிரித்தானிய நேரப்படி இரவு 11.05 அளவிலும் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 அளவிலும் இந்த தகவல் வெளியாகும் என சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இதன்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான பல முக்கிய தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### நாட்டில் டெங்கு நோய்... (03 ஆம் பக்கத் தொடர்)

62 ஆயிரத்து 29 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### சுகாதார...

பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதா அல்லது எதிராக வாக்களிப்பதா அல்லது வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பதா என்ற நிலைப்பாட்டை இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கூட்டத்தொடர் கூடும் போது தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து முடிவெடுக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார். மலையாளபுரம் கிராம மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று மலையாளபுரம் கிராம அபிவிருத்தி சங்க வளாகத்தில் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் குறித்த விடயத்தை தெரிவித்தார்.

### இராமேஸ்வரம்.....

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அடுத்த ஓலைக்குடா கிராமத்தில் அமையப் பெறவுள்ளது. சிலை அமைப்பதற்கான அஸ்திவார பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் அடுத்தாண்டு சிலை திறக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

### சில மாவட்டங்களில் ....

சீரற்ற காலநிலை தொடர்ந்து சில தினங்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மழை பெய்யும் காலத்தில் கடற் பிராந்தியங்களில் கடும் காற்று வீசக்கூடும் என்றும் அந்த வகையில் 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

### தமக்கு ஏற்பட்ட...

நற்பெயருக்கும் மற்றும் உத்தியோகபூர்வ கடமைக்கும் பெரும் பாதிப்பாக அமைவதுடன் தமது பிள்ளைகளை பாடசாலைகளிலிருந்து நிறுத்துவதற்கும் நேரலாம் என்றும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். அரச புலனாய்வு பிரிவு பிரதானியான சுரேஷ் சலே தாக்கல் செய்துள்ள மனுவில் பிரதிவாதியாக சிறில் காமினி பெர்னாண்டோ அடிகளாரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினருக்கு தெளிவுபடுத்தும் வகையில் சர்வதேச உண்மைக்கான பேரவை மூலம் 2021 அக்டோபர் 23ஆம் திகதி சூம் தொழில்நுட்பம் ஊடாக நடத்தப்பட்ட கூட்டத்தில் தம்மைப் பற்றி தவறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதாகவும் அதனால் தமக்கு ஏற்பட்ட அபகீர்த்திக்காக சிறில் காமினி அடிகளாரிடம் 30 மில்லியன் ரூபா நட்ட ஈடாக பெற்றுத் தருமாறும் அவர் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கி கடனுதவியில் ரூ. 2 பில். பெறுமதியான தண்டவாளங்கள்

## அமைச்சர் பந்துலவினால் ரயில்வே திணைக்களத்திற்கு கையளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மூன்று வருடங்களுக்குப் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் ரயில் தண்டவாளத்துடன் கப்பலொன்று நாட்டை வந்தடைந்துள்ளது.

ரயில்வே துறையை முன்னேற்றும் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மேற்படி ரயில் தண்டவாளங்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தில் வைத்து போக்குவரத்து, மற்றும் ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் ரயில்வே திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.



அந்த வகையில் இரண்டு வகையான 10,000 ரயில் தண்டவாளங்கள் சீனாவிலிருந்து நாட்டுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி இரண்டு பில்லியனை விட அதிகமாகும்.

மூன்று வருடங்களுக்குப் பின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள மேற்படி ரயில் தண்டவாளங்களை கையேற்கும் நிகழ்வில் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் எச். எம் .டபிள்யூ .பண்டார உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### மின்சார பஸ்களை...

நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

"மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 200 மின்சார பஸ்களை இறக்குமதி செய்ய முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்திற்காக, தற்போது முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பங்கள் (Expression of Interest) கோரப்பட்டுள்ளன.

இந்த திட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கூட்டு முயற்சியாக செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், முதலீட்டாளர்களுக்கு மின்னேற்ற நிலையங்களை (Charging Point) நிறுவவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பின்னர், பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஊடாக, முதலீட்டாளர்கள் முதலீடு செய்த தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்திய பிறகு, பஸ்களின் உரிமை அரசாங்கத்துக்கு கிடைக்கும். இதற்காக சீனா, கொரியா உட்பட உலகின் எந்த நாடும் விண்ணப்பிக்கலாம். இது ஒரு முதலீட்டு வாய்ப்பாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள அனைத்து பொதுப் போக்குவரத்துகளும் புதைபடிவ எரிபொருட்களின் (Fossil fuels) பாவனையிலிருந்து விடுபடுவது தொடர்பில் சர்வதேச உடன்படிக்கையொன்று உள்ளது. கார்பன் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் சுற்றுச்சூழல் கட்டமைப்பைப் பாதுகாக்க இதில் முதலீடு செய்கிறார்கள். மின்சார பஸ்கள் சுற்றுச்சூழலுக்கு பெறுமதியைக் கொண்டு வருவதனால், அந்தப் பெறுமதிக்கு உலகின் பல்வேறு அமைப்புகள் அதிக விலை கொடுத்து வருகின்றன.

மேலும், அரச நிறுவனங்களின் வருமானம் குறைவதைத் தடுக்க அனைத்து நிறுவனங்களையும் டிஜிட்டல் மயமாக்க வேண்டும். ரயில் மற்றும் போக்குவரத்து சபை பஸ்களில் டிக்கெட் வழங்கும் முறைக்குப் பதிலாக மின்னியல் அட்டை முறையைக் கொண்டு வருவதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அட்டை அல்லது கியூஆர் சிஸ்டம் மூலம் பணத்தைப் பயன்படுத்தாமல் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் கொடுக்கல் வாங்கல் செய்தால், இந்த ஒவ்வொரு நிறுவனங்களின் வருமானத்தையும் குறைந்தது 50% சதவீதத்தினால் அதிகரிக்கலாம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### ஒன் மெக்ஸ்....

காணி பதிவாளர்களுக்கு மேற்படி உத்தரவைப் பிறப்பித்துள்ள மஜிஸ்திரேட் நீதவான், இவ்வாறு 20 இடங்களிலுள்ள சொத்துக்களுக்கு தடையுத்தரவை விதித்துள்ளரார்.

சந்தேக நபருக்குச் சொந்தமான 20 காணிகளை ஒரே தினத்தில் அவரது மனைவிக்கு 8 காணியும் நண்பர் ஒருவருக்கு 12 காணிகளும் அவரால் வழங்கப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு தகவல் கிடைத்துள்ளதையடுத்து மேற்படி தடையுத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மாத்தறையில் 6 இடங்கள், அம்பாந்தோட்டையில் 2 இடங்கள், களுத்துறையில் 10 இடங்கள், கடவத்தையில் 2 இடங்கள் ஆகியன மேற்படி தடையுத்தரவுக்கு உட்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் அந்தந்த மாகாண காணி பதிவாளர்களுக்கு மேற்படி உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட கணக்குகளில் மத்திய வங்கி கணக்கில் 79 கோடி ரூபா உள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும் அந்தத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

### ஹோமாகம மஹிந்த...

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு ரஷ்ய மத்திய நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி நடாலியா குளிசெங்கோ மேற்படி புத்தகங்களை நூலகத்திற்கு கையளித்துள்ளார். இலங்கையிலிருந்து அவர் தமது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு மீண்டும் நாட்டுக்கு திரும்புவதற்கு முன்பதாக அவரால் உபயோகப்படுத்தப்பட்ட நூல்களும் இந்த அன்பளிப்பில் உள்ளடங்குகின்றன. மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தின் ஆரம்ப கர்த்தாவான அமைச்சர் பந்துல குணவர்தனவின் அழைப்பின் பேரில் நேற்று அங்கு வருகை தந்த மேற்படி ரஷ்ய அதிகாரி அங்கு வருகை தந்ததன் நினைவாக வித்தியாலய சுற்றாடலில் 2 மரக்கன்றுகளையும் நட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது.

### ஞானசார தேரர்...

எதிர்வரும் 11ஆம் திகதி மீள அழைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

புனித குர்ஆன் தொடர்பான தவறான மற்றும் போலியான அறிக்கைகளை ஊடகங்களுக்கு வெளியிட்டமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லையென பொலிஸாரினால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில், பிணையில் உள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார உள்ளிட்ட பிரதிவாதிகள் குழு நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தது.

### "பேஸ்புக்" மூலம் ...

பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் 7ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்புத்தேகம மற்றும் எப்பாவல பகுதிகளுக்கு விஜயம் செய்வதற்கு எதிர்பார்த்துள்ள நிலையிலேயே மேற்படி இளைஞர் முகநூல் மூலம் இந்த மிரட்டல் எச்சரிக்கையை எடுத்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். "நெருக்கடியான நிலையில் இந்த நாட்டை சீரழித்த நபர் எமது பகுதிக்கு வருகின்றார். சினைப்பர் துப்பாக்கி ஒன்றை பெற்றுக் கொள்ள முடியுமா?"

என அந்த நபர் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவினைத் தொடர்ந்து குற்ற விசாரணை பிரிவினர் உடனடியாகவே மேற்கொண்ட நடவடிக்கை மூலம் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### கடினமான காலத்தில்...

குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மதிப்புமிக்க அண்டை நாடான இலங்கையின் கடினமான காலங்களில் அவர்களின் தேவைகளையும் நிறைவேற்றினோம்.

இதற்கிடையில் கடன் நெருக்கடி உலகிற்கு, அதிலும் குறிப்பாக வளரும் நாடுகளுக்கு மிகுந்த கவலையளிக்கும் விடயமாக உள்ளது.

எனவே, கடனில் சிக்கியுள்ள குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு உதவ உறுதியான கட்டமைப்பை உருவாக்க, வரவிருக்கும் ஜி 20 மாநாட்டில் ஒருமித்த கருத்தை உருவாக்க இந்தியா எதிர்பார்க்கிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்."

### 148 பாரிய....

அசங்க கரவிட்ட தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்கும் வகையில், இலங்கை பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சர்வதேச பொலிஸார் இந்த சிவப்பு அறிவித்தல்களை பிறப்பித்துள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். சந்தேக நபர்களில் சிலர் ஏற்கனவே இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இந்தியாவில் 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அந்நாட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

திறந்த மற்றும் பொறுப்புமிக்க அரச துறைசார் கண்காணிப்புக்கான பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழு, பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

### லிட்ரோ Gas...

12. 5 கிலோ எடையுள்ள லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி அதன் புதிய விலை 3127 ரூபாவாகும் என்றும் அவர் தெரிவித்தார். எரிவாயு விலைச் சூத்திரத்தின் படி லிட்ரோ எரிவாயுவின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரிப்பையடுத்து நாட்டில் எரிவாயு விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, 12.5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரித்துள்ளதுடன் 5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 58 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1,256 ரூபாவாகும்.

2.3 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 587 ரூபாவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதே வேளை கடந்த ஜூன் மாதத்தில் சமையல் எரிவாயு விலைகள் குறைக்கப்பட்டதுடன் 12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாவால் குறைக்கப்பட்டது. அதற்கமைய அதன் புதிய விலை 3,186 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 5 கிலோ கிராம் கேஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 181 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 1281 ரூபாவாகவும் அதற்கமைய 2.3கிலோ கிராம் கேஸ்சிலிண்டர் ஒன்றின் விலை 83 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 598 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### மருத்துவ தவறால்....

ஒருவருக்கு ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், காய்ச்சல் காரணமாக குறித்த சிறுமி அனுமதிக்கப்பட்ட நிலையில் நோய் எதிர்ப்புக்காக ஊசி மூலம் மருந்து ஏற்றப்பட்டது.

ஊசி ஏற்றப்பட்ட மறுநாள் இரவு சிறுமி வலியினால் அவதிப்பட்ட நிலையில் குறித்த விடுதியில் கடமையில் இருந்த தாதியர்களிடம் சிறுமியின் நோய்நிலை தொடர்பில் தாயார் கூறிய போது, ஊசி ஏற்றப்பட்டால் நோய் இருக்கும் என விடுதியின் தாதியர்கள் பொறுப்பற்ற விதத்தில் பதில் அளித்ததாக பெற்றோர் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த சிறுமியின் கை நரம்பு பாதிக்கப்பட்டமை உணர்ந்த வைத்தியர்கள், அதனை அகற்ற வேண்டும் எனத் தெரிவித்த நிலையில் சனிக்கிழமை காலை சத்திர சிகிச்சை மூலம் குறித்த சிறுமியின் மணிக்கட்டுக்குட்பட்ட பகுதி அகற்றப்பட்டது.

சிறுமி அனுமதிக்கப்பட்ட விடுதியின் பொறுப்பு வைத்தியர் குறித்த தினத்தில் கடமையில் இருந்தாரா என்பது தொடர்பில் சந்தேகங்கள் எழும் நிலையில் விடுதியில் இருந்த தாதியர்களின் அலட்சியப் போக்கும் சிறுமியின் கை அகற்றப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளது என்ற குற்றச்சாட்டு வலுவாக முன்வைக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தியை தொடர்பு கொண்டு கேட்டபோது, இடம்பெற்ற சம்பவம் மன வேதனையை உண்டு பண்ணும் ஒரு சம்பவமாக பார்க்கிறேன்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய மூவர் அடங்கிய விசாரணை குழுவை நியமித்த நிலையில் மத்திய சுகாதார அமைச்சுக்கும் குறித்த விடயம் தொடர்பாக அறிவித்துள்ளேன்.

விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பாரபட்சமின்றி எடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

### A/L பரீட்சையை...

தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

அதில் "இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மாணவர்களின் உரிமைகள் மற்றும் நடைமுறை நிலைமைகளைப் புறக்கணித்து பரீட்சை திணைக்களம் செயற்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி அதிகாரிகள் தமது நிர்வாக அட்டவணைகளை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்ற இலக்குடன் செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### 2022 ஆம் ஆண்டிற்கான...

இணையதளம் மூலம் பெறுபேறுகளை பார்வையிட முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் 23 முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரை 2200 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம் பெற்றிருந்தது.

278,196 பாடசாலை ரீதியான மாணவர்களும் 53,513 தனியார் விண்ணப்பதாரர்களும் இம்முறை பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

எவ்வாறாயினும் விடைத்தாள் திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் காரணமாக விடைத்தாள் திருத்தும் நடவடிக்கைகள் காலதாமதமாகியிருந்தன. இந்நிலையில், பரீட்சை பெறுபேறுகளின்படி 166,938 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ளனர். இவர்களில் பாடசாலை ரீதியான மாணவர்கள் 149, 487 பேரும் தனிப்பட்ட பரீட்சாத்திகள் 17, 451 பேரும் உள்ளடங்குவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இம்முறை பாடசாலை விண்ணப்பதாரிகள் 59 பேரது பெறுபேறுகளும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் 25 பேரினது பெறு பேறுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, 2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் இதுவரை 323, 913 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும், கடந்த 2022 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பதாரிகள் 331, 709 பேர். பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் இரண்டாவது அல்லது மூன்றாவது தடவையாக பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்கள் விண்ணப்பிப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு, பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒன்லைன் மூலமாக விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.




# ஹற்றனில் 157 ஆவது பொலிஸ் தின நிகழ்வுகள்

**ஹற்றன் விசேட நிருபர்**



பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஹற்றன் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் ஹற்றன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

ஹற்றன் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெய்கம தலைமையில் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

மேலும் இரத்ததான நிகழ்வொன்றும் ஹற்றன் பொலிஸ் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

சேகரிக்கப்பட்ட இரத்தம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது.

அத்தோடு பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேட மதவழிபாடுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் ஹற்றன் பொலிஸ் தலைமையக பொலிஸ் பரிசோதகர்,சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.தவக்குமார் உட்பட மாணிக்கப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கண்டி பெரஹராவின் போது கைவிடப்பட்ட 250 தொன் கழிவுப்பொருட்கள் மீட்பு

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி பெரஹரா நடைபெற்ற 15 தினங்களில் மட்டும் நகரிலிருந்து 250 தொன் கழிவுப்பொருட்கள் சேர்ந்துள்ளதாக கண்டி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் பிரதான பொறியியலாளர் நாமல் திசாநாயக்கா தெரிவித்தார். கடந்த தினங்களில் அவை கண்டி, கொஹாகொடை கழிவு மத்திய நிலையத்துக்கு சேகரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பெரஹராவை பார்வையிட வந்தவர்கள் எடுத்து வந்த பிளாஸ்டிக் பொருட்கள், தண்ணீர் போத்தல்கள், உணவு பொதி செய்த பொலித்தீன் பைகள், விளையாட்டு பொருட்கள் என பலதரப்பட்ட கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். குறிப்பாக எஞ்சிய உணவுப் பொருட்கள் சுமார் 10 தொன் அளவிலும், பிளாஸ்டிக் பொருட்கள் 5 தொன் அளவிலும் தினமும் சேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# சப்ரகமுவ மாகாணத்தில் மண் சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மற்றும் கேகாலை மா வட்டங்களில் அறிவிக்கப்பட்டிருந்த மண் சரிவு அபாய எச்சரிக்கை நீடிக் கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதுடன்அநேகமான பல பிரதேசங்களில் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவுவதாக இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களின் மாவட்டச் செயலகங்கள் உறுதிப்படுத்தின.

இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான, கிரியெல்லை, அயகம, கேகாலை மாவட்டத்தின் புலத்கொஹுபிட்டிய, ருவன் வெல்ல, தெரணியகல, யட்டியாந்தோட்ட, தெஹியோவிட்ட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே மண் சரிவு ஆபத்து நிலவுவதாகவும் மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அபாய அறிவிப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சேவை நலன் பாராட்டு விழா



பறகஹதெனிய உப தபாலகத்தில் தபால் அதிபராக சேவையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற U.S.M உடுமுல்லவின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாக சேவை பாராட்டு விழாவொன்று அண்மையில் பறகஹதெனிய ஜாமி உல் அன்வர் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்நிகழ்வு பறகஹதெனிய ஜாமிஉல் அன்வர் பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

பறகஹதெனிய உப தபாலகம் சுமார் அரை நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்டது. 1973 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்தபாலகத்தில் 1994.12.10 ஆம் திகதி தமது அரசு பணியில் முதல் நியமனம் பெற்று இணைந்து சேவையாற்றியவர்தான் U.S.M உடுமுல்ல. அப்போதைய தபால் அதிபராகவிருந்த அல்ஹாஜ் N.P.M முபினுடன் இணைந்து தனது சேவையை ஆரம்பித்த அவர், சுமார் மூன்று தசாப்தங்கள் தனது பக்கசார்பற்ற சேவையை பறகஹதெனிய பிரதேச மக்களுக்கு வழங்கி அனைவர் மனங்களிலும் இடம்பிடித்தார். இவர் 2023/08/30 ஆம் திகதி தனது அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

பறகஹதெனிய தபாலகம் ஆரம்பத்தில் பறகஹதெனிய முற்சந்தியில் தபால் அதிபர் அல்ஹாஜ் முபீனுக்கு சொந்தமான கட்டடத்தில் இயங்கிவந்தது. 1998/12/16 ஆம் திகதி தபால் அதிபர் முபீன் ஓய்வு பெற்ற பின்னர் அவ்விடத்திலிருந்து தபாலகத்தை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் 1999 மார்ச் மாதம் முதல் சுமார் 11 வருடங்கள் வாடகை அடிப்படையில் தபாலகம் நடத்திச் செல்லப்பட்டது. இங்கே கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தபால் அதிபர் தனது சொந்த பணத்திலிருந்தே (ஊதியத்தில்) வாடகை கொடுக்க வேண்டும் என்பதாகும். இதனை அறிந்து கொண்ட முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மர்ஹூம் அல்ஹாஜ் M.S.M நிசாம் தம்பதியினர் தபாலகமொன்றை அமைப்பதற்கு தேவையான காணியை அன்பளிப்பு செய்தனர்.

இக்காணியை வர்த்தமானியில் அறிவித்து அரச உடமையாக்கி தபாலகத்துக்கு நிரந்தரமான கட்டடமொன்றையும் பெற்றுக் கொண்டனர்.

அதனைதொடர்ந்து தபாலகத்தில் தனியாக தமது சேவையை வழங்கியவர் மக்களுக்கு வழங்கியவர் தான் உடுமுல்ல. அவரது அயராத முயற்சியால் கடிதம் பங்கிடும் தபாலகமாக தரம் உயர்த்தப்பட்டு 3 தபால்காரர்கள் நியமிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து பறகஹதெனிய தபாலகம் மாவத்தகம மற்றும் உப தபாலகங்களை மீறி அதிக வருமானம் ஈட்டக்கூடிய ஒன்றாக முன்னேறியுள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான உப தபாலகங்களுக்கிடையிலான போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடத்தை இத்தபாலகம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தபால் அதிபர் உடுமுல்லவின் ஓய்வுக்கு பின்னர் அப்பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்கவும் உடுமுல்ல பல வழிகளிலும் உதவி புரிந்தார்.

# நாட்டை கட்டி எழுப்பும் பணியில் ஐதேக, பொதுஜன பெரமுன



**மாத்தளை சுழற்சி நிருபர்**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும், ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்து நாட்டை கட்டி எழுப்பும் பணியை முன்னெடுத்து வருகின்றன. இதனை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக விளையா ட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார். இரத்தொட்டை தேர்தல் தொகுதியில் இரத்தொட்டை , உக்குவளை கிராமத்திலுள்ள பொதுஜனபெரமுன கட்சி தலைவர்கள், இளைஞர்களுடனான சந்திப்பொன்று நேற்று மாத்தளையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார் . அவர் மேலும் உரையாற்றுகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நீண்டகால அரசியல் அனுபவம் மிக்க ஒருவர் அவர் நாட்டின் மற்றும் நாட்டு மக்களின் நலன் கருதி பல்வேறு பயன் தரும் திட்டங்களை தீட்டி நாட்டை கட்டியெழுப்புவதில் உரியமுறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இந்நாட்டில் இடம்பெற்ற 30 வருட யுத்தத்திற்குப்பின்னால் , ஈஸ்டர் தாக்குதல் , கொவிட் போன்ற நிலைமைகளால் நாட்டின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார துறைகள் யாவும் முடங்கின. சுற்றுலாத்துறையிலும் , உள்நாட்டுதேசிய வருமானத்திலும் வீழ்ச்சியேட்பட்டதுடன் எமது விளையாட்டு வீரர்களும் முடங்கிப்போனார்கள். இன்று இந்த நிலைமை நீங்கியுள்ளது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப்பொறுப்பேற்ற பின் இக்குறுகிய காலத்துக்குள் நாடு படிப்படியாக வளர்ச்சி கண்டு வருகிறது. இந்நிலையில் அரசாங்கம் என்ன நல்ல பணிகளை மேற்க்கொண்டாலும் எதிர்க்கட்சியினர் எதிராகவே செயற்படுகின்றனர். மக்களுக்கு தவறான கருத்துக்களைக்கூறி திசைதிருப்பமேற்கொள்ளும் நடவடிக்கைகள் கவலைக்குரிய விடயமாகும் . எவர் எதைச்சொன்னாலும் அரசின் நல்ல விளைவுகளை எதிர்காலத்தில் மக்கள் கண்டுகொள்வார்கள். இன்று விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் கவனத்தில் கொண்டு வரப்பட்டு இத்துறை முன்னேற்றமடைந்து வருகின்றது என்றார் .

# மூட்டுவாதம் தொடர்பான தடுப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு, உடற்பயிற்சி செயல் விளக்க நிகழ்வு







**அஷ்ரப் ஏ சமட்**



சர்வதேச இயன் மருத்துவ தினத்தை முன்னிட்டு செப்டெம்பர் 2 ஆம் திகதி முதல் எட்டாம் திகதி வரை இயன்மருத்துவ வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது. மூட்டுவாதத்தை(Arthritis) கருப்பொருளாக கொண்டு கொழும்பு பல்கலைக்கழக இயன் மருத்துவ இளங்கலைப் பட்டதாரிகள், இயன் மருத்துவ மாணவ நலன்புரிச் சங்கத்தினால் இது அனுஷ்டிக்கப்படுகிறது. செப்டெம்பர் 3ஆம் திகதி கொழும்பு விகார மகாதேவி பூங்காவில் பொது மக்களுக்கான இலவச விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் வளவாளர்களாக திருமதி தான்யா விஜேசிங்க (முகாமையாளர், இயன் மருத்துவ பிரிவு, டர்டன்ஸ் வைத்தியசாலை, கொழும்பு), நுவான் சிறொட்ரிகோ (உயர்நிலை இயன் மருத்துவர், லேடி ரிஜ்வே மருத்துவமனை, கொழும்பு), சுரேஷ் சதுரந்த (இயன் மருத்துவர் மத்திய மார்பு மருத்துவமனை, கொழும்பு), மகேந்திரன் ராஜ்கரன் (இயன் மருத்துவர்) ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர். மேலும் விகார மகாதேவி பூங்கா, கொழும்பு பொது நூலகம், கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடம் போன்றவற்றில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளிகள் இந்நிகழ்வில் பங்கேற்று பயனடைந்துள்ளார்கள். இதன் போது மூட்டு வாதத்தை தடுப்பதில் உடற்பயிற்சியின் பங்களிப்பு மற்றும் உடற்பயிற்சியின் போதான தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டு உடற்பயிற்சியின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது. இலவச மருத்துவ பரிசோதனைகளும் (குருதி குளுக்கோஸ் மட்டம், குருதி அமுக்கம்)மேற்கொள்ளப்பட்டது.மேலும் வருகைதந்தோரிடம் செப்டெம்பர் 8 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெறவிருக்கும் இலவச இயன் மருத்துவ சிகிச்சையகத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்நிகழ்விற்கான அனுசரணை texstretch மற்றும் viva chek ino நிறுவனங்களினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பொதுமக்கள் அனைவரையும் செப்டெம்பர் 8 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெறவிருக்கும் இலவச இயன் மருத்துவ சிகிச்சையகத்தில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.



# மனித குலத்தின் மாணிக்கம் அன்னை மரியாள்

## செப்டெம்பர் 8 அன்னையின் பிறந்த நாள்



அன்னை மரியாளின் பிறந்த நாள் விழாவினைச் செப்டெம்பர் 8 ஆம் திகதி நாம் கொண்டாடுகின்றோம்.

முதல் ஏவாள் கண்ணீர் வடித்தாள் மரியாளோ பூரிப்படைந்தார் ஏவாள் பாவியாகிய மனிதர்களை ஈன்றெடுத்தார் மரியாள் மாசு மருவற்ற ஒருவரை ஈன்றெடுத்தார்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று பாடுகிறார் கவிஞன்.

"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன் நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன் (எரே 1:5) என்று இறைவன் கருவிலேயே ஒவ்வொரு குழந்தையையும் திரு நிலைப்படுத்தி அருளுக்குரிய குழந்தையாக ஆக்குகின்றார்.

அன்னை மரியாள் கருவாகி உருவான போதே இறைவன் அவருக்குத் தனது அருளை நிறைவாக வழங்கினார்.

அவர் வாழ்வின் தொடக்கத்தில் பெற்ற அருளை நிறைவாக்கி வாழ்ந்தார் அன்னை மரியாளின் பிறப்பே ஒரு மிகப் பெரிய சிறப்பு. உலக மீட்பரை ஈன்றெடுப்பதற்கென்றே கடவுளால் அன்னை மரியாள் படைக்கப்பட்டாள்.

அன்னை மரியாளின் பிறப்பு ஒரு அற்புதமான ஒன்று. தாயின் அன்பையும் அரவணைப்பையும் ஆறுதலையும் அக்கறையையும் அர்ப்பணத்தையும் பரிந்து பேசுதலையும் பணிவிடை புரிவதையும் நிறைவு செய்வதையும் அன்னையின் பிறப்பு விழா நமக்கு உணர்த்துகின்றது.

அத்துடன் இந்த 'மரியாள் இறைவனின் தாய்'. அவர் மனித குலத்தின் மாணிக்கமாகத் தோன்றினார் என்ற இரு பெரும் கருத்துக்களைத் தருகிறது. புனித அகுஸ்தினார் மரியாளை ஏவாளுடன் ஒப்பிட்டு எழுதியுள்ளார்.

"நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த பெருவிழா வந்து விட்டது. மண்ணில் தோன்றிய விண்மலர் இவர் இவரிடமிருந்து தாள்வாள் புகழ் லீலீமலர் தோன்றியது இவருடைய வருகையால் தான் முதற் பெற்றோரிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட தூசி படிந்த மனித இயல்பு மாற்றம் அடைந்து மேன்மை பெற்றது. இதனால் இந்த இயல்பிற்கு ஏற்பட்ட இழுக்கு நீங்கியது.

முதல் ஏவாள் கண்ணீர் வடித்தாள் மரியாளோ பூரிப்படைந்தார் ஏவாள் பாவியாகிய மனிதர்களை ஈன்றெடுத்தார் மரியாள் மாசு மருவற்ற ஒருவரை ஈன்றெடுத்தார்.

முதல் ஏவாள் கொண்டு வந்தது தண்டனை மரியாள் கொண்டு வந்தது மனித குல மீட்பு. சாவின் தொடக்கம் ஏவாள். வாழ்வின் தொடக்கம் மரியாள். இரண்டாம் ஏவாள் அருள் வாழ்வைத் தரும்



சதா மாதாவானார். ஏவாளின் கீழ்ப்படியாமை மரியாளின் கீழ்ப்படிதலின் மூலம் அழிக்கப்பட்டது. ஏவாளின் அவிசுவாசம் மரியாளின் விசுவாசத்தினால் நலம் அடைந்தது. 'என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றி மகிழ்கின்றது" என்று ஆர்ப்பரித்து அன்று முதலாக ஏவாளின் புலம்பல்கள் முடிவுக்கு வந்தன.

சுவக்கீன் அன்னாள் இருவரும் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்தார்கள் தங்கள் செபத்தின் பயனாக பெற்ற குழந்தை தான் அன்னை மரியாள். கன்னிமரியாளின் பெற்றோர் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு வந்து குடியேறினர் என்றும் அங்கே தங்கள் வாழ்நாள் முழுவதும் இருந்தனர் என்றும் கிறிஸ்தவ மரபு கூறுகிறது. அவர்களின் குழந்தையை 'மரியம்' அல்லது 'மரி' என்றும் அழைத்தார்கள்.

அன்னை மரியாளின் பிறந்த நாள் விழாவினைச் செப்டெம்பர் 8 ஆம் திகதி நாம் கொண்டாடுகின்றோம். இதற்கு ஒரு கதை உண்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 8 ஆம் திகதி ஒரு துறவி இனிமையான இசையைக் கேட்டு மகிழ்ந்து ஆச்சரியப்படுவாராம். ஆனால் அந்த இசை எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் இருந்தார். எனவே பல ஆண்டுகள் கடவுளிடம் அதை வெளிப்படுத்தும் படி வேண்டினாராம். அப்பொழுது ஒரு நாள் அதே செப்டெம்பர் 8 ஆம் திகதி அவருக்கு அதைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டதாகக் கூறுகின்றார். அதாவது அந்த நாளில் அன்னைக்கு விண்ணகத்தில் வான தூதர்கள் பிறந்த நாள் விழா எடுத்து அன்னையைப் புகழ்ந்து பாடுகின்ற இசையைத் தான் அவர் கேட்டதாகவும் சொல்லுகின்றார்.

எனவே நாமும் நமது அன்னைக்கு இந்த உலகத்தில் விழா எடுக்க வேண்டும் என்று திருத்தந்தையிடம் சென்று சொன்னார். அப்பொழுது திருத்தந்தையாக இருந்த 14ம் ஆசீர்வாதப்பர் உலகத் திருச்சபை அன்னையின் பிறப்பு விழாவினைச் செப்டெம்பர் 8 ஆம் திகதி கொண்டாட அறிவித்தார்.

வழக்கமாக எந்தப் புனிதர்களின் திருவிழாவும் அவர் இறந்து விண்ணகத்தில் பிறந்த அந்த நாளைத்தான் திருச்சபை கொண்டாடுகிறது. ஆனால் திருச்சபையில் மூன்று பேருக்கு மட்டும் அவர்களுடைய பிறப்பு விழாவை கொண்டாடுகிறது. (இயேசு, மரியாள் திரு முழுக்கு யோவான்)

புதிய ஏவாள் மரியாள் கடவுள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உலகை மீட்பதற்குத் துணைபுரிந்தாள். எனவே படைப்புக்கள் அனைத்தும் புகழ்ப்பாக்களாலும் ஆடல்களாலும் ஆர்ப்பரிக்கட்டும் அன்னையின் பிறப்புத் திருநாள் விண்ணிலுள்ளோர் மண்ணில் உள்ளோர் யாவருக்கும் பொதுவானது.

**எல்.எஸ்**






# 'வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருக்கட்டும்'

## புனித அன்னை தெரேசாவின் திருவிழா இன்று

அன்பு, கருணை, இரக்கத்தை உலகில் விதைத்துச் சென்ற அன்பின் மொத்த உருவம் அன்னை தெரேசாவுக்கு கத்தோலிக்கத் திருச்சபை இன்று விழா எடுத்து மகிழ்கிறது.

"வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருக்கட்டும்" என்பது உலகப் புகழ்பெற்ற அன்னை புனித தெரேசாவின் தாரக மந்திரமாகும். வாய்ச் சொல்லில் மட்டுமின்றி வாழ்க்கையிலும் அதனை வாழ்ந்து காட்டிச் சென்றவர் அன்னை புனித தெரேசா.

இன்றைய நவீன உலகில் நமக்கு அதிகம் தேவைப்படுவது பணமோ,தொழில்நுட்பமோ, இராணுவ பலமோ கிடையாது. அன்பும் நேசமும் பாசமும் கருணையும் தான்.

இவை அனைத்திற்கும் ஒட்டு மொத்த இலக்கணமாய் வாழ்ந்து இன்று கோடிக்கணக்கானோர் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் அன்னை தெரேசா என்றால் அது மிகையாகாது. அன்பின் உருவம்

பிரார்த்திக்கும் உதடுகளை விட பணிவிடை செய்யும் விரல்களே சிறந்தவையாகும். அத்தகைய பணிவிடைகளைச் செய்து மேன்மை பெற்றவரே அன்னை தெரேசா.

"அடுத்தவருக்கு காட்டும் பரிவு ஆண்டவனுக்கு செய்யும் உதவி" என்கின்றது வேதம். கண்ணீரைத் துடைக்கும் விரல்கள் ஆறுதல் தரும் அன்பு அரவணைக்கும் நேசம் இவை எல்லாம் உலகின் உன்னதங்கள் ஆகும்.

இந்த உன்னதங்களை அர்த்தமுள்ள வாழ்க்கையாக வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து காட்டிய அற்புத மனிதர்களின் வரிசையில் அன்னை தெரேசா முதல் இடம் பெறுகின்றார்.

உலகிலும், நாம் வாழும் சமூகத்திலும், நாம் சந்திக்கும் மனிதர்கள் மத்தியிலும் அன்பும் கருணையும் இரக்கமும் உதவியும் அதிகதிகமாக தேவைப்படுகிறது. அன்னையைப் போன்று அவற்றை நாமும் தாராளமாக வழங்கி, அன்னையின் வாழ்க்கையை பின்பற்றி மனிதர் என்ற பொருளுக்கு மேலும் மகத்துவம் சேர்ப்போம்.

**லோரி செல்வா**

# உண்மை வாழ்வும் இலகு வாழ்வும்

## கிறிஸ்து கூறும் சவால் மிக்க வாழ்க்கை



புனித பாப்பரசர் 23ஆம் ஜோன் அவர்கள் வெளியிட்ட சுற்றுமடல்களில் இரண்டு சுற்று மடல்கள் புகழ் பெற்றவையாக விளங்குகின்றன.

1961ம் ஆண்டு அவர் வெளியிட்ட "Mater et Magistra", "அன்னையும் ஆசிரியரும்" என்ற சுற்றுமடலும், 1963ம் ஆண்டு, நல்மனம் கொண்ட உலகமக்கள் அனைவருக்கும் விடுக்கும் ஓர் அழைப்பாக அவர் வெளியிட்ட "Pacem in Terris" அதாவது, "உலகில் அமைதி" என்ற சுற்றுமடலும் புகழ்பெற்றவை. சமுதாயப் பிரச்சனைகள் பெருகி வந்த 1960களில், இவ்வுலகில், திருஅவை ஆற்றக்கூடிய, ஆற்ற வேண்டிய பணிகளை விளக்குவது "Mater et Magistra" என்ற சுற்று மடல். இம்மடல் வெளியான ஒரு சில வாரங்களில், ஒரு கத்தோலிக்க எழுத்தாளர்.பத்திரிகையில் விமர்சனம் ஒன்றை வெளியிட்டார். அந்த விமர்சனத்தின் தலைப்பு: "Mater s□, Magistra no!" "அன்னை... வேண்டும்; ஆசிரியர்...வேண்டாம்" என்று அமைந்திருந்தது. அளவுகடந்த அன்பைப் பொழியும் அன்னையாக திரு அவையை உருவகித்துப் பார்க்கையில் மனம் குளிர்கிறது. ஆனால், கண்டிப்புடன் பாடங்கள் புகட்டும் ஆசிரியராக திருஅவையை எண்ணிப் பார்க்கையில் கசக்கிறது. காயப்பட்டக் குழந்தைகளாக, அன்னையின் அணைப்பைத் தேடி, நாம் பலமுறை ஆலயங்கள், திருஅவையின் பணியாளர்களை அணுகி வந்துள்ளோம். ஆனால், காயப்பட்டதற்குக் காரணம் நாம்தான் என்று சுட்டிக்காட்டும் ஆசிரியராக திருஅவை ஒரு சில முறை மாறியபோது அந்தக் கண்டிப்பை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உலகம்.

காட்டும் தவறான போக்கிற்கு எதிராக விவிலியம் காட்டும் உன்னத வழிகளை, கசப்பான உண்மைகளை, திருத்தந்தையர்கள் தங்கள் மடல்கள் வழியே வெளியிடும் வேளைகளில், "அன்னை... வேண்டும்; ஆசிரியர்...வேண்டாம்" என்ற குரல் மீண்டும், மீண்டும் எழுந்துள்ளது. 'அன்னை' என்ற இலக்கணத்தில், 'ஆசிரியர்' என்ற அம்சமும் இணைந்துள்ளது. எந்த ஓர் அன்னையும் தன் குழந்தைக்கு அளவுகடந்த அன்பை மட்டுமே எந்நேரமும் பொழிந்தால், அக்குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு அந்த அன்பே ஒரு தடையாக அமையும். தவறும்போது, தடுமாறும்போது அக் குழந்தைக்குத் தகுந்த வழியைக் காட்டுவதும் அன்னையின் பொறுப்பு. அவ்வேளைகளில் கரிசனை கலந்த கண்டிப்புடன் செயலாற்றும் ஓர் ஆசிரியராக அன்னை மாறவேண்டும். சென்ற ஞாயிறு, அன்னையாக விளங்கிய இயேசு இந்த ஞாயிறு ஆசிரியராக மாறுகிறார். 'நான் யார் என நீங்கள் சொல்கிறீர்கள்?' என்று கேட்ட இயேசுவுக்கு, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று உயர்ந்ததொரு விசுவாச அறிக்கையை வெளியிட்டார் பேதுரு. இயேசு அவரிடம், "யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை; மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன்; உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின்மேல் என் திருச் சபையைக் கட்டுவேன்" (மத்தேயு 16:1718) என்று பேதுருவை வாழ்த்தினார் இயேசு. இந்த வாழ்த்துரையைக் கேட்டு பேதுரு ஒரு கனவுப் பல்லக்கில் அமர்ந்து பவனி வந்திருப்பார். ஆனால், இது நடந்து ஒரு சில நிமிடங்களில், "என் கண்முன் நில்லாதே சாத்தானே நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய்" (மத்தேயு 16:23) என்று இயேசு, பேதுருவை அனல் தெறிக்கும் வார்த்தைகளில் கடிந்துகொண்டார். ஆனந்தத்தில் மிதந்த பேதுரு அதிர்ச்சியில் உறைந்து நின்றிருப்பார். கனவில் தான் மிதந்துவந்த பல்லக்கிலிருந்து.படுகுழியில் விழுந்ததைப் போல உணர்ந்திருப்பார். பல்லக்கில் மிதந்ததற்கும் படுகுழியில் விழுந்ததற்கும் பேதுருவே காரணமாகிறார். இயேசுவை, 'மெசியா' என்று அறிக்கையிடுவதில் பெருமை அடைந்தார் பேதுரு. 'மெசியா' என்ற சொல்லுக்கு, 'அர்ச்சிக்கப்பட்டவர்' அல்லது, 'அருள்பொழிவு செய்யப்பட்டவர்'



என்பது பொருள். இஸ்ரயேல் அரசர்கள் அனைவரும், அருள்பொழிவு செய்யப்பட்டவர்கள் என்பதை பேதுரு நன்கு அறிந்தவர். எனவே, அவர் இயேசுவை 'மெசியா' என்று அறிக்கையிட்டபோது அவர் விரைவில் ஓர் அரசனாக அருள்பொழிவு பெறுவார் என்று உள்ளூர எண்ணியிருக்கலாம். அதுவும், விரைவில் தாங்கள் எருசலேம் நகரில் நுழைந்ததும் இந்தக் கனவு நனவாகி இயேசு அரியணை ஏறுவார் என்ற எண்ணங்கள் அவர் உள்ளத்தை நிறைத்திருக்கலாம்.

பேதுரு சொன்ன வார்த்தைகளை ஆமோதிப்பதுபோல இயேசுவும் அவரை மனதாரப் புகழ்ந்தார். இயேசுவின் புகழுரை பேதுரு அவரைப் பற்றிக் கொண்டிருந்த கனவை உறுதிப்படுத்தியிருக்கும். அந்நேரத்தில், அங்கு ஒரு திடீர் மாற்றம் நிகழ்கிறது. இயேசு தான் எப்படிப்பட்ட 'மெசியா' என்பதையும், தனக்கு எருசலேமில் காத்திருக்கும் வரவேற்பைப் பற்றியும் விளக்க ஆரம்பிக்கிறார்: இயேசு தாம் எருசலேமுக்குப் போய் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் பலவாறு துன்பப்படவும் கொலை செய்யப்படவும், மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதைத் தம் சீடருக்கு அந்நேரம் முதல் எடுத்துரைக்கத் தொடங்கினார். (மத்தேயு 16:21) என்று கடந்த ஞாயிறு நற்செய்தி தொடங்குகிறது. இந்த வார்த்தைகள் பேதுருவுக்கும் சரி நமக்கும் சரி நற்செய்தியாக ஒலிக்கவில்லை. இந்தக் கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாத பேதுரு நடைமுறை வாழ்வுக்கு ஏற்ற சில அறிவுரைகளை இயேசுவுக்குத் தரவிழைகிறார். இயேசுவுக்கு எவ்வித ஆபத்தும் வரக்கூடாது என்ற ஆதங்கத்தில் பேதுரு கூறிய அறிவுரைகளுக்கு இயேசுவின் பதில் ஏன் இவ்வளவு கோபமாக வெளிவந்தது என்பதைப் புரிந்துகொள்வது கடினமாக உள்ளது. தன் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான பேதுருவை, இயேசு 'சாத்தானே' என்றழைப்பது, நம்மில் சில சிந்தனைகளைத் தூண்டுகிறது. தம் பணிவாழ்வின் துவக்கத்தில் இயேசு, பாலை நிலத்தில் சாத்தானைச் சந்தித்தார். அங்கு சாத்தான் தந்த மூன்று சோதனைகளையும், மேலோட்டமாகப் பார்த்தால், அவை 'நல்ல' சோதனைகள் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். கொலை, கொள்ளை, ஏமாற்றுதல் என்று தவறான செயல்களைச் செய்யச் சொல்லி, சாத்தான், இயேசுவைத் தூண்டவில்லை. குறுக்கு வழிகள், எளிதான வழிகள், உலகோடு சமரசம் செய்துகொள்ளும் வழிகள் இவையே சோதனையாக வந்தன. அதுவும், "நீ இறைமகன் என்றால், இவற்றைச் செய்யும்" என்ற ஒரு தூண்டிலைப் போட்டு, இயேசுவைப் பிடிக்க சாத்தான் முயன்றது. கடந்த ஞாயிறு நற்செய்தியிலும் அந்த பாலை நில சோதனைகளின் எதிரொலிகளை நாம் உணரலாம்.

தன் பணிவாழ்வின் தொடக்கத்தில் சாத்தான் வழியே வந்த சோதனைகளைச் சந்தித்த இயேசுவுக்கு, பணிவாழ்வின் இறுதிக் கட்டத்தில், அவர் எருசலேமை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில், தன் நெருங்கிய நண்பர் வழியே சோதனை வந்தது. பேதுரு இயேசுவுக்கு வழங்கிய அறிவுரையும் தவறான அறிவுரை அல்ல. இயேசுவுக்கு எவ்வித ஆபத்தும் நேரக்கூடாது என்ற நல்ல நோக்கத்துடன், ஆதங்கத்துடன் பேதுரு கூறிய அறிவுரை அது; நடைமுறைக்கு ஏற்ற அறிவுரை. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், "இயேசுவே, நீர் ஏன் தேவையில்லாத பிரச்சனைகளில் மாட்டிக் கொள்ளவேண்டும்? உலகத்தோடு ஒத்துப்போக வேண்டியதுதானே!" என்ற பாணியில் பேதுரு அறிவுரை வழங்கினார். நமக்கு வரும் பெரும்பாலான சோதனைகளும் இப்படிப் பட்டவையே. கொலைசெய்யவோ, கொள்ளை அடிக்கவோ, ஊழலில் ஊறிப் போகவோ நமக்குச் சோதனைகள் வருவதில்லை. உலகத்தோடு ஒத்துப் போவது, எளிய வழிகளை, குறுக்கு வழிகளைத் தேடுவது, அங்கும், இங்கும் சிறிது 'அட்ஜஸ்ட்' செய்து, அநீதிகளோடு சமரசம் செய்துகொள்வது என்பவையே, நமக்குப் பெரும்பாலான நேரங்களில் வரும் சோதனைகள். நமக்கு நெருங்கியவர்களிடமிருந்து இச்சோதனைகள் வரும்போது, இன்னும் சிக்கலாக மாறிவிடுகின்றன. அவர்கள் நம்முடைய நன்மைக்காகத்தானே சொல்கிறார்கள் என்ற போராட்டம் எழுகின்றது. உண்மையான நீதி, அமைதி, அன்பு ஆகிய உயரிய சிகரங்களை அடைய குறுக்கு வழிகளோ, எளிதான பாதைகளோ கிடையாது. கடினமானப் பாதைகளில், தனித்துச் செல்லும் பயணங்கள் இவை. இத்தகையதொரு பயணத்தை இயேசு மேற்கொண்டார். அவரைப் பின்பற்ற விழைவோருக்கும் இத்தகையப் பயணமே காத்திருக்கிறது என்பதை கடந்த ஞாயிறு நற்செய்தியின் இறுதியில் இயேசு ஒரு சவாலாக நம்முன் வைக்கிறார்: பின்பு இயேசு தம் சீடரைப் பார்த்து, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவர். மாறாக என்பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவார்" என்றார். 'சவால்' என்ற வார்த்தை நமக்குள் வீர உணர்வுகளை உருவாக்கலாம். நெருப்பில் குதிப்பது எளிது. எதோ ஒரு வேகத்தில் குதித்துவிடலாம். ஆனால், தொடர்ந்து நெருப்பில் நடந்து, அல்லது, அந்த நெருப்புடன் போராடி, அதை வெல்வது மிகவும் கடினம். இறைவாக்கினர்கள் பலர், இந்தப் போராட்டத்திற்கு உட்படுத்தப் பட்டனர். அவர்கள் வாழ்ந்த சமுதாயம் சரியில்லை என்பதை, துணிவுடன் எடுத்துச் சொல்லும் பணியை இறைவன் அவர்களுக்கு அளித்தார்.

**-அருட்பணி எல்.எக்ஸ். ஜெரோம்**

# கிழக்கின் குரல்



# நீதிமன்றங்களின் சட்டவாட்சி, அதிகாரங்களை கேள்விக்குட்படுத்துவதை ஏற்கவே முடியாது

நீதிமன்றத்தின் சட்டவாட்சி, அதிகாரங்களை சில பேர்வழிகள், கேள்விக்குட்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளதாக, உச்ச நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் மற்றும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு, சாய்ந்தமருது "லீமெரிடியன் மண்டபத்தில் (03) இடம்பெற்றது. இதன்போதே , அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாதவது;

நீதிமன்றங்களும், சட்டத்துறைகளும் சவால்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நீதிமன்றத்தின் சட்டவாட்சி மற்றும் அதிகாரங்களை சில பேர்வழிகள் சவாலுக்குட்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.எனவே இது தொடர்பில் நீதிபதிகள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

நீதிமன்ற அவமதிப்பு என்பது நீதிபதிகளை அவமதிக்கவில்லை. மாறாக, நீதிமன்ற ஆட்சியையும், அதிகாரத்தையும் கேள்விக்கு உட்படுத்துகிறது. எனவே, நீதிமன்ற அவமதிப்பு என்பதை நீதிபதிகள் தனிப்பட்ட விடயமாக எடுக்கத் தேவையில்லை" என்றார்.

இதன் போது ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் எழுதிய 'Law of Actions' என்ற நூலின் அறிமுகமும் இடம்பெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ. றெளசுல் ஹாதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாய சபை நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர், கல்விமான்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருக்கோவிலில் பொலிஸ் தின நிகழ்வு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பங்கேற்பு



(காரைதீவு குறூப் நிருபர் )

இலங்கையின் 157ஆது பொலிஸ் தினத்தை முன்னிட்டு திருக்கோவில் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஜெயபத்ம பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.பத்மகுமார தலைமையில் (03) இந் நிகழ்வு இடம்பெற்றது.

திருக்கோவில் பொலிஸ் நிலையத்திலிருந்து கலாசார பாரம்பரிய ஊர்வலத்துடன் பூசைப் பொருட்கள் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஆலயத்தில் விஷேட பூசை நிகழ்வுகளை ஆலய குரு சிவஸ்ரீ கேயூரநாத சர்மா நடாத்தினார். உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கே.தேசப்பிரிய,திருக்கோவில் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் விநாயகபுரம் வலம்புரி அமைப்பினர், அறநெறி மாணவர்கள், நலன் விரும்பிகள், பொலிஸ் குடும்பத்தினர் எனப் பலரும் இதில்,கலந்து கொண்டனர்.அறநெறி பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வும் இங்கு இடம் பெற்றது.

# ஆயித்தியமலை புனித சதாசகாய அன்னை திருத்தலத் திருவிழா





(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

மட்டக்களப்பு ஆயித்தியமலை புனித சதாசகாய அன்னை திருத்தலத்தின் 69 ஆவது ஆண்டு திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்றது.

திருத்தந்தை பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி பிறையன் உடைக்வே, மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை,திருத்தலத்தின் நிர்வாகி அருட்தந்தை இருதயநாதன் ஜெமில்டன், மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை அலெக்ஸ் றொபட் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

நீர்கொழும்பு, கொழும்பு கொச்சிக்கடை உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான அடியார்கள் இத்திருவிழாவில், கலந்து கொண்டனர். திருவிழாவையொட்டிய பாதயாத்திரை கடந்த சனிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு புளியந்தீவு புனித மரியான் பேராலயம் மற்றும் செங்கலடி நிக்லஸ் தேவாலயத்திலுமிருந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

# இறக்காமம் பிரதேசத்தில் பொலிஸ் நிகழ்வுகள்



(இறக்காமம் தினகரன் நிருபர்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157வது வருட பூர்த்தியை முன்னிட்டு, இறக்காமம் பிரதேச கலாசார மண்டபத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இறக்காமம் பொலிஸ் நிலையம் இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது.

இறக்காமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். வை. ஜௌபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றி யுத்தத்தின் போது உயிர்நீத்த மற்றும் ஊனமுற்ற இப்பிரதேசத்தை சேர்ந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.மேலும், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பரிசில்கள் வழங்கி பாராட்டப்பட்டனர். இதன்போது நாட்டுக்காக உயிர்நீத்த முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# கைத்தொலைபேசிகளை திருடி விற்பனை செய்த கும்பல் கைது



(மருதமுனை தினகரன் நிருபர்)

கைத்தொலைபேசிகளை திருடி விற்பனை செய்து வந்த கும்பலை கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இக்கும்பல்,நீண்டகாலமாக கைத்தொலை பேசிகளை திருடி விற்பனை செய்து வந்துள்ளது. அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பல்வேறு இடங்களில், தொலைபேசிகள் களவாடப்பட்டமை தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

இம்முறைப்பாடுகளின் அடிப்படையில் செயற்பட்ட கல்முனை பொலிஸ் பிரிவு, இதனுடன் தொடர்புடைய இருவரை கைது செய்தது. கைதாகிய இருவரும் தடுத்து வைக்கப்பட்டு, ஏனைய நபர்களை கைது செய்வதற்குரிய விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். வைத்தியசாலைகள், நோயாளிகள் ,பார்வையாளர்கள் மற்றும் பஸ் வண்டிகளில் பயணிப்போரை இலக்குவைத்து,இவர்கள் இத்திருட்டில் ஈடுபட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. இக்குழுவுக்கு தலைவராக 32 வயதுடைய இளைஞர் செயற்பட்டு வந்துள்ளார்.கல்முனை புறநகர் பகுதியில் ஆசிரியர் ஒருவரை இரண்டாவது திருமணம் செய்த இவர், இத்திருட்டுக் குழுவை வழிநடத்தியுள்ளார்.

# தற்கொலைகளை தடுக்கும் விழிப்புணர்வு சைக்கிளோட்டம்

(றொட்டவெவ குறூப் நிருபர்)

தற்கொலைகளை தடுக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.இதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம், (03) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையை வந்தடைந்தது. சைக்கிளோட்ட வீரர்களை திருகோணமலை றொட்டரிக் கழக அங்கத்தவர்கள் வரவேற்றனர்.

தைரியம், இரக்கம், பொறுப்பேற்றல் என்ற பெயரையுடைய, தன்னார்வ தொண்டர் நிறுவனம், ரோட்டரிக்கழக அனுசரணையுடன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை 11 பேராக உள்ளது.

தற்கொலை முயற்சிகளை தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்தவும் தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகைகளை ஏற்படுத்தவுமே, இவ்விழிப்புணர்வூட்டல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"நான் தனிமையாக இல்லை என்னால் பேச முடியும்" எனும் செயற் திட்டத்தின் கீழ் 1333 என்னும் தொலைபேசி இலக்கத்தை பொதுமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, இலங்கையின் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தொடர் துவிச்சக்கர வண்டியோட்ட நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நுரைச்சோலை விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க கலந்துரையாடல்

(திராய்க்கேணி தினகரன் நிருபர் )

அக்கரைப்பற்று பிரதேச நுரைச்சோலை விவசாயிகளின் காணி தொடர்பான பிரச்சினைகளை கண்டறிவதற்கு,விஷேட கலந்துரையாடல் நடைபெற்றது.அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் (01) நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட செயலாளர் கலந்து கொண்டார்.

நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த விவசாயிகளின் காணி தொடர்பான பிரச்சினைகளை குறித்து இதில் கவனம் செலுத்தப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது காதி நீதிமன்றம் சாதனை; 18 வழக்குகளில் 15 சுமுகமாக தீர்த்து வைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது காதி நீதிமன்றத்தில் விவாகரத்துக்காக விண்ணப்பிக்கப்பட்ட 18 வழக்குகளில், 15 வழக்குகள் சமரசம் செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது காதி நீதிமன்றத்தின் காதி நீதிபதியாக குறுகிய காலத்தில் அதாவது கடந்த 4 மாதங்களுக்கு முன் புதிதாக நியமனம் பெற்ற அஹமட் லெப்பை ஆதம்பாவாவின் அயராத முயற்சியால் இது ,சாத்தியமாகியுள்ளது.

இதில் பணியாற்றும் ஜூரிமார்கள் மற்றும் நிர்வாகத்தின் முழுமையான ஒத்துழைப்பும் இச்சாதனையை நிலைநாட்ட பெரும் பங்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த காலங்களில் இந்த விவாகரத்து வழக்குகள் பிரியும் தறுவாயிலிருந்தன. காதி நீதிபதி மற்றும் நிர்வாகத்தினர் சமயோசித முறையில் முயற்சித்ததன் பயனாக குடும்பங்கள் பிரிவது தடுக்கப்பட்டது. இதில், ஒரு வழக்கு கடந்த 8 வருடங்களாக விவாகரத்து கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே பேசப்பட்டு வந்தது. இந்த விவாகரத்து வழக்கில் திருப்புமுனையை ஏற்படுத்தி, பிரிந்திருந்தவர்களைச் சேர்த்து வைத்தமையானது சாய்ந்தமருது பிரதேசத்தில் பிரபலமாக பேசப்படுகிறது. இச்சிறப்பான பணியைச் செய்து வருகின்ற சாய்ந்தமருது காதி நீதிபதி உட்பட அதில் பணியாற்றும் ஜூரிமார்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# சின்னம் சூட்டும் நிகழ்வு

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை சம்பு நகர் அக் / அல் மினா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஐ.ஹாசீம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சமூக சேவகர் தொழிலதிபர் சட்டத்தரணி முஹம்மட் அஜ்மீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். தெரிவு செய்யப்பட்ட மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், ஒழுக்கக் குழுவின் தலைவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஏ.எம்.அறூஸ் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சமூக வலைத்தள செயற்பாடுகளை சீரமைக்க விசேட கலந்துரையாடல்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

சமூக வலைத்தளங்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட பிரகடனம், அதில் மேலும் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்ற இக்கலந்துரையாடலில்,ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஒழுங்கமைப்பில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

நாட்டின் ஊடக நிறுவனங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் அடங்கலாக 19 அமைப்புக்கள் கையெப்பமிட்ட சமூக வலைத்தளங்கள் தொடர்பான பிரகடனம் 2019 இல், வெளியிடப்பட்டது.

சமூக வலைத்தளங்களை பொறுப்பு மிக்க விதத்தில் பயன்படுத்தல், ஒழுக்க நெறிக் கோவையை அறிமுகம் செய்தல் மற்றும் டிஜிட்டல் தகவல் துறை தொடர்பான அறிவினை பயன்படுத்துதல், சமூக அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாசார ரீதியிலான உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு அங்கீகரித்தல், போன்ற பல விடயங்கள் இதில்,கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் ஆய்வாளரும் சமூக ஊடக செயற்பாட்டாளருமான சம்பத் சமரக்கோண், கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இ.தேவ அதிரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம்

*மாங்குளம் குருப் நிருபர்*

மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 40 கடற்றொழிலாளர்களுக்கு தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 40 கடற்றொழிலாளர்களுக்கு தலா 45 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (04) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் தெற்கு அளம்பில் தெற்கு, அளம்பில் வடக்கு, செம்மலை கிழக்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு உள்ளிட்ட கிராம அலுவலகப் பிரிவுகளைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 40 கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 172 கடற்றொழிலாளர்களுக்கு உதவித்திட்டம் வழங்கப்படவுள்ளன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் கண்காணிப்பு அலுவலர் சூ.செ.ஜான்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளாணந்தம் உமா மகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சி.குணபாலன், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வடக்கின் உதயம்

# மன்னாரில் குருதிக்கொடை முகாம்



*மன்னார் குறூப் நிருபர்*

மன்னார் வங்காலை புனித அன்னம்மாள் ஆலய பங்கு மக்களுடன் வன்னி மண் அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் குருதிக்கொடை முகாம் நேற்றுமுன்தினம் (3) வங்காலை புனித அன்னம்மாள் ஆலய வளாகத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 2.00 மணி வரை நடைபெற்றது.

'உதிரத்தை தானம் செய்! உதிரப்போகும் ஒரு உயிர் உதிராமல் இருக்க காவல் செய்' என்ற நோக்கத்துடன் நடைபெற்ற இரத்ததான முகாமுக்கு நிதி அனுசரணை யாழ்.மதர் கெயார் வைத்தியசாலை உரிமையாளர் வைத்திய கலாநிதி குலசிங்கம் சுரேஷ் குமார் வழங்கி வைத்தார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை இரத்த வங்கியினர் உதவிகளை வழங்கியிருந்தனர். சுமார் 50ற்கும் மேற்பட்டோர் குருதி தானம் செய்திருந்தமை விசேட அம்சமாகும்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞனொருவன் உயிரிழந்துள்ளார்.

சில்லாலை பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் வசீகரன் (வயது 20) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 765 கிராம் கஞ்சாவுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மண்டைதீவு பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.சுபசிங்க தலைமையிலான குழுவினரே சந்தேக நபரை கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நெடுந்தீவு கடற்கரையில் 4 கடலாமைகளின் உடல்கள் மீட்பு

*கரவெட்டி தினகரன் நிருபர்*

நெடுந்தீவு கடற்கரையில் நான்கு கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் ஒரு மாதத்துக்குள் 35 கடலாமைகளின் உடல்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி முதல் மேற்கு கடற்கரையில் 31 கடலாமைகளின் உடல்கள் இறந்த நிலையில் கரையொதுங்கின. மேலும் மூன்று கடலாமைகள் கடுமையான பாதிப்புக்குள்ளான நிலையில் மீட்கப்பட்டு அவற்றுக்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. வெடி மருந்தை பயன்படுத்தி மீன்பிடித்தலே இதற்கான காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடலாமைகளில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளிலிருந்தே இது தெரியவந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# யோகக் கலை அடிப்படை கற்கைநெறி

*யாழ். விசேட நிருபர்*

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் காலை 8.00 மணிவரை நடைபெறும். இவ்வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடு இன்றி கலந்துகொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக பூர்த்திசெய்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

# யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய மாட்டு வண்டி சவாரி!



யாழ்ப்பாணம் மட்டுவில் ஐக்கிய மக்கள் கழகத்தின் ஏற்பாட்டில், இளைஞர்களை ஒன்றிணைக்கும் மாட்டுவண்டிச்சவாரி நேற்றையதினம் கழகத்தின் இணைப்பாளர் ப.கஜிதரன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட மாட்டு வண்டி சவாரிக்காக, 34 மாட்டு வண்டி கழக உறுப்பினர்கள், 155 காளை மாடுகளுடன் பங்குபற்றியிருந்தனர்.

இந்த சவாரியை கண்டுகளிப்பதற்காக யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பார்வையாளர்கள் வருகைதந்தனர்.

# அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் மாவட்ட குழு கூட்டம்



*தலைமன்னார் விசேட நிருபர்*

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னனி மன்னார் மாவட்ட குழுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மன்னார் ஆகாஷ் ஹோட்டலில் நடைபெற்றது.

இதில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகரும் களுத்துறை பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மரைக்கார், பலஸ்தீன் பிரதி உயர் ஸ்தானிகர் ஹீசாம் அபூ தாஹா, முன்னணியின் தேசியத் தலைவர் லுக்மன் சஹாப்டீன், இவ்வமைப்பின் மன்னார் மாவட்டத் தலைவர் எச்.எம்.அவ்ராஸ், கடந்த கால தலைவர் றசீட் எம் இம்தியாஸ், ஆலோசகரும் பயிற்றுவிப்பாளருமான எம்.எஸ்.எம்.இர்ஹான் ஷராவி மற்றும் வளவாளராக கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசிரியர் எம். மகேஷ் ஆகியோர் உட்பட பல முக்கியஸ்தர்கள் அதில் கலந்து கொண்டனர்.

மேலும் அமர்வில் இளைஞர்களின் தலைமைத்துவ மற்றும் தனியாள் ஆளுமை விருத்தி தொடர்பான கருத்துக்கள் சார்ந்த உரைகள் இடம்பெற்றன. இக்கூட்ட அமர்வில் 150 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.



மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாமொன்று நடைபெற்றது. (படம்: யாழ். விசேட நிருபர்)

# பேசாலை சங்கவி கலையரங்கில் 'கலை விழி விருது விழா–2023'

மன்னார் மாவட்டத்தில் கலை சேவைகளை செய்து கலைத்துறைக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வரும் ஒரு அமைப்பு விழிகள் கலா முற்றம். இந்த விழிகள் கலா முற்றம் என்ற அமைப்பு எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பேசாலை சங்கவி கலையரங்கில் மூத்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழாவொன்றை நடத்தவுள்ளது. சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸின் பேராதரவுடன் இந்த விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

விழிகள் கலா முற்றம் நடாத்தும் இந்த விருது வழங்கும் விழாவில்

மூத்த கலைஞர்களுக்கு விருது வழங்குவதுடன் கலா விபூஷண் விருது பெற்றோரை கௌரவித்தலும் நடைபெறும். 'மாநாகன்' நாட்டுக்கூத்து மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெறும்.

## இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்

# யாழில் இருந்து இந்தியாவிற்கு படகில் சென்று பேச தீர்மானம்

### யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் தெரிவிப்பு

*பருத்தித்துறை தினகரன் நிருபர்*

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்தனர்.



இந்தியாவின் தமிழகத்துக்கு 14 பேர் கொண்ட வடபகுதி மீனவர்கள் கடல் வழியாக படகு மூலம் சென்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பாஜக தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரை சந்தித்து பேச தீர்மானித்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

நேற்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஊடக சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ்,

கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டதுடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜர் ஒன்றை கையளித்தோம். மகஜர் கையளித்து 14 நாட்களுக்குள் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடில் காத்திரமான நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்த நிலையிலேயே குறித்த முடிவை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

14 நாட்களுக்குள் தீர்வு காணப்படாவிடில் அடுத்து வரும் நாட்களில் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# யுத்தத்தால் சேதமடைந்த ஆலயத்தை புனரமைக்க இராணுவத்தினர் உதவி

*ஓமந்தை விசேட நிருபர்*



யுத்தத்தால் பெரிதும் சேதமடைந்த தேவிபுரம் ஆதிசிவலிங்க விநாயகர் (காட்டுப் பிள்ளையார்) ஆலயம் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் (3) கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தேவிபுரம் ஆதிசிவலிங்க விநாயகர் (காட்டுப்பிள்ளையார்) ஆலய பரிபாலனசபையினர், இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் புனரமைக்கப்பட்டு விநாயகர் விஞ்ஞாபன நிகழ்வானது நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பமாகியது.

நேற்று (3) இரவு கிரியைகளை தொடர்ந்து இரவு 10 மணி தொடக்கம் நேற்று (4) காலை 10 மணிவரை எண்ணெய்க்காப்பு வைபவம் நடைபெற்று பிரதம குருக்களான கௌரி சங்கரசர்மா தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தில் 68 ஆவது படை பிரிவின் இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனறல் கஸ்தூரி முதலிகே, 682 பிரிக்கேட் கொமாண்டர் கேணல் ரொஹான், 3 ஆவது காலாட்படை படைப்பிரிவின் அதிகாரி ஆர்.எம்.ஆர். ரணவீர மற்றும் இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் கிராம மக்கள், பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தற்கொலைகளை தடுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு

### ஓய்வுநிலை ஆசிரியர் த. பரமானந்தம்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

மாணவர்களிடையே தற்கொலைகள் அதிகரிப்பதை தடுக்க வேண்டிய மிக பொறுப்பை ஊடகங்கள் ஏற்க வேண்டுமென ஓய்வுநிலை ஆசிரியரும்,கொடிகாமம் நட்சத்திர மஹால் உரிமையாளருமான த.பரமானந்தம் தெரிவித்துள்ளார். கொடிகாமத்தில் அண்மையில் நடைபெற்ற "மூச்சு" குறுந்திரைப்பட ஆரம்ப நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக பல்கலைக்கழக மாணவர்களிடையே தற்கொலைகள் அதிகரித்துவருகின்றது. தற்கொலை எண்ணத்திலிருந்து விடுபடுவது எப்படி? என்பது தொடர்பில் பாடசாலைகளில் கற்பிக்க மாட்டார்கள். பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்க மாட்டார்கள். எனவே தற்கொலை எண்ணத்திலிருந்து மாணவர்களை காப்பாற்ற வேண்டும்.



பாடசாலைகள், பல்கலைக்கழகங்களுக்கு அப்பால் ஊடகங்கள் தான் மாணவர்களின் மனநிலையை மாற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று தானும் தன் குடும்பமும் என வாழ்பவர்களே அதிகம். சமூக அக்கறையோடு செயற்படுபவர்கள் மிகக் குறைவு. குறுந்திரைப்படங்கள் மாணவர்களின் மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வல்லன. எனவே குறுந்திரைப்படங்கள் உள்ளிட்ட ஊடகங்களில் நல்ல பல செய்திகளை விதைத்து மாணவர்களுடைய மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

பெரும்பாலான இந்திய குறுந்திரைப்படங்கள் ஒரு குடும்பத்தை எப்படி சீரழிப்பது போன்ற தீய எண்ணங்களை விதைக்கின்றன.

இவை சில சீர்கேடுகள் இடம்பெற காரணமாக அமைகின்றன.

குறுந்திரைப்படம், திரைப்படம் ஊடாக மக்களுக்கு நல்ல செய்திகளை கொடுக்க வேண்டும். சீரழிந்து செல்லும் எமது சமூகத்துக்கு நல்ல செய்திகளை கொடுத்து சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும். இன்று போதைவஸ்து பாவனை உக்கிரமடைந்துள்ளது. மாணவர்களது நடத்தையிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டது.

எனவே பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு மிக அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

# விலைமனு கோரல்

புத்தளம் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்குரித்தான கமநல சேவை நிலையத்திற்குச் சொந்தமான பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட விவசாய துணைப்பாகங்கள், அப்புறப்படுத்தல்கள் தொடர்பான விபரங்களை கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் www.agrariandept.gov.lk எனும் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய இணையதளத்தைப் பரீட்சித்துப் பார்த்து குறித்த விலைமனுக்களை நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

**ஜீ.கே.எஸ். புஷ்பகுமார,**
**கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர்,**
**புத்தளம்.**

# INVITATION FOR BIDS

## KALMUNAI MUNICIPAL COUNCIL

1. The Kalmunai Municipal Council has received funds from the Ministry of Water Supply and Estate Infrastructure Development for the **Construction Work listed in the table below.**
2. The Chairman Local Authority Procurement Committee on behalf of the **Kalmunai Municipal Council** invites sealed bids from eligible and qualified bidders for the **Construction Work** as described in the table below.
3. Bidding will be conducted through **National Competitive Bidding** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and should be registered in the grade and specialty mentioned in the table below with the Construction Industry Development Authority (CIDA)
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
6. Interested bidders may obtain further information from the **Municipal Engineer , Kalmunai Municipal Council (067-2224591, FAX: 067-2229275)** and inspect the bidding documents at the same place on any working day from 9.00 hrs to 16.00 hrs.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Commissioner, Kalmunai Municipal Council, from 06.09.2023** until **27.09.2023 from 9.00 hrs to 15.00 hrs** upon payment of a non-refundable fee of Rs 4000.00. The method of payment should be by cash.
8. Bids shall be delivered to the **Municipal Commissioner, Kalmunai Municipal Council, at or before 15.30 hrs on 27.09.2023**. Late Bids will be rejected & Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.
9. Bid shall be valid for 77 days (seventy seven) up to 13.12.2023 after the deadline for bid submission.
10. Bid shall be accompanied by a Bid Security as per the information given in the Table.
11. A pre bid meeting will be held **at the office of Kalmunai Municipal Council** on 18.09.2023 at 14.30 hrs. Interested Bidders may participate in this meeting at their own expense.

| Contract No | Description of Works | Estimated Cost (Rs) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| KMC/ENG/WB -CF/ 2023 | Construction of Public Toilet at Kalmunai Bus Stand | **8,050,945.67** | 2 Months | C8, C7 & C6 Building Construction | **81,000.00** | **Till 10.01.2024** |

**A.L.M.Azmi**
**Municipal Commissioner**

# இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம் (SLSI)

## பொதுமக்களின் கருத்துரைகளுக்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு மற்றும் திருத்தங்கள்

(1) மண்புழு உரத்திற்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு **(SLS : .........: ..........)**

**(2)** புதிதாக வெட்டப்பட்ட மலர்கள் மற்றும் பசும் இலைகள் - அந்தூரியம் - ஆகியவற்றிற்கான இலங்கை தரநிருணய கட்டளைகளின் வரைவு **(DSLS : .................)**

**(3)** **SLS 1752:2023** இற்கான 01 ஆம் இலக்க திருத்த வரைவு சேதன உரம் மற்றும் மண்ணின் சிறந்த உற்பத்திக்கான செயற்பாட்டில் இலங்கை தரநிருணய வழிகாட்டி.

மேலேயுள்ள வரைவு தரநிருணய கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்தும் ஏனைய ஆர்வமுள்ள குழுக்களிடமிருந்தும் கருத்துரைகளை இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம் அழைக்கின்றது.

இந்த வரைவு தரநிருணய கட்டளைகள் மற்றும் திருத்தங்கள் இறுதி வடிவம் பெறமுன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துரைகள் இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்தின் உரித்தான குழுவினால் பரிசீலிக்கப்படும்.

மேலேயுள்ள தரநிருணய கட்டளைகள் மற்றும் திருத்தங்களின் பிரதிகளை (01 இலிருந்து (3) வரையுமானது) இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனத்தின் விஞ்ஞானரீதியிலான நியமமாக்கல் பிரிவிலிருந்து அல்லது ஆவணமாக்கல் மற்றும் தகவல் பிரிவிலிருந்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் www.slsi.lk என்ற இணையத்திலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.

2023.11.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கருத்துரைகள் என்னை வந்தடைதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்**
**இல. 17,விக்டோரியா இடம்**
**எல்விட்டிகல மாவத்தை**
**கொழும்பு-08.**
**தொலைபேசி: 011-2671567 – 72**
**தொலைநகல்: 011-2671579**
**மின்னஞ்சல்: dg@slsi.lk**
**இணையம்: www.slsi.lk**
**முகநூல்: https://www.facebook.com/officialSLSI**

**இலங்கை தரநிருணய கட்டளைகள் நிறுவனம்**
**தொழில்நுட்பவியல் அமைச்சு**

# இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

FREE NVQ3

4 நாட்களில்

## மின்னியலாளர்கள் உட்பட பயன்பாட்டுத் தொழிலிலுள்ள தொழில்நுட்ப வல்லுனர்களை மேம்படுத்தும் தேசிய திட்டம்

முதல் கட்டத்தின் கீழ், அனுபவம் வாய்ந்த மின்னியலாளர்களுக்கு இலவசமாக தேசிய தொழிற்தகைமை மட்டம் 3 (NVQ 3) வரை வழங்குவதற்கான விரைவுத் திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. ஒரு வருடம் மற்றும் 06 மாதங்களுக்கு அதிகமான தொழில் அனுபவமுள்ள, தற்போதும் தொழில் புரியும் அனைத்து மின்னியலாளர்களும் இந்த திட்டத்திற்காக விண்ணப்பிக்கலாம். பரீட்சை கட்டணம், பயிற்சி, இறுதிப் பரீட்சைக்கான மூலப்பொருட்கள் மற்றும் அவற்றுக்கான செலவுகளை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் ஏனைய அனுசரனையாளர்களால் வழங்கப்படும். பயிற்சி மற்றும் இறுதி பரீட்சைக்கு வசதியான மாவட்டத்தை நீங்களே தெரிவு செய்யலாம்.

**விண்ணப்பிக்க, பெயர் மற்றும் மாவட்டத்தை 0770399119 வாட்ஸ்அப் செய்யவும்**

**Online** மூலமாக **facebook.com/pucsl** அல்லது **www.pucsl.gov.lk** அணுகவும்

தேசிய தொழிற்தகைமை மட்டம் 3 அல்லது அதற்கு மேல் பெற்ற மின்னியலாளர்களுக்கு தொழிற்கல்வி அடையாள அட்டையும் வழங்கப்படுகிறது

- சோலார் தொழில்நுட்ப வல்லுநர்கள்
- நீர்க்குழாய் பொருத்துனர்கள்
- ஏசி மற்றும் குளிர்சாதன தொழில்நுட்ப வல்லுநர்கள்
- தச்சு வேலை வல்லுநர்கள் (கூரை அமைப்பவர்கள்)
- வெல்டிங் / வர்ணம் பூசுபவர் (பெயின்டர்)

மின்சார பாதுகாப்பு, மின்சார சேமிப்பு, புதுப்பிக்கத்தக்க சக்திவலு அபிவிருத்தி, நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு அதிகாரமளித்து, அவர்களை தரப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நடைபெற்று வருகிறது.

**தகவல்களுக்கு 0770399119 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள்**

பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ
தலைவர்
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: (011)2392607/8 பெக்ஸ்: (011) 2392641

# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

## பொறியியல் திணைக்களம்

## கேள்விமனுக்கோரல் (IFB)

01. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மகாநகர சபையின் மாநகரசபை ஆணையாளரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

02. I). தேசிய போட்டி முறையிலான மனுக்கள் கோரப்படும், மேலும் இந்த கொள்முதலின் கீழ் உள்ள பணிகளுக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி (VAT மற்றும் பிற வரிகள் தவிர்த்து) **ரூ.50** க்கு குறைவாக இருந்தால், அரச நிதிச் சுற்றறிக்கை எண். 04/2016(ii) ன் படி பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர விருப்பத்தேர்வு பொருந்தும்.

II). இந்த பெறுகைக்கு அரச நிதிச் சுற்றறிக்கை எண் 03/2020(i) இந்த ஆவணத்திற்கு உரித்துடையது மேலும் அரசுச் சொந்தமான நிறுவனங்களுக்காக (SEO) கேள்விக்கோரினால், ஐந்து சதவிகிதம் (5%) முன்னுரிமை அளிக்கப்படும்"

03. இந்த ஒப்பந்தத்தைப் பெறுவதற்குத் தகுதிபெற, மனுதாரர் பதிவு செய்யப்படாதவராக இருக்கக் கூடாது மேலும் கீழே உள்ள அட்டவணையிலும் ஏல ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

| தொடர் இல (1) | பணி விபரம் (2) | CIDA பதிவு (3) | மீள்ச் செலுத்தப்படாத கட்டணம் (4) | மனுப் பாதுகாப்பு / பண வைப்பு (5) | மனு ஆவணங்கள் வழங்கும் மற்றும் சமர்ப்பிக்கும் இடம் மற்றும் தொலைபேசி இல. (6) |
|---|---|---|---|---|---|
| 1 | நாவல மயானம் வளாகத்தில் இறுதிச்சடங்கு மண்டபக் கட்டுமானம் (கட்டம் 2) | C6 | 5,000.00 | 150,000.00 / 85,000.00 | **மாநகர ஆணையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை. த.பெ.இல 6, ஸ்ரீ ஜயவர்தனபுர, த.பெ. - 011-2862173 பெக்ஸ். - 011-2874703** |
| 2 | உடாமுல்ல மயானம் வளாகத்தில் இறுதிச்சடங்கு மண்டபக் கட்டுமானம் (கட்டம் 2) | C7 | 5,000.00 | 100,000.00 / 80,000.00 | |
| 3 | நாவல சிகிச்சை நிலையத்தில் சீரமைப்பு பணிகள் | C7 | 5,000.00 | 60,000.00 / 30,000.00 | |

4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் நகராட்சி பொறியாளர் திணைக்களத்திடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம், மனு ஆவணங்களை அலுவலக நேரத்தில் அதே அலுவலகத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.

5. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் மாநகரப் பொறியியலாளர் (அட்டவணையின் நெடுவரிசை எண் 06 இல் உள்ளவாறு) எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் **2023.09.05** ஆம் திகதி முதல் **2023.09.25** ஆம் திகதி வரை எந்த ஒரு அலுவலக நாட்களிலும் **மு.ப.9:00 மணி முதல் பி.ப.3:00** மணி வரை ஒரு பணிக்கான மனுக் கட்டணமாக **ரூ.5,000.00** இனை செலுத்தி மனு ஆவணத் தொகுப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

6. முத்திரையிடப்பட்ட மனுக்கள் தனித்தனி உறைகளில் இடப்பட்ட இரண்டு நகல் பிரதிகளுடன், அசல் மற்றும் நகல் பிரதிகளுடன் செயற்திட்டத்தின் பெயரை உறையின் மேல் இடது பக்க மூலையில் குறிப்பிட்டு, **2023.09.26 ஆம் திகதி பி.ப.02.30 மணிக்கு** முன்னர் மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர் மனுதாரர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.

7. அனைத்து மனுக்களும் மனுப் பாதுகாப்பு அல்லது அட்டவணையின் 05வது நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி உரிய பண வைப்புத்தொகையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுக்கள் செல்லுபடியாகும் காலம் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும்.

8. மனுதாரர்கள் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் பதிவுச் சான்றிதழின் நகல் பிரதி சமர்ப்பிக்க வேண்டும்.

**மாநகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

WP KI-5169 MICRO TREND MOTOR CAR 2010 CHAMPAGEN கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 055671

### 106 கார்கள் விற்பனைக்கு

KV-1703 MICRO PANDA, 2013, CAR அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 07 1454295 8 055154

KX -8425 AUDI A6, 2012, CAR அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 07 1454295 8 055150

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

ABT-2430 BAJAJ, 2018, YW-8910 BAJAJ, 2012, YT-1860 BAJAJ, 2011 THREEWHEEL அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 07 1121081 0 055172

QM -2613 BAJAJ, 2007, YE-5647 BAJAJ, 2010, THREEWHEEL அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொலைபேசி 0705 999163 055165

---

## இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**போட்டோப் பிரதி மற்றும் அச்சிடல் சேவையை வழங்குதல் - 2023/2024**

**ஒப்பந்த இல. RJT/ADM/AD4/03/2023-2024**

2023-10-15ஆம் திகதி முதல் 2024-10-14ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பின்வரும் ஐந்து வளவுகளுக்கு புகைப்படப் பிரதி மற்றும் அச்சிடல் சேவையை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் / தனிநபர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

- பிரதான நூலகம் - மிஹிந்தலை
- பிரயோக விஞ்ஞான பீடம் - மிஹிந்தலை
- விவசாய பீடம் - புளியங்குளம்
- மருத்துவம் மற்றும் தொடர்புடைய விஞ்ஞான பீடம் - சாலியபுர
- தொழில்சார்ந்த பிரிவு - அநுராதபுரம்

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் இடம்பெறும்.
3. விலைமனுதாரர் புகைப்படப் பிரதி மற்றும் அச்சிடல் சேவைகளைக் கையாளும் துறையில் குறைந்தபட்சம் 1 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. மேலதிக தகவல்களை வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 025-2266781 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அல்லது https://rjt.ac.lk/notice/ எனும் இணையதளத்தின் ஊடாக இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைமனுக்கள் 2023-09-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

**தலைவர் / திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை.**
**2023.09.05**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

## பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

**கம்பஹா ஆதார வைத்தியசாலையின் 3வது மாடியை அபிவிருத்தி செய்வதற்காக அலுமினியம் துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்தல்**

**விலைமனு இல. PRDA/WP/PRO/2023/67**

இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | விலைக் கோரல் பிணை முறி (ரொக்கப் பணமாக) | விலைக்கோரல் பிணை முறி (வங்கி / காப்புறுதி நிறுவனம்) |
|---|---|---|---|
| 01 | மேற்கூறப்பட்ட கட்டிடத்திற்குத் தேவையான அலுமினியத் துணைப்பாகங்கள் தொடர்பான தகவல்கள், வகை மற்றும் அளவுகள் என்பன விலைமனு ஆவணத் தொகுதியில் தரப்பட்டுள்ளன. | 14,000.00 | 28,000.00 |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023.09.05ஆம் திகதியிலிருந்து 2023.09.19ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை 1,178.75 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மேற்கூறப்பட்ட பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2023-09-20ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-5676903**

---

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## செயற்றிட்ட அமுல்நடாத்தல் அலகு (PIU) – வட மத்திய மாகாணம் (NCP)
## சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் (HSEP)

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| **திகதி**: | **2023 செப்டம்பர் 05 ஆம் திகதியன்று** |
|---|---|
| கடன்/ மானிய இல. மற்றும் தலைப்பு | ஆஅவ கடன் இல.: **3727 SRI** :சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம். |
| ஒப்பந்த இல. தலைப்பு | 1. **HSEP/PIU/NCP/ANU/W-07/2023/03 –** **W-07** வேலைகளின் பெறுகை (1 ஆம் சுற்று) - அனுராதபுர மாவட்டத்தில் கூன்வெவ **PMCU** இன் தற்போதுள்ள **OPD** கட்டிடம் மற்றும் தற்போதுள்ள வாட்டின் மீதி வேலையின் நிருமாணம்.<br>2. **HSEP/PIU/NCP/POL/W-15/Bal.Work/2023/03** **W-15** வேலைகளின் பெறுகை (02 ஆம் சுற்று மீதி வேலை) பொலன்னறுவ மாவட்டத்தின் அரணகன்வில **DHB** இன் புதுப்பித்தல் / நிருமாணம். |
| தொகுதிகள் | **W**-07<br>தொகுதி **D:** கூன்வெவ **PMCU**<br>**W-15**<br>தொகுதி **F:** அரணகன்வில **DHB** |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி | 2023 ஒக்ரோபர் 04 ஆம் திகதியன்று |

1. சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ஆஅவ) (ADB) நிதியுதவியை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் பகுதியொன்று மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும். ஆஅவ இன் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இதில் பங்கு பற்றலாம்.

2. கீழே விபரிக்கப்பட்டவாறு சுகாதார நிலையங்களின் மற்றும் புதிய நிர்மாணங்கள்/ புதுப்பித்தல்கள் அடங்கலான வேலைகளின் நிர்மாணம் மற்றும் பூர்த்தி செய்தல் ஆகியவற்றிற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார அமைச்சின் (''தொழில் வழங்குனர்'' என அழைக்கப்படுபவர்) செயலாளரின் அலுவலகத்தின் கீழ் கொழும்பு-08, கின்ஸி வீதி, **3/19,** ஆம் இலக்கத்திலுள்ள சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ. இல. | ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | தொகுதி / தொகுதிகள் | சுகாதார நிலையத்தின் பெயர் | வகுதி |
|---|---|---|---|---|
| 1. | HSEP/PIU/NCP/ANU/W/-07/Bal.Work/2023/03 வேலைகளின் பெறுகை - (1 ஆம் சுற்று) - அனுராதபுர மாவட்டத்தில் கூன்வெவ PMCU இன் தற்போதுள்ள OPD கட்டிடம் மற்றும் தற்போதுள்ள வாட்டின் மீதி வேலையின் நிருமாணம். | தொகுதி D | கூன்வெவ | PMCU |
| 2. | HSEP/PIU/NCP/POL/W-15/Bal.Work/2023/03 வேலைகளின் பெறுகை (02 ஆம் சுற்று மீதி வேலை) பொலன்னறுவ மாவட்டத்தின் அரணகன்வில DHB இன் புதுப்பித்தல் / நிருமாணம். | தொகுதி F | அரணகன்வில | DHB |

3. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு ஆஅவ இன் தனிக்கட்ட, ஒரு-உறை நடைமுறைக்கமைவாக பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பற்றலாம்.

4. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்கு பற்றலாம்.

அ. நிதியிடல்:

**(i)** வரலாறுரீதியிலான நிதியிடல் செயற்பாடு: விலைமனுதாரரின் நிதியிடல் நிலைமையின் தற்போதுள்ள உறுதிப்பாட்டை காட்சிப்படுத்துவதற்காக கடந்த மூன்று (3) வருடங்களின (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022) நிதியிடல் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.

- வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனிகள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள்.
- கூட்டுப்பங்குடைமைகள் மற்றும் ஏககூட்டாண்மைகள்: அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்/ பட்டயம் பெற்ற கணக்காளரினால் சான்றழிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள் அத்துடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வருமான வரி திரட்டுக் கடிதமும்.

**(ii)** வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு: செயற்பாட்டிலுள்ள அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றழிக்கப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாண நிதிப்புரள்வை (கீழேயுள்ள அட்டவணையை பார்வையிடவும்) விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை) கொண்டிருத்தல் வேண்டும். (கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக பிரயோகப்படுத்தப்படும்)

| தொகுதி இல. | சுகாதார நிலையத்தின் பெயர் | இலங்கை ரூபாவில் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| **W-07** | | |
| தொகுதி D | கூன்வெவ PMCU | 61.37 |
| **W-15** | | |
| தொகுதி F | அரணகன்வில DHB | 147.41 |

**(iii)** நிதியிடல் மூலவளங்கள்: விலைமனுதாரர் (தேவைப்படுமிடத்து கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை) அதனது நிதியிடல் மூலவளங்கள், அதனது தற்போதுள்ள ஒப்பந்த கடப்பாடுகளுக்கான அதனது நிதியிடல் பொறுப்புக்கள் நீங்கலாக ஒப்பந்தங்களுக்கான மொத்த தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல் அல்லது விஞ்சுகின்றன என்பதை காட்சிப்படுத்தல் வேண்டும் (தொகுதிகள்) (கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக பிரயோகப்படுத்தப்படக்கூடியவை)

| தொகுதி இல. | சுகாதார நிலையத்தின் பெயர் | இலங்கை ரூபாவில் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| W-07 | | |
| தொகுதி - D | கூன்வெவ PMCU | 10.59 |
| **W-15** | | |
| தொகுதி - F | அரணகன்வில | 21.19 |

**B.** அனுபவம்:

**(i)** நிகரான அளவு மற்றும் தன்மை: விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை, தேவைப்படின்) கடந்த ஐந்து (5) வருடங்களில் சித்திகரமாக அல்லது கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட ஆகக் குறைந்தது உத்தேசிக்கப்பட்ட வேலைகளின் நிகரான ஒரு ஒப்பந்தத்தின் ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி பங்காளராக அல்லது உபஒப்பந்தக்காரராக செயற்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழுள்ள விலைமனுதாரரின் பங்குபெறுதலின் பெறுமதியானது ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறு தேவைப்படுத்தல்களை விஞ்சியிருத்தல் பொருத்தமாகும்.

| தொகுதி இல. | சுகாதார நிலையத்தின் பெயர் | இலங்கை ரூபாவில் தொகை (மில்லியனில்) |
|---|---|---|
| **W-07** | | |
| தொகுதி - D | கூன்வெவ PMCU | 24.55 |
| **W-15** | | |
| தொகுதி - F | அரணகன்வில DHB | 58.96 |

தகைமைத் தகவுத்திறனானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் இன்னும் அதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்குமாக விலைமனுதாரர் பின்வருபவரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**செயற்றிட்ட பொறியியலாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு - வட மத்திய மாகாணம்,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**சுகாதார மருத்துவ பழைய கட்டிடம்,**
**பண்டாரநாயக்க மாவத்தை,**
**அனுராதபுரம், இலங்கை.**
**மின்னஞ்சல்: pe.hsep.ncp@gmail.com**
**தொலைபேசி/ தொலைநகல்: 025-2227308**

6. விலைமனுக்கோரல் ஆவணங்களை ஆங்கிலத்தில் கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர் பின்வருவனவற்றை செயற்படுத்தல் வேண்டும்.

W-07 வேலைகளின் பெறுகை (1 ஆம் சுற்று) - அனுராதபுர மாவட்டத்தில் கூன்வெவ PMCU இன் தற்போதுள்ள OPD கட்டிடம் மற்றும் தற்போதுள்ள வாட்டின் மீதி வேலையின் நிருமாணம் அல்லது/ மற்றும் W-15 வேலைகளின் பெறுகை (02 ஆம் சுற்று மீதி வேலை) பொலன்னறுவ மாவட்டத்தின் அரணகன்வில DHB இன் புதுப்பித்தல் / நிருமாணம் ஆகியவற்றிற்கான விலைமனுக்கோரல் ஆவணங்களைக் கோரி மேலேயுள்ள முகவரிக்கு விண்ணப்பமொன்றை சமர்ப்பித்தல்

உரித்தான ஒப்பந்தங்களுக்காக கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறான (8 ஆம் பந்தியில்) மீளளிக்கப்படாத கட்டணத்தை 2023 ஒக்ரோபர் 03 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பி.ப. 3 மணி வரையும் செலுத்துதல்.

பணக்கொடுப்பனவு முறைமையானது வங்கி வரைவொன்றின் பாங்கில் 84149856 என்ற கணக்கிலக்கத்திற்கு சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் அல்லது வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ரொக்கப் பணத்தில் அல்லது இலங்கை வங்கியின் 84149856 என்ற கணக்கிலக்கத்திற்கு நேரடி வைப்பினூடாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

7. 2023 செப்டம்பர் 14 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு 5 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது தொழில் வழங்குனரினால் நடாத்தப்படும். இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு அனைத்து விலைமனுதாரர்களும் சமுகமளிக்குமாறு கண்டிப்பாக அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

8. உங்கள் விலைமனுவை பின்வரும் முகவரியில் இறுதித் திகதியான 2023 ஒக்ரோபர் 04 ஆம் திகதியன்று பி.ப.2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுப்பிணையொன்றுடன் ஒப்படைக்கவும். விலைமனுப்பிணையானது வங்கி உத்தரவாதப் பாங்கொன்றின் மூலமாக சமர்ப்பிக்கப்படுவதாயின், விலைமனுக்கோரல் படிவங்களில் வழங்கப்பட்டவாறான உருமாதிரியை பாவித்து இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் **"The Project Director, Health System Enhancement Project"** என்ற பெயரில் வழங்கப்பட்டதுமானதாகவுமிருத்தல் வேண்டும்.

**செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு வட மத்திய மாகாணம்,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**சுகாதார மருத்துவ பழைய கட்டிடம்,**
**பண்டாரநாயக்க மாவத்தை,**
**அனுராதபுரம், இலங்கை.**

| தொகுதிகள் | சுகாதார நிலையத்தின் பெயர் | விலைமனுப்பிணை இ.ரூபாவில் | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் - இ.ரூபாவில் |
|---|---|---|---|
| W-07 | | | |
| தொகுதி D | கூன்வெவ PMCU | 610,000.00 | 8,000.00 |
| W-15 | | | |
| தொகுதி F | அரணகன்வில | 1,470,000.00 | 10,000.00 |

9. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலின் இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே

சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2024 பெப்ரவரி 01 ஆம் திகதியன்று வரையும்). விலைமனுப்பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 148 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2024 பெப்ரவரி 29 ஆம் திகதியன்று வரையும்)

11. சுகாதார அமைச்சின் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் அல்லது வட மத்திய மாகாண, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் அலுவலகம் ஆகியன விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தலுக்கான எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள மாட்டாது.

12. உள்ளூர் விலைமனுதாரர் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்னர், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட முகாமைத்துவ அலகு,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல்**
**இல. 3/19, கின்ஸி வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**

**தொலைபேசி/ தொலைநகல்: +94 112 697173. தொலைநகல்: +94 112 697 163. மின்னஞ்சல்: pmu@hsep.lk**
திகதி: 2023 செப்டெம்பர் 05 ஆம் திகதியன்று.

# இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

## செயற்றிட்ட அமுல்நடாத்தல் அலகு (PIU) – ஊவா மாகாணம்
## சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் - (HSEP)

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| | |
|---|---|
| திகதி: | 2023 செப்டம்பர் 04 ஆம் திகதியன்று |
| கடன்/ மானிய இல. மற்றும் தலைப்பு | **Loan 3727-SRI:** சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. தலைப்பு, தொகுதிகள் | **HSEP/PIU/UP/W11/2023/Lot A (V-2)**<br>**W11** வேலைகளின் பெறுகை - பதுளை மாவட்டம்<br>தொகுதி ஏ - அப்புத்தளை பிரதேச வைத்தியசாலை - மீதி வேலைகள் |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி | 2023 ஒக்டோபர் 04 |

01. சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ஆஅவ) (ADB) நிதியுதவியை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் பகுதியொன்று மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும். ஆஅவ இன் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இதில் பங்குபற்றலாம்.
02. அப்புத்தளை பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் **(OPD)** மீதி வேலைகளின் நிருமாணத்திற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா மாகாண சபையின் பிரதான செயலாளர் (''தொழில் வழங்குநர்'') முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ. இல. | ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | தொகுதி | சுகாதார நிலையத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1. | HSEP/UP/PIU/UP/W11/2023/LotA (V-2)<br>W11 – வேலைகளின் பெறுகை பதுளை மாவட்டம் | தொகுதி A | அப்புத்தளை பிரதேச வைத்தியசாலை மீதி வேலைகள் |

03. விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு ஆஅவ இன் தனிக்கட்ட, ஒரு-உறை நடைமுறைக்கமைவாக பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
04. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்குபற்றலாம்.

அ. நிதியிடல்:

**(i)** வரலாறு ரீதியிலான நிதியிடல் செயற்பாடு: விலைமனுதாரரின் நிதியிடல் நிலைமையின் தற்போதுள்ள உறுதிப்பாட்டை காட்சிப்படுத்துவதற்காக கடந்த மூன்று (3) வருடங்களின் (2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022) நிதியிடல் கூற்றுக்களை சமர்ப்பித்தல்.

- வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனிகள்: கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள்
- கூட்டுப்பங்குடைமைகள் மற்றும் ஏககூட்டாண்மைகள்: அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்/ பட்டயம் பெற்ற கணக்காளரினால் சான்றழிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூற்றுக்கள் அத்துடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வருமான வரி திரட்டுக் கடிதமும்.

**(ii)** வருடாந்த நிர்மாண சராசரி நிதிப்புரள்வு: கடந்த 3 வருடங்களில் செயற்பாட்டிலுள்ள அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றழிக்கப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாண நிதிப்புரள்வை (கீழேயுள்ள அட்டவணையை பார்வையிடவும்) விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை அடங்கலானது) கொண்டிருத்தல் வேண்டும்.

**(iii)** நிதியிடல் மூலவளங்கள்: விலைமனுதாரர் (தேவைப்படுத்துமிடத்து கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை அடங்கலானது) அதனது நிதியிடல் மூலவளங்கள், அதனது தற்போதுள்ள ஒப்பந்த கடப்பாடுகளுக்கான அதனது நிதியிடல் பொறுப்புக்கள் நீங்கலாக ஒப்பந்தங்களுக்கான மொத்த தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தல் அல்லது விஞ்சுகின்றன என்பதை காட்சிப்படுத்தல் வேண்டும் (தொகுதி) (கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தேவைப்படுத்தல்கள் பிரயோகப்படுத்தப்படக்கூடியவை)

**B.** அனுபவம்:

**(i)** நிகரான அளவு மற்றும் தன்மையிலுள்ள ஒப்பந்தங்கள்: விலைமனுதாரர் (கூட்டுமுயற்சி மற்றும் பங்குடமை அடங்கலானது, தேவைப்படின்) கடந்த ஐந்து (5) வருடங்களில் சித்திகரமாக அல்லது கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட ஆகக் குறைந்தது உத்தேசிக்கப்பட்ட வேலைகளின் நிகரான ஒரு ஒப்பந்தத்தின் ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி பங்காளராக அல்லது உபஒப்பந்தக்காரராக செயற்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழுள்ள விலைமனுதாரரின் பங்குபெறுதலின் பெறுமதியானது ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக கீழேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ளவாறு தேவைப்படுத்தல்களை விஞ்சியிருத்தல் பொருத்தமாகும்.

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம், தலைப்பு மற்றும் தொகுதி | வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வு (இலங்கை ரூபா மில்லியனில்) | நிதியிடல் மூலவளங்கள் (மில்லியன் இலங்கை ரூபாவில்) | நிகரான அளவு மற்றும் தன்மையிலுள்ள ஒப்பந்தங்கள் (மில்லியன் இலங்கை ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 1 | HSEP/PIU/UP/W11/2023/Lot A (V-2)<br>W11 வேலைகளின் பெறுகை - பதுளை மாவட்டம்<br>தொகுதி ஏ - அப்புத்தளை பிரதேச வைத்தியசாலை - மீதி வேலைகள் | 83.28 | 20.52 | 33.31 |

**தகைமைத் தகவுத்திறனானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் இன்னும் அதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது.**

05. மேலதிக தகவலைப் பெறுவதற்காகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்குமாக விலைமனுதாரர் பின்வருபவரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

செயற்றிட்ட பொறியியலாளர்,
செயற்றிட்ட அமுலாக்கல் அலகு - ஊவா மாகாணம்,
சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
சுகாதார மருத்துவ பழைய கட்டிடம்,
இல.: 301, 3 ஆம் மாடி, ஆர்.ஏச்.குணவர்தன மாவத்தை, பதுளை, இலங்கை.
மின்னஞ்சல்: **hsepuvapiu@gmail.com**
தொலைபேசி/ தொலைநகல்: 055-2232953

06. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கீழேயுள்ள அட்டவணையில் (7 ஆம் பந்தி) கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை 2023 ஒக்டோபர் 03 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் அல்லது அதற்கு முன்னராக உரித்தான ஒப்பந்தங்களுக்காக செலுத்திய பின்னர், மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமாக விலைமனுக்கோரல் ஆவணங்களுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

பணக்கொடுப்பனவு முறைமையானது பதுளை, ஆர்.ஏச். குணவர்தன மாவத்தை, 301 ஆம் இலக்கத்தின் 3 ஆம் மாடியிலுள்ள ஊவா மாகாண செயற்றிட்ட அமுலாக்கல் அலகு, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்ட வங்கி வரைவு முறையில் அல்லது ரொக்கப் பணத்தில் வேலை நாட்களில் அல்லது பதுளை இலங்கை வங்கிக் கிளையின் 84136514 என்ற கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வங்கிக்கு வரவு வைக்கும் முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

07. உங்கள் விலைமனுவை பின்வரும் முகவரியில் இறுதித் திகதியான 2023 ஒக்டோபர் 04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பின்வரும் விலைமனுப்பிணையொன்றுடன் ஒப்படைத்தல் வேண்டும்.

செயற்றிட்ட பிரதிப் பணிப்பாளர்/சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் - ஊவா,
செயற்றிட்ட அமுலாக்கல் அலகு - ஊவா மாகாணம்,
சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
3 ஆம் மாடி, இல. 301, ஆர்.ஏச். குணவர்தன மாவத்தை, பதுளை, இலங்கை.

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு | தொகுதி | சுகாதார நிலையத்தின் பெயர் | விலைமனுப் பிணை (இலங்கை ரூபா மில்லியனில்) | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் (இ.ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 1. | HSEP/PIU/UP/W11/2023/Lot A (V-2)<br>W11 வேலைகளின் பெறுகை - பதுளை மாவட்டம் | தொகுதி ஏ | அப்புத்தளை பிரதேச வைத்தியசாலை - மீதி வேலைகள | 0.58 | 10,000.00 |

08. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலின் இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
09. விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2024 சனவரி 02 ஆம் திகதியன்று வரையும்). விலைமனுப்பிணையானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2024 சனவரி 30 ஆம் திகதியன்று வரையும்)
10. ஊவா மாகாண சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட அமுலாக்கல் அலகு விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தலுக்கான எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டாது.
11. பதுளை, ஆர்.ஏச். குணவர்தன மாவத்தை, 301 ஆம் இலக்கத்தின் 3 ஆம் மாடியிலுள்ள சுகாதார சேவைகளின் மாகாண பணிப்பாளரின் அலுவலகத்திலுள்ள கேட்போர் கூடத்தில் 2023 செப்டம்பர் 20 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது இடம் பெறும்.
12. உள்ளூர் விலைமனுதாரர் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்னர், நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA) பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு - ஊவா மாகாணம்,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல.: 301, 3 ஆம் மாடி, ஆர்.ஏச். குணவர்தன மாவத்தை,**
**பதுளை, இலங்கை.**
**தொலைபேசி/ தொலைநகல்: 055-2232953**
**திகதி: 2023 செப்டெம்பர் 04 ஆம் திகதியன்று.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## (இலங்கை அரசாங்கத்தினால் நிதியுதவியளிக்கப்படும் செயற்றிட்டம்)

## விவசாயத் திணைக்களம் – பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களம், விரிவாக்கல் பயிற்சி நிலையத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-25ஆம் வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்துவதன் பேரில் விபரங்கள் அடங்கிய ஆவணங்களை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| விலைக்கோரல் இல. | கொள்வனவு செய்யும் பொருள் / சேவை | கேள்வி வைப்பு | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப் படாத | பணமாகச் செலுத்துவ தானால் | வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்ப தானால் (விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்) |
| விரி/ப/06/02/2023-117 | ஹெல போஜுன் சாலைக்கு 20 மரத்தாலான மேசைகள் மற்றும் 20 மரத்தாலான கதிரைகளைக் கொள்வனவு செய்தல் | ரூபா 2,500.00 | ரூபா 24,800.00 | ரூபா 49,600.00 |
| விரி/ப/06/02/2023-126 | பெரிய வெங்காய விதை உற்பத்தி வெளிக்களத்திற்கு 1550 கி. கிராம் தற்காலிக மழை மறைப்பு பொலித்தீனைக் கொள்வனவு செய்தல் | ரூபா 2,500.00 | ரூபா 23,250.00 | ரூபா 45,000.00 |

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023-09-26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நிறைவுறும். நகல் பிரதிகள் சகிதம் தயாரிக்கப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை அதற்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அல்லது விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் நிராகரிக்கப்படும். கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வகுதியின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விகளைச் சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவர் மட்டும் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**
**தொலைபேசி இலக்கம்: 081-2389127**

## பெருந்தோட்ட அமைச்சு

# இலங்கைத் தேயிலைச் சபை

## விலைமனுக்கோரல் (IFB)

## SUV வாகனங்கள் இரண்டு வழங்குவதற்கான கேள்விக்கோரல்
## ஒப்பந்த இலக்கம் : PROC/MOTORVH/TC/SLTB/23

கொழும்பு 03, காலி வீதி இல-574 இல் அமைந்துள்ள இலங்கை தேயிலை சபை பெறுகைக் குழுவின் தலைவரினால், **2023.09.19 ஆம் திகதி பி.ப.2.00** மணி வரை 4 சக்கர டிரைவ் SUV வாகனங்கள் வழங்குவதற்காக புகழ்பெற்ற / அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**தகுதி வரம்பு**

1. மனுதாரர் இலங்கையின் வணிகப் பதிவினைப் பெற்றிருக்க வேண்டும்.
2. வாகனம் 2016.01.01 வருடத்திற்கு க்குப் பிறகு தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்
3. கீழே உள்ள தொழில்நுட்ப விவரக்குறிப்புகளின்படி SUV களை வழங்க முடியும்.

| | | |
|---|---|---|
| **Engine Capacity** | SUVs | 1600CC (Maximum)<br>Electric Vehicle - Not below 80KW |
| **Fuel/Engine Type** | SUVs | Diesel/Petrol/Hybrid |
| **Transmission Type** | SUVs | Manual/Auto |
| **Wheel Type** | SUVs | 04 Wheel |

4. குத்தகைதாரர், இலங்கையில் புகழ்பெற்ற வாகனப் பிராண்டுகளின் வாகன முகவராக அல்லது குறைந்தபட்சம் 10 வாகனங்களை வாடகைக்கு வழங்கும் நிறுவனம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனத்தின் உரிமையாளராக இருத்தல் வேண்டும்.

**மனுக்களின் மதிப்பீடு**

தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தேர்வு (QCBS)

1. மனுதாரர் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூ.3,000/-** ஐ செலுத்தி தமது உத்தியோகப்பூர்வ கடிதத்தின் மூலம் வேண்டுகோளளிப்பதால் **2023.08.28 ஆம்** திகதி முதல் ஒரு மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். **கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரியில் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். சகலவிதமான கொடுப்பனவுகளும் **இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரியில் அமைந்துள்ள **இலங்கைத் தேயிலைச் சபையின்,** நிதிப் பிரிவின் பொருளாளரிடம் செலுத்தப்பட வேண்டியதுடன், பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் முதற் பிரதியை இணைத்து **2023.09.13** ஆம் திகதி வரை **மு.ப 10.00 முதல் பி.ப 3.00 மணிக்கு** இடையில் **இல.574, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரியில் அமைந்துள்ள **இலங்கைத் தேயிலைச் சபையின் பிரதான காரியாலயத்தில்** பெற்றுக்கொள்ளும் மனு ஆவணங்களின் சமர்ப்பிக்க வேண்டும். மனுக்களை முன்வைக்க வேண்டியது இலங்கைத் தேயிலைச் சபையில் பெற்றுக்கொண்ட ஆவணங்கள் மூலமாக மாத்திரமேயாகும். தேயிலைச் சபையின் **www.srilankateaboard.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் மேற்குறிப்பிட்ட திகதிவரை மனுஆவணங்களை இலவசமான பரீசீலனை செய்ய முடியும்.
2. மனுக்கள் முடிவடையும் திகதியிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும். SUV வாகனம் 02 க்கான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் இலங்கைத் தேயிலைச் சபையின் தலைவரின் பெயருக்குப் பெற்றுக்கொண்ட **ரூ.360,000/-** பெறுமதியான மனுப்பாதுகாப்பு தொகையுடன் மனுக்களை முன்வைக்க வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாளிலிருந்து **148 நாட்கள்** வரை செல்லுபடியாகும்).
3. மனுக்களின் **"அசல்"** மற்றும் **"நகல்"** பிரதிகளை கடித உறையலிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **"2023 ஆம் ஆண்டுக்காக இலங்கைத் தேயிலைச் சபைக்கு மோட்டார் வாகனங்களை வழங்குதல்"** எனக்குறிப்பிட்டு **2023.09.19 ஆம்** திகதி **பி.ப 2.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் **தலைவர், கொள்முதல் குழு, இல.574, காலி வீதி, கொழும்பு 03** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும்.
4. மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின்னர், **இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03, கொள்முதல் பிரிவில்** மனுக்கள் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதநிதிகள் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.
5. கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03, **(தொலைபேசி: 011-2582121, நீடிப்பு : 1120)** இது தொடர்பிலான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. மனுப் பிரதிகள் இரண்டுடன், மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள SUV வாகனத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் பெற்றுக்கொண்ட **ரூ.360,000/-** பெறுமதியான மற்றும் மனுக்கள் திறக்கப்பட்ட நாளிலிருந்து **120 நாட்களுக்கு** செல்லுபடியாகும் மனுப் பாதுகாப்புடன் **தலைவர், கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03** எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும்.
7. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை **கொள்முதல் பிரிவு, இலங்கைத் தேயிலைச் சபை, இல.574, காலி வீதி, கொழும்பு 03 இல் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி 011 2587814, 2586863, 2582122)**
8. **2023.08.26** ஆம் திகதி **"டெயிலி நியூஸ்"** மற்றும் **2023.08.28** ஆம் திகதி **"தினமின"** மற்றும் **"தினகரன்"** பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரம் இரத்துசெய்யப்பட்டுள்ளது.

தலைவர்,
கொள்முதல் குழு,
**இலங்கைத் தேயிலைச் சபை,**
இல.574, காலி வீதி,
கொழும்பு 3.

# பெறுகை அறிவித்தல்

## கொபெய்கனே பிரதேச சபை

2024 வருடத்திற்காக கொபெய்கனே பிரதேச சபையின் சொத்துக்களை குத்தைக்கு விடுவதற்காக 2023.09.05 முதல் 2023.09.26 அன்று மு.ப. 10.00 மணி வரை என்னால் விலைமனு பொறுப்பேற்கப்படுவதுடன், 2023.09.26 அன்று மு.ப. 10.30 க்கு விலைமனு திறக்கப்படும்.

விலைமனு விண்ணப்பங்களை 2023.09.05 அன்று முதல் 2023.09.25 திகதி வரை கொயெய்கனே பிரதேச சபை அலுவலகத்தில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 01.00 மணி வரையான காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 037-2293076 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம்.

**ஏ.எஸ்.எம். பிரணாந்து**
**செயலாளர்,**
**பிரதேச சபை, கொபெய்கனே.**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 013 -7XXX | HONDA | CIVIC | 1985 |
| KM -7XXX | MAZDA | DBA-BK5P | 2007 |
| **ஜீப்** | | | |
| CBE -4XXX | MITSUBISHI | ECLIPSE CROSS | 2018 |
| **வேன்** | | | |
| 057 -5XXX | MAZDA | BONGO | 1991 |
| 059 -4XXX | MAZDA | - | 1992 |
| 059 -8XXX | NISSAN | - | 1992 |
| HI -9XXX | SUBARU | SAMBAR | 1999 |
| PH -8XXX | NISSAN | HBD-DR64V-CLIPPER | 2014 |
| **லொறி** | | | |
| 068 -0XXX | MAZDA | - | 1992 |
| LB -3XXX | HONDA | FREEZER TRUCK | 2002 |
| LF -5XXX | HONDA | UE-HA6 | 2003 |
| LG -7XXX | TATA | ACE | 2009 |
| PP -7XXX | TATA | ACE | 2010 |
| LH -0XXX | TATA | LPT909 | 2010 |
| PQ -7XXX | MAHINDRA | MAXXIMO | 2011 |
| PR -2XXX | TATA | ACE | 2011 |
| PR -2XXX | TATA | ACE | 2011 |
| DAB -5XXX | TATA | ACE EX 2 | 2015 |
| **டிப்பர்** | | | |
| LA -5XXX | LANKA ASHOK LEYLAND | COMET TIPPER | 2005 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BFN -6XXX | HONDA | DIO SCV 110 | 2017 |
| **டிராக்டர்** | | | |
| RG -3XXX | KUBOTA | L4508 | 2019 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GE -9XXX | BAJAJ | BAJAJ AUTO | 2000 |
| GV -0XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| HP -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HX -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JA -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| JR -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QB -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QC -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QE -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QG -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -4XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QJ -1XXX | BAJAJ | AUTO AR4S | 2006 |
| QJ -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QM -3XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| QP -4XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| YH -8XXX | BAJAJ | RE 205 | 2010 |
| JN -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| YN -4XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YP -0XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YQ -9XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YZ -9XXX | BAJAJ | RE 205 | 2012 |
| AAO -1XXX | BAJAJ | RE | 2014 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

**மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 செப்டம்பர் 5ஆம், 6ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 செப்டம்பர் 8ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)**

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

www.skillsads.com

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

# கேள்விகளுக்கான அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

### பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், நுவரெலியா

விவசாயத் திணைக்களத்தின் நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பின்வரும் வேலைகளுக்காக உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | |
|---|---|---|---|---|---|
| தொ. இல. | வேலை விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | |
| | | | ரொக்கப் பணமாக | வங்கிப் பிணை முறியாக | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் |
| 01 | சீத்தாஎலிய மூலிகையக (Herbarium) கட்டிடத்தொகுதிக்கு 10,000 லீற்றர் நீர்த்தாங்கியொன்றைக் கொள்வனவு செய்தல் | நுஎ / பிவிப/கே / தே.போ/ 2023/12 | 32,000.00 | 64,000.00 | 2023-11-28 |

இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேற்படி விடயத்தின் பொருட்டும் பெற்றுக்கொண்ட கேள்விப் படிவங்களைப் பயன்படுத்தி விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பிரதான முகாமைத்துவ சேவை அதிகாரிக்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-25ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ‘‘தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், சந்ததென்ன வீதி, நுவரெலியா’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல வழங்குநர்களும் மேற்படி அட்டவணையின் D நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிணைப் பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் வங்கிப் பிணை முறியின் ஊடாக பிணையை வைப்புச் செய்வதானால் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம்,**
**சந்ததென்ன வீதி,**
**நுவரெலியா.**
**052-2222611**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை கண்டி

### மின்சார முறைமையைப் பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் - 2023/2024

கண்டி பொது வைத்தியசாலையில் 2023/2024ஆம் வருடங்களின் பொருட்டு பின்வரும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன.

குறிப்பீட்டிலக்கம்: NHK-AB-4-2024-1

| வேலை | தரம் | கேள்விப் பிணை முறி ரூபா | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| 01. மின்சார முறைமையின் பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு (சேர்விஸ்) நடவடிக்கைகள் (2023 நவம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் 2024 நவம்பர் மாதம் 14ஆம் திகதி வரையான காலஎல்லைக்கு) | EM-04 | ரூபா 100,000.00 | ரூபா 5,000.00 |

**கேள்விதாரர்கள் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

1. நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (CIDA) EM-04 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவாகியிருத்தல் மற்றும் 2023ஆம் வருடத்திற்கான பதிவைப் பெற்றிருத்தல்
2. இலங்கை நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தின் (NCASL) அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்
3. பொது வைத்தியசாலை அல்லது அரச நிறுவனமொன்றில் மேற்குறிப்பிட்ட வேலைக்குரித்தான பராமரிப்பு மற்றும் சுத்திகரித்தல் சேவைகளை நடாத்திச் செல்லல் தொடர்பில் 05 வருட அனுபவம் தொடர்பான சான்றிதழ்
4. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி
5. 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச் சான்றிதழ் (PCA 3)

2023-09-05ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-09-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 ரூபா தொகையை கண்டி தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் அலுவலகத்திற்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை தலைமை அலுவலகத்திற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இரு பிரதிகளில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை கண்டி தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் அலுவலகத்திற்குச் கேள்விப் பிணை முறியின் பொருட்டு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கி அல்லது காப்புறுதி நிறுவனத்தில் கண்டி, தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரின் பெயருக்கு 100,000.00 ரூபா பெறுமதியான 2024-01-30ஆம் திகதி வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணை முறியுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறு உறைகளில் இட்டு அவ்வுறைகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு 2023-09-27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது வைத்தியசாலையின் தலைமைக் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் ”2023/24ஆம் வருடங்களுக்கான மின்சாரப் பராமரிப்பு வேலைகளுக்கான கேள்வி” எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

2023-09-27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இக்கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரரின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம். கேள்விகள் தொடர்பில் வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்களுக்கு கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும். (081-2233337 முதல் 42 வரை)

**பணிப்பாளர்,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**தேசிய வைத்தியசாலை, கண்டி.**


The largest Job Market in Sri Lanka

www.observerjobs.lk




Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0112429314

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer


# இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.06.20 இல் நடைபெற்ற இவ்வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

பிரசித்த நொத்தாரிசு B.B. ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2011.09.09 திகதியிட்ட ஈட்டு. முறி இல. 6474 மற்றும் பிரசித்த நொத்தாரிசு D.வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2015.04.21 திகதியிட்ட ஈட்டுமுறி இல.2842 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம்.டீ.ஐ.கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2019.02.26 திகதியிட்ட ஈட்டு முறி இல.1922 ஆகியவற்றால் காப்பளிக்கப்பட்டதன் பேரில் கண்டி அனகாரிக தர்மபால மாவத்தை இல. 117/6 என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. செனரத் பண்டா தல்வத்த மற்றும் திருமதி.மாரசிங்ஹ ரத்நாயக்க ஷிரோமணி தீபஷிகா அபேசேகர தல்வத்த ஆகியோரிடமிருந்து கடன் மீது 2023.06.01 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 20,285,873.63 (இருபது மில்லியன் இருநூற்று எண்பத்தைந்து ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்று ரூபாய்களும் அறுபத்து மூன்று சதங்களும்) அத்துடன் ரூ. 11,795,200.70 (பதினொரு மில்லியன் எழு நூற்று தொண்ணூற்றைந்து ஆயிரத்து இருநூறு ரூபாய்களும் எழுபது சதங்கள்) மீது 2023.06.02 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டு தசம் இரண்டு ஐந்து (28.25%) வீதத்தில் மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்கூறிய 2011.09.09 திகதியிட்ட ஈட்டு முறி இல. 6474 மற்றும் 2015.04.21 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2842 மற்றும் 2019.02.26 திகதியிட்ட ஈட்டு முறி இல. 1922 ஆகியவற்றின் பேரில் கடன் மீது மேற்கூறிய ரூ.20,285,873.63 (இருபது மில்லியன் இருநூற்று எண்பத்தைந்து ஆயிரத்து எண்ணூற்று எழுபத்து மூன்று ரூபாய்களும் அறுபத்து மூன்று சதங்களும்) அத்துடன் 2023.06.02 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு.M.H.T கருணாரத்னவுக்கும் மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தனியார் கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் டாம் வீதியில் கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் மரதானை கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 165இல் வோர்ட் இல. 26 இல், சீமன்ட் வீதியில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S. லோகநாதன் தயாரித்த 1990 நவம்பர் 28 திகதியிட்ட வரைபடம் இல. 3859 இல் விபரித்த குறித்த காணி, பத்தேகம விமலவங்ஸ ஹிமி மாவத்தை, வரிமதிப்பு இல. 72 மற்றும் 72/14 கொண்ட நிலமனைகள் மற்றும் மேல் மாடிக் கட்டிடத்தையும் கொண்ட மேற்கூறிய காணியின் எல்லைகளாவன: வடக்கில் வரிமதிப்பு இல.68 மற்றும் 70 ஐக் கொண்ட நிலமனையும் (சீமன்ட் வீதி), கிழக்கில் வரிமதிப்பு இல. 70 ஐக் கொண்ட நிலமனையும் சீமன்ட் வீதியும் தெற்கில் வரிமதிப்பு இல.72 ஐக் கொண்ட தோட்டமும், (சீமன்ட் வீதி) மேற்கில் வரிமதிப்பு இல. 68 ஐக் கொண்ட நிலமனையும் (சீமன்ட் வீதி) எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 3859 இன் பிரகாரம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.5) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் அங்கு அமைந்துள்ள சகலதும் அங்கு வளர்பவையும் ஆகும். இக்காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் A974/268 இல் பதிவு செய்யப்பட்டது.

வரைபடம் இல. 3859 இல் குறிப்பிட்ட மேற்கூறிய காணி கீழ் விபரித்த காணிக்கு ஒத்ததாகும்.

மேற்கூறிய டீன்ஸ் வீதி மற்றும் சீமன்ட் வீதியில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S. சிங்கநாயகம் தயாரித்த 1965 ஒக்டோபர் 22 திகதியிட்ட வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 23ஐக் கொண்ட (நிலத் தளம்) மேல்மாடிக் கட்டிடம் மற்றும் வரிமதிப்பு இல. 72 மற்றும் 72/14 ஐக் கொண்ட நிலமனைகள் அதாவது மேற்கூறிய காணித்துண்டு 23 இன் எல்லைகளாவன வடக்கில் T.B. ஜாயா மாவத்தை நிலமனை இல. 175 மற்றும் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு இல. 24 உம் கிழக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 24 மற்றும் சீமன்ட் வீதியும் தெற்கில் காணித்துண்டு 6 (பிரவேசப் பாதை) மற்றும் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 7 உம் (தண்ணீர் கழிப்பறை) மேற்கில் T.B. ஜாயா வீதி நிலமனை இல. 175 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1057 இன் பிரகாரம் நான்கு தசம் ஒன்பது நான்கு இரண்டு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.4.942) விஸ்தீரணமுடையது. இக் காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் D 208/58 இல் பதிவுசெய்யப்பட்டது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

01. மேற்கூறிய மரதானையில் சீமன்ட் வீதி மற்றும் டீன்ஸ் வீதியில் அமைந்ததும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் S. சிங்கநாயகம் தயாரித்த 1965 ஒக்டோபர் 22 திகதியிட்ட வரைபடம் இல. 1057 இல் விபரித்த காணித்துண்டு இல. 6 (பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 6 இன் எல்லைகளாவன: வடக்கில் வரி மதிப்பு இல. 175 ஐக் கொண்ட நிலமனை, T.B. ஜாயா பாதையும் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டுகள் 7 மற்றும் 23 உம் கிழக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டுகள் 22,13,14,16 மற்றும் 5 உம் சீமன்ட் பாதையும் தெற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டுகள் 22,8,9,10,11,12,1 மற்றும் 5 உம் போபஸ் வீதி வரிமதிப்பு இலக்கங்கள் 165,169 மற்றும் 177/6 உம் மேற்கில் மேற்கூறிய வரைபடம் இல.1057 இல் காணித்துண்டுகள் 1,2,3 மற்றும் 4 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.1057 இன் பிரகாரம் பத்து தசம் மூன்று இரண்டு ஆறு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.10.326) விஸ்தீரணமுடையதாகும். இக்காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் D 29/67 இல் பதிவுசெய்யப்பட்டது.

02. மேற்கூறிய மரதானையில் சீமன்ட் றோட் மற்றும் டீன்ஸ் றோட்டில் அமைந்ததும் மேற்கூறிய வரைபடம் இல.1057 இல் விபரித்த காணித்துண்டு 7 (தண்ணீர் கழிப்பறை) என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது மேற்கூறிய காணித்துண்டு 7 இன் எல்லைகளாவன: வடக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித்துண்டு 23 உம் கிழக்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டுகள் 23 மற்றும் 6 உம் தெற்கில் மேற்கூறிய வரைபடம் இல. 1057 இல் காணித் துண்டு 6உம் மேற்கில் T.B ஜாயா மாவத்தை, வரி மதிப்பு இல. 175 ஐக் கொண்ட நிலமனையும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1057 இன் பிரகாரம் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் ஏழு (ஏ.0,றூ.0,பே.0.107) விஸ்தீரணமுடையதாகும். இக்காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் D 119/02 இல் பதிவுசெய்யப்பட்டது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி

**திருமதி. எல்.பீ. ஆரியசிங்ஹ**
**பிரதான முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**தனியார் கிளை**

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# பெறுகை அறிவித்தல்

## களுத்துறை பிரதேச சபை

### களுத்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான வளவுகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக தனியார் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுகோரல்

களுத்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான பிரதான அலுவலகம், நாகொட மற்றும் மொரென்துடுவ உப அலுவலகங்கள், வஸ்கடுவ மற்றும் எட்டவில தகனச்சாலை போன்ற வளவுகளுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக 2023-10-01ஆம் திகதி முதல் 2024-09-30ஆம் திகதி வரையில் பின்வரும் வகையில் தனியார் பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து 2023-09-26ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

12 கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)

01. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சகல விலைமனுதாரர்களும் பாதுகாப்பு சேவைகள் தொடர்பில் அரச பாதுகாப்பு அமைச்சு மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும் என்பதுடன் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பைச் செய்திருத்தல் வேண்டும்.
02. 05 வருடத்திற்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக பாதுகாப்புச் சேவையை நடாத்திச் சென்ற அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அனுபவம் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட நான்கு இலட்சம் (400,000.00) ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். (காசோலை ஒன்றில் மூலம் கொடுப்பனவுகளைச் செலுத்துவதானால் தலைவர், பிரதேச சபை எனும் பெயரில் குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
04. கேள்விப் படிவங்கள் 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-25ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வழங்கப்படும் என்பதுடன் மீளளிக்கப்படாத 5000.00 ரூபா கட்டணத்தை பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்குச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களுடன் பணக் கொடுப்பனவிற்கான மூலப் பிரதியை இணைத்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான இரு உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்தல் வேண்டும். அதன் பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''களுத்துறை பிரதேச சபைக்கு பாதுகாப்புச் சேவைகள் வழங்குவதற்கான விலைமனு'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து, 2023-09-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, களுத்துறை பிரதேச சபை, காலி வீதி, வஸ்கடுவ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.
06. 2023-09-26ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு களுத்துறை பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07. குறித்த கேள்வி ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கிய ஆவணங்களை இந்த அறிவித்தலின் ஒரு பகுதியாக கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.
08. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை களுத்துறை பிரதேச சபையின் செயலாளர் மற்றும் களுத்துறை பிரதேச சபை, அதிகாரம், வேலைகளைச் செயற்படுத்தும் அதிகாரி தன்னகத்தே கொண்டுள்ளார்.

**பீ.டீ.ஏ.கே. கயந்தி,**
**களுத்துறை பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**களுத்துறை பிரதேச சபையின்**
**அதிகாரம் வாய்ந்த வேலைகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**களுத்துறை பிரதேச சபை.**

2023-08-29.

# மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 02/06/2023 | 02/07/2023 | 22, 25, 27 /09/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

Repeat Your Ad For Better Offers

## போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

# பெறுகை அறிவித்தல்

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குரித்தான பின்வரும் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் திருத்த வேலைகளைச் செய்வதற்காக CIDA நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் 2023-09-27ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குரித்தான பெறுகை ஆவணங்களை 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-26ஆம் திகதி வரையான அரச விடுமுறை நாட்கள் தவிர்ந்த வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத 3500.00 ரூபா கட்டணத்தை சிறாப்பர் பிரிவுக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள பெறுகை ஆவணங்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

2023-09-27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவுற்றதன் பின் உடனடியாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியின் பிரகாரம் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் எதிர்வரும் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் செல்லுபடியாகும் நிதி நிறுவனத்தில் பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை அல்லது அப்பெறுமதிக்குச் சமமான தொகையை (மீளளிக்கப்படும்) பிணையாக எமது சிறாப்பர் பிரிவுக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்விப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

பெறுகை ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலைமனுக்களை நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களுக்கு 045-2222261 எனும் இலக்கத்தின் ஊடாக கணக்காளரைத் தொடர்பு கொள்ளவும்.

| உருப்படி இலக்கம் | இலக்கம் | வேலை விடயம் | குறைந்தபட்ச CIDA தகைமை |
|---|---|---|---|
| 01 | THR/E17/PA072023 | Modification Nursing Teaching School - Stage II | C7 |
| 02 | THR/E17/PA08/2023 | Removal of Old Aboadcnd 2000lbs Passenger Elevator | C9 |
| 03 | THR/E17/PA09/2023 | Construction of Boundary Fence Around the Hospital Premises - Stage II | C7 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, இரத்தினபுரி.**

2023-09-04.

# பகிரங்க ஏலவிற்பனை

## ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை

ஆரச்சிகட்டுவ பிரதேச சபைக்குச் சொந்தமான பின்வரும் வாகனங்கள் 2023-09-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சபை அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| வாகனப் பதிவிலக்கம் | வாகனத்தின் வகை | உற்பத்தி வருடம் | குறைந்தபட்ச மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| RB-4878 டிராக்டர் | SAME | 2005 | 800,000.00 |
| 73 ஸ்ரீ 2201 கை டிராக்டர் மற்றும் டிரேலர் | KUBOTA | 1988 | 400,000.00 |
| 46-3689 டிராக்டர் டிரேலர் | WIMALA | 1992 | 200,000.00 |

**விசாரணைகளுக்கு:**
**தொலைபேசி இல. 032-2259783**

**பீ.ஏ.எம். ஷிரானி அபேசிங்க,**
**செயலாளர், பிரதேச சபை,**
**ஆரச்சிக்கட்டுவ.**

## தொம்பே பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

### 25 கி.வோட் கொள்ளளவுள்ள நிகர கணக்கீட்டு சூரிய சக்தி முறைமையொன்றை வழங்குதல் தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல

1. தொம்பே பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் தொம்பே பிரதேச சபையின் தலைமை அலுவலக கட்டிடத்திற்கு வலையமைப்பிடப்பட்ட நிகர கணக்கிடல் சூரிய சக்தி முறைமையொன்றை திட்டமிட்டு, கொண்டுவந்து, வழங்கி, நிறுவி, செயற்பட வைத்து, பராமரித்தல் சகிதம் நடாத்திக்கொண்டு செல்வதற்கு, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் பதிவு செய்துள்ள காலம் எதிர்காலத்திற்கு செல்லுபடியாகும் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படும்.
3. சகல விலைமனுதாரர்களும் 2023-12-31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையின் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற, உடன் பணமாக்கக்கூடிய 115,000.00 ரூபா பெறுமதியான விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் ''செயலாளர், தொம்பே பிரதேச சபை'' எனும் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது ரொக்கப் பணமாக பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்.
4. தொம்பே பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திற்கு வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வருகை தந்து விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்கள் அல்லது தெளிவுபடுத்தல்களுக்கு 0718228620 எனும் தொலைபேசி இலக்கத்தில் சபையின் வேலை அத்தியட்சகரைத் தொடர்பு கொள்ளலாம்.
5. இதில் ஆர்வம் காட்டும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவைச் (விண்ணப்பக் கட்டணம்) செலுத்தி தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல எனும் முகவரிக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்ததன் பின் 2023-09-05ஆம் திகதி முதல் 2023-09-25ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் விலைக்கோரல் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''தொம்பே பிரதேச சபை பிரதான அலுவலகக் கட்டிடத்திற்கு வலையமைப்பிடப்பட்ட நிகர கணக்கிடல் சூரிய சக்தி முறைமை'' எனக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறித்து 2023-9-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது தொம்பே பிரதேச சபையின் வேலைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
7. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து தொம்பே பிரதேச சபை கலந்துரையாடல் அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன், விலைமனுதாரர் அல்லது அவரது எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
8. முழுமையற்ற மற்றும் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன், விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை தொம்பே பிரதேச சபையின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**டீ. அஜித் ரணசிங்க,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**தொம்பே பிரதேச சபை.**

# INVITATION FOR BIDS (IFB)

## PROVINCIAL DEPARTMENT OF EDUCATION EASTERN PROVINCE

01. Bids are invited by the Provincial Director of Education of the Provincial Department of Education, Eastern Province on behalf of Zonal Directors of Education from qualified Construction Contractors to perform the following works through National Competitive Bidding Procedure.

| No. | Identification No. | Description | Required CIDA Grade of Bidder in Building Category | Bid Security (Rs.) | Engineer's Estimate (Rs.) Mn | Period of Completion Calendar days | Zonal Education Office issuing bidding document |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | GEM/EP/2023/ MLP/01/03-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at T/Kn/Seruwila Maha Vidyalayam. (Completion- Phase II) | C7, C6 and C5 | 90,000 | 8.93 | 60 days | Kanthale |
| 2 | GEM/EP/2023/ MLP/01/04-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at T/Mu/Barathy Vidyalayam, Muthur(Completion- Phase II) | C7, C6 and C5 | 90,000 | 8.84 | 60 days | Mutur |
| 3 | GEM/EP/2023/ MLP/01/06-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at Bt/Kk/Chenkalady Vivekanantha Vid. (Completion- Phase II) | C7, C6 and C5 | 105,000 | 10.40 | 60 days | Kalkudah |
| 4 | GEM/EP/2023/ MLP/01/09-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at Bt/Bw/Illupadichenai Ampal Vid. (Completion- Phase II) | C7, C6 and C5 | 98,000 | 9.80 | 60 days | Batticaloa West |
| 5 | GEM/EP/2023/ MLP/01/10-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at Bt/Pd/Kakachivaddai Vishnu Maha Vid. (Completion- Phase II) | C7, C6 and C5 | 101,000 | 10.07 | 60 days | Paddirippu |
| 6 | GEM/EP/2023/ MLP/01/12-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at Km/Str/Sennel Zahira Maha Vid, Sammanthurai (Completion- Phase II) | C7, C6 and C5 | 101,000 | 10.03 | 60 days | Sammanthurai |
| 7 | GEM/EP/2023/ MLP/01/13-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at Km/Ak/Al-Fathimiya Vidyalayam, Akkaraipattu (Completion- Phase II) | C7, C6 and C5 | 105,000 | 10.42 | 60 days | Akkaraipattu |
| 8 | GEM/EP/2023/ MLP/01/16-01 | Construction of 15.5m x 9.6m Math lab with a class room building at Am/Mh/Holike Vidyalayam, Padiyathalawa (Completion- Phase II) | C7, C6 and C5 | 105,000 | 10.42 | 60 days | Mahaoya |

02. Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs.50Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No.04/2016(iv).
03. To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and the Contractors registered with ICTAD/CIDA under the grade prescribed in the Table for Building in the field of Speciality.
04. Qualification requirement to qualify for contract award

| Technical Requirements | Financial Requirements | Legal Requirements |
|---|---|---|
| Minimum Persons with qualification and experience<br>**01. Technical Officer - 01**<br>**Qualifications:** NDT (Civil) or Equivalent,<br>**Experience:** 03 years **Or**<br>**Qualifications:** NCT or Equivalent,<br>Experience: 5 years<br>**02. Work Supervisor - 01**<br>**Qualifications:** NCT or Equivalent,<br>**Experience** : 3 years | ● Bidders should submit credit facility for 20% of Bid Amount from approved bank by Central Bank<br>● Average of the Annual Volume of construction work performed in the last 3 years shall be at least equal to 60% of bid amount<br>● Bidders should have completed at least one contract of similar nature in last 3 years shall not be less than 50% of the bid amount | ● Bidders should have a registered Legal Status<br>(Sole proprietor, Partnership, company etc.)<br>● Bidders shall not have been declared as a Black Listed defaulted contractor by Department of Public Finance or any other Agency |

05. Interested bidders may obtain further information from **the respective Zonal Director of Education** and inspect the bidding documents at **the respective Zonal Education Office** at the address in the Table above
06. A complete set of bidding documents in duplicate in English language may be purchased by interested bidders on submission of a written application to **the respective Zonal Director of Education** from **06.09.2023** until **19.09.2023 on working days** from **9.00 hrs. to 15.00 hrs**. upon payment of a non-refundable fee of **Rs.10,000.00**. The method of payment will be by cash at Accounts Branch of **respective Zonal Education Office.**
07. Bids shall be delivered in duplicate with separate cover to **the respective Zonal Director of Education** to the address in the Table above on or before **15.00 hours on 20.09.2023**. Late bids will be rejected. Bids will be opened **at the respective Zonal Education Office** soon after closing in the presence of the bidder's representative who chooses to attend.
08. Bid shall be valid up to **77 days** after the deadlines for Bid submission.
09. All bids shall be accompanied by bid security in the name of respective **Zonal Director of Education** from either a reputed Bank approved by Central Bank of Sri Lanka or Construction Guarantee Fund (CGF). Bid Security should be valid up to **105 days from 20.09.2023.**
10. Pre-bid meeting will be conducted on **14.09.2023 at 10.30 a.m**. at the respective Zonal Education Office.

**A. Canagasooriyam**
**Provincial Director,**
**Provincial Department of Education, EP**

01.09.2023

# சுப்பர் போர் எதிர்பார்ப்புடன் இலங்கை இன்று களத்தில்

## ஆப்கானிடம் மோசமான தோல்வியை தவிர்த்தால் போதும்



ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான ஆசிய கிண்ண தொடரின் பி குழுவுக்கான கடைசி போட்டியில் இலங்கை அணி இன்று (05) களமிறங்கவுள்ளது.

லாகூரில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 89 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வீழ்த்திய நிலையில் பி குழுவில் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறும் அணிகள் இன்றைய போட்டி முடிவிலேயே தீர்மானிக்கப்பட வேண்டி உள்ளது.

லாகூர் நகரில் நடைபெறும் இன்றைய போட்டியில் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேற ஆப்கான் அணி வெற்றி பெற்றால் மாத்திரம் போதாது. அந்த அணி மிகப்பெரிய வெற்றி ஒன்றை பதிவு செய்ய வேண்டி உள்ளது.

இதன்படி ஆப்கான் அணி 275 ஓட்டங்களை பெறும் பட்சத்தில் அந்த அணி குறைந்தது 68 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதோடு பதிலெடுத்தாடுவதாக இருந்தால் 35 அல்லது அதற்கு குறைவான ஓவர்களில் இலக்கை எட்ட வேண்டும்.

எனவே, இன்றைய போட்டியில் இலங்கை அணி சாதாரண வெற்றி ஒன்றை பெற்றாலோ அல்லது நெருக்கமான தோல்வி ஒன்றை சந்தித்தாலோ நிகர ஓட்ட வேகத்தின் அடிப்படையில் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு உள்ளது.

லாகூர் மைதானம் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருந்தபோதும் பகல் வேளையில் அங்கு நிலவும் கடுமையான வெப்பநிலை காரணமாக நாணய சுழற்சி தீர்க்கமானதாக உள்ளது.

அங்கு முதலில் களத்தடுப்பில் ஈடுபடும் அணி வெப்பத்தால் அதிகம் களைப்படைய வாய்ப்பு உள்ளது. இலங்கை அணியில் முன்னணி பந்து வீச்சாளர்கள் இல்லாதபோதும் மதீஷ பதிரண பங்களாதேஷுக்கு எதிரான முதல் போட்டியில் சோபித்ததோடு மஹீஷ் தீக்ஷன அணியில் முக்கிய இடம் வகிக்கிறார்.

இந்நிலையில் இன்றைய போட்டியில் பங்களாதேஷுடன் ஆடிய அதே பதினொருவர் அணி களமிறங்க வாய்ப்பு உள்ளது. எவ்வாறாயினும் அணியில் குசல் பெரேரா உள்ளடக்கப்படும் பட்சத்தில் திமுத் கருணாரத்ன அல்லது பத்தும் நிசங்க நீக்கப்பட வாய்ப்பு உள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அணிகள் கடைசியாக மோதிய ஆறு ஒருநாள் சர்வதேச போட்டியில் இலங்கை மூன்று போட்டிகளிலும் ஆப்கான் இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டிய நிலையில் ஆப்கான் அணி இலங்கைக்கு சவாலாகவே உள்ளது.

# முரளி 800 திரைப்பட முன்னோட்டம் இன்று




இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை கொண்ட '800' திரைப்படத்தின் முன்னோட்ட வெளியீட்டு நிகழ்ச்சிக்கு இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் திரைப்பட முன்னோட்ட நிகழ்வு இன்று (05) மும்பையில் இடம்பெறவுள்ளது. 51 வயதான முரளிதரன் 2010 ஜூலை 22 ஆம் திகதி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தனது 800 ஆவது விக்கெட்டை வீழ்த்தி டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வுக்கு விடைகொடுத்தார். அவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த மதிமலர் ராமமூர்த்தியை 2005 ஆம் ஆண்டு திருமணம் புரிந்தார்.

திரைப்படத்தில் முரளி மற்றும் அவரது மனைவியின் பாத்திரங்களில் மதுர் மிட்டல் மற்றும் மஹிமா நம்பியார் நடிக்கின்றனர். இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்புகள் இந்தியா, இலங்கை மற்றும் இங்கிலாந்தில் எடுக்கப்பட்டுள்ளன.

திரைப்பட முன்னோட்ட வெளியீட்டு நிகழ்ச்சிக்கு திரைப்படக் குழுவுடன் முரளிதரனும் தோன்றவுள்ளார். இலங்கையின் முன்னாள் நட்சத்திர வீரர் சனத் ஜனசூரியவும் இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

# தந்தையான பும்ரா நாடு திரும்பினார்



இந்திய முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவுக்கு ஆண் குழந்தை பிறந்ததை அடுத்து தனிப்பட்ட விடுப்பில் இலங்கையில் இருந்து இந்தியா திரும்பியுள்ளார்.

இதனால் நேற்று (04) நடைபெற்ற நேபாள அணிக்கு எதிரான இந்தியாவின் ஆசிய கிண்ண குழுநிலை போட்டியில் பும்ரா இடம்பெறவில்லை. அவருக்கு பதில் மொஹமட் ஷமி அணியில் சேர்க்கப்பட்டிருந்தார். தான் தந்தையாகி இருக்கும் மகிழ்ச்சியான செய்தியை பும்ரா தனது இன்ஸ்டகிரம் பக்கத்தில் தெரிவித்துள்ளார். "இன்று காலை (திங்கட்கிழமை) அங்கட் ஜஸ்பிரீத் பும்ரா இவ்வுலகில் அடியெடுத்து வைத்துள்ளார்," என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். கடந்த 2021 மார்ச் மாதம் பும்ராவிற்கும் சஞ்சனா கணேசன் என்பவருக்கும் கோவாவில் திருமணம் நடந்தது.

பும்ரா கடந்த ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் உபாதைகளுக்கு முகங்கொடுத்திருந்ததுடன், கடந்த மாதம் நடைபெற்ற அயர்லாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் உபாதையிலிருந்து குணமடைந்து மீண்டும் சர்வதேச போட்டிகளுக்கு திரும்பியிருந்தார்.

# மழையால் ஆசிய கிண்ண போட்டிகளை கொழும்பில் இருந்து மாற்ற ஆலோசனை

## வேறு மைதானங்களுக்கு மாற்றுவதிலும் நடைமுறை சிக்கல்



இலங்கையில் பெய்து வரும் மழை ஆசிய கிண்ணத் தொடரில் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும் நிலையில் சுப்பர் போர் சுற்று போட்டிகளை கொழும்புக்கு வெளியில் நடத்துவது பற்றி ஆசிய கிரிக்கெட் கௌன்சில் ஆலோசித்து வருகிறது.

இலங்கையில் ஒப்பீட்டளவில் மழை வீழ்ச்சி குறைவாக இருக்கும் மாற்று மைதானங்களை தேடி வருவதாக இலங்கை கிரிக்கெட் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இலங்கையில் இது மழைப் பருவம் இல்லாதபோதும் கொழும்பில் கடந்த சில நாட்களாக கடும் மழை பொழிந்து வருவதோடு ஆர்.பிரேமதாச மைதானம் அமைந்திருக்கும் பகுதிக்கு அருகில் வெள்ள நிலையும் ஏற்பட்டது.

அத்தோடு கடந்த சனிக்கிழமை பல்லேகலவில் நடைபெற்ற இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி மழையால் கைவிடப்பட்டதும் மைதானத்தை மாற்றுவது குறித்து ஆசிய கிரிக்கெட் கௌன்சில் மற்றும் ஒளிபரப்பாளர்களான டிஸ்னி ஸ்டார் நிறுவனத்திற்கு இடையே ஆலோசனை நடத்த காரணமாகியுள்ளது.

வடகிழக்கு பருவமழை பொதுவாக ஒக்டோபர் மாதத்திலேயே உருவாகும் நிலையில் செப்டெம்பர் மாதத்தில் கொழும்பில் மழை பொழிவது வழக்கமாக நிகழாத ஒன்றாகும்.

இந்த ஆசிய கிண்ணத்தின் நான்கு சுப்பர் போர் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டி ஆர். பிரேமதாச மைதானத்தில் எதிர்வரும் செப்டெம்பர் 7 தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடத்த ஏற்பாடாகியுள்ளது. இங்கு 2015 தொடக்கம் செப்டெம்பர் மாதங்களில் ஐந்து டி20 சர்வதேச போட்டிகள் மற்றும் நான்கு ஒருநாள் சர்வதேச போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த அனைத்து போட்டிகளும் பூர்த்தி செய்யப்பட்டதோடு இரண்டு போட்டிகள் மாத்திரம் மழை காரணமாக ஓவர்கள் குறைக்கப்பட்டு நடத்தப்பட்டன.

போட்டி அமைப்பாளர்கள் இலங்கையின் வானிலை ஆய்வாளர்களுடன் எந்த அளவிற்கு ஆலோசனை நடத்தினார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும் வரும் வாரங்களில் கொழும்பில் எந்த மாதிரியான வானிலை எதிர்பார்க்கப்படுகிறது என்பது குறித்து அதிகாரிகள் பேசி இருப்பதாக தெரியவருகிறது. குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் போட்டி கைவிடப்பட்டதே அதிகாரிகளிடையே அவதானத்தை அதிகரிக்கக் காரணமாகியுள்ளது

போட்டி கொழும்பில் இருந்து மாற்றப்பட்டாலும் மாற்று மைதானம் குறித்து பிரச்சினை நிலவுகிறது. தம்புள்ளை மாற்றாக பரிந்துரைக்கப்பட்டபோதும் அங்கு ஹோட்டல் மற்றும் தங்குமிட வசதிகள் பற்றி இந்தியா திருப்தி இன்றி இருக்கும் அதேநேரம் நீண்டகால பிரச்சினையாக நீடிக்கும் மைதானத்தின் மின்விளக்குகளின் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தம்புள்ளை இலங்கையின் 'உலர் வலயத்தில்' இருப்பதோடு ஆண்டின் இந்தக் காலப் பகுதியில் கண்டி மற்றும் கொழும்பை விடவும் அங்கு குறைவான மழை வீழ்ச்சியே காணப்படுகிறது.

உலர் வலய எல்லையில் அமைந்திருக்கும் ஹம்பாந்தோட்டையும் மற்றொரு தேர்வாக உள்ளது. எனினும் மைதானம் காட்டு பகுதி ஒன்றின் விளிம்பில் அமைந்திருப்பதால் அங்கு நெருக்கமான இடத்தில் இருப்பிட வசதிகள் இல்லை. எனவே அங்கு போட்டியை மாற்றினால் ஏற்பாட்டியல் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

ஒளிபரப்பாளர்களும் எஞ்சிய போட்டிகளை இரண்டு இடங்களுக்கு பிரிப்பதற்கு தயக்கம் காட்டுகின்றனர். இதனால் இரு மைதானங்களுக்கு இடையே உபகரணங்களை எடுத்துச் செல்வது அல்லது இரண்டு வெவ்வேறு இடங்களில் ஒளிபரப்பு உட்கட்டமைப்புகளை வைத்திருக்க வேண்டி ஏற்படும்.

இந்நிலையில் எஞ்சிய சில போட்டிகள் அல்லது அனைத்து போட்டிகளும் கொழும்பில் இருந்து மாற்றப்பட்டால் ஏற்கனவே தொடரின் போட்டி அட்டவணையில் மாற்றங்கள் கொண்டுவந்திருக்கும் நிலையில் மேலும் தாக்கம் செலுத்துவதாக அமையும்.

ஆசிய கிண்ணத்தை நடத்தும் நாடாக பாகிஸ்தான் இருந்தபோதும் இந்தியா பாகிஸ்தான் செல்ல மறுத்ததை அடுத்தே தொடரை இரு நாடுகளில் நடத்த வேண்டி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### போட்டிகளை பாகிஸ்தான் கொண்டுசெல்ல பரிந்துரை



இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆசியக் கிண்ண போட்டிகளை பாகிஸ்தானுக்கு மாற்றுவது தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முகாமைத்துவ குழுத் தலைவர் சகா அஷ்ரப் பரிந்துரை ஒன்றை முன்வைத்துள்ளார்.

ஆசிய கிரிக்கெட் கௌன்சில் தலைவர் ஜெய் ஷாவுடன் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் ஒன்றின்போதே அவர் இந்த பரிந்துரையை முன்வைத்துள்ளார். இதில் தேவை ஏற்படின் இந்தியா மற்றும் பாகிஸ்தான் போட்டியை டுபாய்க்கு மாற்றவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அஷ்ரபின் இந்த பரிந்துரைக்கு பதிலளிக்கும் வகையில் நிலைமையை மதிப்பீடு செய்வதாக ஜெய் ஷா பதிலளித்துள்ளார்.

# உக்ரைனிய பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம்



உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவை அந்நாட்டு ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி பதவி நீக்கியுள்ளார்.

உக்ரைன் மீது 2022 பெப்ரவரியில் ரஷ்யா படையெடுப்பதற்கு முன்னர் இருந்து ரெஸ்னிகோவ் பாதுகாப்பு அமைச்சராக இருந்து வருகிறார். இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சின் புதிய அணுகுமுறைக்கான நேரம் வந்துவிட்டது என்று செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

புதிய பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு உக்ரைனிய அரச சொத்து நிதியத்தை நிர்வகிக்கும் ருஸ்டெம் உமெரொவ்வை ஜனாதிபதி செலன்ஸ்கி பரிந்துரைத்துள்ளார்.

அதற்கு உக்ரைன் பாராளுமன்றத்தின் ஒப்புதல் வேண்டும். அதற்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படாது என்று கூறப்படுகிறது.

உக்ரைனில் போர் வெடித்தது தொடக்கம் அதிகம் அறியப்பட்ட ஒருவராக 57 வயது ரெஸ்னிகோவ் இருந்து வந்ததோடு உக்ரைனின் மேற்கத்திய கூட்டாளிகளுடனான சந்திப்புகளில் தோன்றுபவராகவும் ஆயுத உதவிகளை பெறுவதில் முக்கியமானவராகவும் இருந்து வந்துள்ளார்.

இருப்பினும் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சில் ஊழல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகப் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. ரெஸ்னிகோவ் அவற்றை மறுத்துள்ளார்.

உக்ரைன் ரஷ்யாவின் பிடியில் உள்ள பகுதிகளை மீண்டும் தன் வசப்படுத்திக் கொள்ளப் பதிலடித் தாக்குதல்களில் இறங்கியுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# உக்ரைனின் பிரதான தானிய ஏற்றுமதி துறைமுகத்தின் மீது ரஷ்யா தாக்குதல்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவானை நேற்று (04) சந்திப்பதற்கு முன்னர் உக்ரைனின் மிகப்பெரிய தானிய ஏற்றுமதி துறைமுகங்களில் ஒன்றின் மீது ரஷ்யா ஆளில்லா வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

ஒடேசா பிராந்தியத்தில் டனுப் நிதியில் உள்ள உக்ரைனின் இரண்டு பிரதான தானிய ஏற்றுமதி வசதிகளில் ஒன்றான இஸ்மெயில் துறைமுகத்தின் குடியிருப்பாளர்களை அந்நாட்டு விமானப் படையினர் நேற்று காலையில் அப்புறப்படுத்தியுள்ளனர்.

தெற்கு பிராந்தியத்திற்கு மேலால் பறந்த 17 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக ஒடேசா ஆளுநர் ஒலே கிபர் குறிப்பிட்டபோதும் இந்தத் தாக்குதல்களில் துறைமுக உட்கட்டமைப்புகளுக்கு பரந்த அளவில் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ள உணவு பிரச்சினையை தணிக்கும் முயற்சியாக உக்ரைன் தானிய ஏற்றுமதி உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த ரஷ்யாவின் கருங்கடல் நகரான கொச்சியில் புட்டின் மற்றும் எர்துவான் சந்தித்த நிலையிலேயே இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

ஐக்கிய நாடுகள் மற்றும் துருக்கியின் மத்தியஸ்தத்திலான உக்ரைனிய தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கான உடன்படிக்கையில் இருந்து ரஷ்யா கடந்த ஜுலையில் விலகிக் கொண்டது.

அது தொடக்கம் தானிய ஏற்றுமதிக்கான உக்ரைனின் பிரதான பாதையான டனுப் நதியின் துறைமுகங்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

முன்னதாக மற்ற பிரதான டனுப் துறைமுகமான ரெனி மீது ரஷ்யா கடந்த ஞாயிறன்று (03) நடத்திய தாக்குதல்களில் துறைமுகத்தின் உட்கட்டமைப்புகளுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதோடு இருவர் காயமடைந்தனர்.

உக்ரைன் மற்றும் ரஷ்யா உலகின் பிரதான விவசாய உற்பத்தி நாடுகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.